அறிந்து நன்குமதித்தார்கள். லான்காஷியர் மாகாணத்து வர்த்தகர் ஆறு வகுப்பார் ஒருமிக்கச் சேர்ந்து, இங்கிலாந்தில் செலவாகும் பருத்தினூல் நூற்றுக் கொடுக்க 80,000-பவுன் டுக்கு அதிகாரபத்திரம் வாங்கினார்கள். ஆட்டுரோம இழை நூற்பவர்களும் அவ்வாறே செய்தார்கள். லீட்ஸ் நகரத்து மார்ஷல் வகை வர்த்தகர் (Messrs. Marshall) சணல் இழை நூற்றுவிற்க 20,000-பவுன் கொடுத்து அதிகாரபத்திரம் பெற்றார்கள். இவ்வாறே ஏழையாகிய ஹீல்மண் துரைக்கு கடைக்காலத்தில் இருந்தாற்போலத் திரவியாதி பெருகிற்று. அவர் அந்த நிறைசெல்வம் அநுபவிக்க ஆயுசுபலம் பெற்றாரில்லை. நாட்படச் சிரமப்பட்டு உழைத்த உழைப்புக் கைகூடி ஊதியம் உண்டாகத் தொடங்கவும் அவர் இறந்துபோக அவருடன் கூட்டாக்கப்பட்ட அவர் மைந்தனும் அழிந்துக் காலஞ்சென்றான்.

இத்தகைமையுள்ளோர் தம் வாழ்நாளைக் கிரயம் கட்டிக் கொடுத்தே நாகரிக அதிசயங்களைக் கண்டு நிலை நிறுத்தும் அருந்தொழில் புரிந்தனர்.

அத்தியாயம் ௩.

பெயர்பெற்ற தொழிலாளர் மூவர்—பேலிஸ்ஸி- பத்கர், வெட்ஜ்வுட்.

"மனோபலத்தின் ஓர் அம்சமாகிய பொறுமை என்பது மிக நுண்ணியது, கனம் மிக்கது, அரியது. போகம் அனைத்திற்கும் பராக்கிரமம் அனைத்திற்கும் மூலம் பொறை, பொறை இல்லாவிடில் இதயத்திற்கு இன்பம் தரும் ஆசையும் துன்பமாய்விடும்"—ஜான் ரஸ்கின் (John Ruskin.)

மட்பாண்டம் வினைதொழில் வரலாற்றில் பொறையும் கருமமுழக்கும் அணியும் பூர்த்தியாயுள்ள சிலருடைய சரித்திரத்தைக் காணலாம். அவர்களில் மிகவும் குறிக்கொள்ளத் தக்கவர்களெனத் தோன்றும் மூன்று பெயரைத் தெரிந்தெடுத்துச் சொல்வோம்:—ஒருவர் பிரான்சியராகிய பெர்னார்ட் பெலிஸ்ஸி (Bernard Palissy); மற்றொருவர் சாதியில் ஜர்மானியரான ஜொஹான் ப்ரெட்ரிக் பத்கர் (Johann Friedrich Bottgher); பின்னொருவர் அங்கிலேயராகிய ஜொஸையர் வெட்ஜ்வுட் (Josiah Wedgwood).

சாதாரணமாய் வழங்கும் விதவிதமான பாண்டம் களிமண்ணிற் செய்யும் உபாயம் பூர்வத்தார் வெகு பெயருக்குத் தெரிந்திருந்தும், பளிங்கெனத் துலங்கும் காணயமான மட்பாண்டம் வினைதொழிலோ அபூர்வமாய் வழங்கியது. ஆனாலும் முன்னாளில் எதிரஸ்கர் என்பவர்கள் அவ்வகைப் பாண்டம் வினையப் பயின்றிருந்தார்கள். அவர்கள் கையால் வினைத்த பாண்டங்கள் சிலவற்றைப் பூர்வவஸ்துசேயசாலைகளில் இன்றளவும் காணலாம். பின்னிட்டு நெடுநாள்வரையில் அவ்வித்தை கைகடந்துபோய் இப்பொழுது கொஞ்சக் காலத்திற்குமுன்னேதான் மீளவும் அகப்பட்டது. பூர்வகாலத்தில் சிரஸ்கர் செய்த பாண்டம் விலையேறப்பெற்றது. ஆகஸ்தஸ் இருந்த காலத்தில் உண்கலத்திற்கு விலை விகிதம் இருத்தல் ஒன்றுக்கு ஒரு இராத்தல் தங்கம். இந்தத் தொழிலை மூர் ஜாதியார் மறந்திடாமல் அனுசரித்துக் கொண்டுவந்ததாய்க் காண்கிறது. 1115-ம் ஆண்டு மெஜார்கா தீவைப் பைஸர் பிடித்துக்கொண்டபொழுது, அந்த மூர் ஜாதியாருக்குள் இத்தொழிற்பயிற்சி இருந்தது. சூறைசெய்து கொண்டுபோன பொருள்வகையில் சில விதவிதமான மட்பாண்டங்களைப் பைஸர் தாம் பெற்ற ஜயத்தை என்றென்றைக்கும் சிந்தையில் நிறுத்தும் சின்னங்களாகப் பைஸாவில் உள்ள சில பூர்வதேவாலய மதில்களுக்குள் வைத்துக்

கட்டினார்கள். அவைகளை அம்மதில்களில் நாளதுவரையில் காணலாம். அதன்பின் இருநூறு வருஷம் சென்று இத்தாலியர் பளிங்கு ஒப்பத் துலங்கும் அவ்வகை மட்பாண்டம் செய்யத் தொடங்கி, ஓர் ஜாதியார் அவ்வினைதொழில் செய்த ஸ்தானமாகிய மெஜோர்கா தீவைக் குறிப்பிக்கும்படி நாம் வனைந்த பாண்டத்திற்கு மெஜூலிகா எனப் பெயர் வழங்கினார்கள்.

இத்தாலியாவில் பளிங்குமினுக்குள்ள மட்பாண்டம் வனையும் தொழிலை எல்லாரும் மறந்துவிட்டபின் மீளவும் கண்டறிந்து பயின்ற புளோரென்ஸ் நகரத்துச் சித்திர ஓடாவியாகிய லூக்கா டெல்லா ரப்பியா (Luca della Robbia) என்பவன் பகல் முப்பது நாழிகையும் கைக்கொண்ட செதுக்குளி கைவிடாது உழைத்து, இரவில் வெகு நாழிகைநேரம் சித்திரம் எழுதிப் பழகிக்கொண்டுவந்த இணையற்ற உற்பாதபிண்டம் என்று வஸாரி (Vasuri) எழுதுகிறார். அவன் சித்திரம் எழுதும் வித்தையை மிகு பக்தி சிரத்தையோடு கற்றுக்கொண்டுவந்து ராத்திரிகாலத்தில் நாழிகையேறச் சித்திரம் எழுதிக்கொண்டிருக்கும்பொழுது, பாதம் இரண்டும் கடுங்குளிரில் விறைக்காவண்ணம் ஒரு கூடையில் மரம் இழைத்த செதுக்கலை சேகரித்து அதில் பாதத்தை வைத்துச் சூடேற்றிக்கொண்டு தன் வேலையில் கண்ணாயிருப்பான். பின்னும் வஸாரி சொல்லியது:— "இதைத் தொட்டு எனக்கு இறையளவும் ஆச்சரியம் இல்லை. வெப்பம்-குளிர்-பசி-தாகமுதலிய வாதைகளை இளமையிலேயே தாங்கி வழக்கப்படாதவனை எந்தத் தொழிலிலாவது தேறி நிபுணனென்று பெயரெடுக்கக்கூடாதே, நானாவித போகங்களும் குறைவற அனுபவித்துச் சுகித்திருந்துகொண்டு மேம்பாடு அடைவோமென்று வியர்த்தமாய் எண்ணுவோர் ஏமாறிப்போவார். எந்தத் துறையிலேனும் வரவரத் தேறித்தெளிந்து பிரக்யாதரானோர் ஆரோக்கியமாய்ப்

படுத்துத் தூங்குகிறவர்களல்ல, துயிலொழிந்து விழித்திருந்து எப்பொழுதும் ஓயாதுழைப்பவர்களே.”

வெஜ்வூட் கருத்தாய் குயவனது கைத்தொழில் செய்தும், அவன் சிலையிற் சித்திரம் செய்து விற்றுத் தேடின பணம் குடும்ப சம்ரக்ஷணைக்குப் பற்றவில்லை. அப்படி இருந்தும் அவன் மனம் சலிக்கவில்லை. அவன் அதுவரையிற் சித்திரம் செதுக்கியது யாற்கல்லில். யாற்கல் மிக வைரமுள்ளது - விலை உயர்ந்தது. சற்று இளகி விலை எளிதாயுள்ள ஏதாயினும் ஒரு பொருளில் பிரதிமைகள் அச்சுகள் செய்து விற்றால் வருமானம் செலவிற்குக் கட்டுமென்று அவன் சிந்தையிற் பட்டது. அதைப்பற்றியே அவன் களிமண்ணில் உருச்செய்து அதை சீடித்து உறுதி குன்றாதிருக்கும்படி பூச்சிட்டுச் சுடும் வகை ஏதென்று கண்டுணரப் பரிசோதனை செய்துபார்த்தான். பலவாறு பரிசோதனை செய்தபின் பூச்சிடும் பதார்த்தம் இன்னதென்று அவனுக்குத் தெரிய வந்தது. அதைக் களிமண்ணிற் பூசிச் சூளையில் முதிர வேகவைக்க அது உரத்துப் பளிங்குபோல மிளிர்ந்தது. பின்விட்டு அதற்கு வர்ணம் தீரும் பக்குவத்தைக் கண்டறிந்தான். வர்ணம் தீரவே அது கண்ணுக்கு மிகவும் சிறப்பாகத் தோன்றிற்று.

வெஜ்வூட் செய்த சாமான்களான பாண்டங்களின் பிரதாபம் ஐரோப்பா எங்கும் எட்டி அப்பாண்டங்கள் வெகு தூரம் போய்ச்சேர்ந்தன. பிரான்சுக்கும் ஸ்பானியாவிற்கும் திரளாய் அனுப்பப்பட்டு அங்குள்ளவர்கள் அவைகளைப் பாராட்டி விலை ஏறக்கொடுத்து வாங்கினார்கள். அக்காலத்தில் பிரான்சிய குலாலர் வனைந்து விற்ற பாண்டவகை புகழ்பெற்றமான மட்டிச்சாமானும் வேறு சிறு மட்கலங்களுமே. பலிஸி (Palissy) யின் காலமானவும் இருந்த சீர் சற்றேறக்குறைய இதே. அவன் தீராப் பெருஞ்சங்கடங்களைக் கண்டும் சிறிதேனும் இளைக்காமல் உழைத்து உழன்று ஒருவாறு

அச்சங்கடங்களைத் தவிர்த்த சத்தவீரன். ஆகவே, பல வித அரிய குண கிருத்தியங்களாற் சிறந்த அவனுடைய வரலாறுகள் எல்லாம் அபூர்வமான கற்பிதக்கதைகளாகத் தோன்றும்.

பெர்னார்ட் பலிஸ்ஸி (Bernard Palissy) பிறந்தது பிரான்ஸ்தேசத்தின் தென்பாகத்து ஏஜென் அத்தியக்ஷ கோவிற்பற்றில் 1510-ம் வருஷமென்று உத்தேசம். அவர் தகப்பன் கண்ணாடிவேலை செய்தவர்போலும். ஆதியில் அவர் பயின்ற வேலையும் அதே. அவர் தாய்தந்தையர் சிறிது காலமாயினும் அவரைப் பள்ளிக்குவைத்து எழுத வாசிக்கப் பயிற்றுவிக்க இராவாகயின்றிக் கடையழிந்த ஏழைகள். “யாவரும் எளிதில் வாசிக்கும்படி திறந்துவைத்திருக்கின்ற வானமும் பூமியும் தவிர வேறு புஸ்தகம் எனக்குக் கிடையாது” என அவர் பிற்காலத்தில் சொன்னார். ஆனாலும், அவர் கண்ணாடிக்கு வர்ணம் தீரும் முறையை முயற்சியாய்க் கற்றிருந்து அப்பால் சித்திரம் எழுதப் பயின்று அதன்மேல் எழுத வாசிக்கப் பழகினார்.

அவருக்கு முன்பின் பதினெட்டுப் பருவம் ஆக, கண்ணாடிவியாபாரம் இளைத்துப்போனதுபற்றி அவர் தந்தையின் வீட்டை விட்டுப் புறப்பட்டு முதுகில் அடைப்பை சுமந்துகொண்டு தமக்கு இடம் தேடி உலகப்பரப்பில் உலாவித் திரியத் தலைப்பட்டார். ஆரம்பத்தில் அவர் காஸ்கனிக்கு நேர்முகமாய்ப் போய் வழியில் கண்ணாடிவேலை அகப்படும் இடங்களில் தங்கியிருந்து அதைச் செய்வதும் அப்போதப்போது சிறிது சிரம நிலம் அளப்பதுமாய் இருந்தார். பின்பு அவர் வடக்குமுகமாய்ப் பிரயாணம் செய்து பிரான்சு - ப்ளாண்டர்ஸ் - ஜர்மனியாவின் தெற்கு இராசிகளில் வெவ்வேறு இடங்களில் [illegible] தங்கிப் போனார்.

பலிஸ்ஸி மேற்சொல்லியவாறு ஏறத்தாழப் பத்து வருஷம் பிரயாணம் செய்து அதன்மேல் மணம்புரிந்து தே

சாந்தரம் போவதை அம்மட்டில நிறுத்திவிட்டு, கண்ணா டிக்கு வர்ணம் தீர்த்தும் நிலம் அளந்தும் பிழைக்க சாரொந் தியின் தென்பாகத்தில் ஸெர்திஸ் எனும் சிற்றூரில் நிலைக் குடியாயிருந்தார். அங்கிருக்கையில் அவருக்குப் மக்கட் பேறு உண்டாய் சமுசாரக் கவலையும் செலவும் பெருகி எவ்வளவோ பாடுபட்டும் வரவு செலவிற்குக் கட்டவில்லை. பின்னும் அதிகம் மெய்வருத்தி உழைக்காமல் தீராதெனத் தோன்றிற்று. கண்ணாடிக்குச் சாயந் தீரும் வேலை பிழை க்க உதவுமென்று நம்பியிருக்க இடம் இல்லை. அவ்வேலை யில் நாய்படாத பாடுபட்டு மெய்வருந்துவதை விட்டு மற்றே தாயினும் நயம் பெற முயற்சி செய்து பிழைக்கத் தம்மால் ஆகுமென்று அவர் நினைத்தார்போலும். ஆனதுலேயே மட்பாண்டங்களுக்கு வர்ணம் பூசித் தருக்கிடும் தொழிலில் அவர் கருத்துச் சென்றது. முன் பயின்ற தொழிற்கு இன மான தொழிலெனினும் இவ்வேலை அவருக்கு எள்ளத்தனை யும் தெரியாது. மட்பாண்டம் வனைந்து சுட்டதை அதற்கு முன் அவர் ஒருபொழுதும் கண்டதில்லை. இப்பொழுது அவருக்குக் கைத்துணை எவரும் இல்லை. தாமாகவே இத் தொழில் முறையைக் கண்டுபிடித்து பயின்றாற் பயிலலாகு மே தவிர வேறு வகை இல்லை. ஆனாலும் இதை அவர் நிர் வகிக்கத்தக்க உற்ப[illegible]தான். அவருக்குத் தொ ழிலில் ஆசை நிறைந்து தொழிலில் பயிலும் ஆவா மிருந்து கரு மமுடிக்கும் துணிவு கைகூடாது. இறைக்க இறைக்க வற் றாத நீருற்றுப்போலப் பொறுமை என்பது சுரந்தவண்ண மாயிருந்தது.

லூக்கா டெல்லா ரப்பியாவின் கைவேலையெனத் தோன் றும் இத்தாலியாவில் வினோத சிறந்த பாத்திரம் ஒன்றை அவர் ஒரு நாள் கண்டதனுலேயே இப்புதனத் தொழிலில் அவருக்குச் சிந்தனை ஓடிற்று. அதனமாய் ஒரு சிறிய பா த்திரத்தைக் காண்பது அதிசயமல்லவே. சாமானிய புத்தி யுள்ளவர்கள் கண்ணெதிரில் காணும்பொழுதன்றி, கண்ட

பின் அதைக்குறித்து நினையார்களே. இரண்டொரு மாசம் முந்திக் காணச் சம்பவித்தால், பலிஸ்ஸி தானும் அதை நினையார். அப்பொழுது அவர் அதைக் கூர்ந்து நினைத்துக் காலவிசேஷத்தால் அதனமாய் ஏதாயினும் ஒரு தொழில் செய்து பிழைக்கவேண்டுமென்றிருக்கையில் அவர் அச்சிறு கலத்தைக் கண்டார், காணவும் அதைப்போலத் தானும் செய்யவேண்டுமென்னும் ஆசை பஞ்சிற் பறக்கும் நெருப்புப்பொறிபோல, அவர் மனதிற் பற்றியெரிந்தது. அப்பாத்திரத்தைக் கண்டு அவர் மனம் நிலைகுலைந்து தடுமாறியது. அப்பாண்டத்திற்குப் பூசித் தளுக்கிட்ட திரவியத்தைக் கண்டறியும் * கடைப்பிடி ஆசை ஏறும் பேய்போல் அன்றுதொட்டு அவர் நெஞ்சிற் குடிகொண்டது. அவர் பிரமசாரியாயிருந்தாரானால், அவ்வதிசயத்தைத் தேடிக் கண்டறிய இத்தாலியா தேசத்திற்குப் பிரயாணப்படுவாரோ-ஆனாலும், சமுசார சாகரத்தில் இறங்கித் தத்தளித்த அவர் என்ன செய்வார். பெண்சாதி கால்கட்டு, பிள்ளை வாய்க்கட்டு. இந்தப் பந்தத்தை எளிதில் அறுத்து அவர்களை விட்டுப் போகக் கூடாததுபற்றி, அவர் மனைவிமக்களை விட்டுப் பிரியாதிருந்து, மட்பாண்டம் செய்து தளுக்கிடும் வகையைக் கண்டறியும் ஆசை பெருகப்பெருக இடையில் கண் தெரியாதவர் போலத் தடவினர்.

ஆரம்பத்தில் பூசப்படும் திரவியம் ஏதென்று அவருக்கு உறுதி தெரியாது உத்தேசம் பிடித்து ஒன்றன்பின் ஒன்றாய்ப் பல திரவியங்களைப் பலவாறு பரிசோதனை செய்துபார்த்தார், பளிங்குத்தளுக்கு உண்டாகும்படி அவர் உத்தேசித்த திரவியம் அனைத்தையும் பொடிசெய்து வைத்துக் குழைத்துச் சாமானிய மட்கலங்களைக் கிரயம் கொடுத்து வாங்கி, இச்சிறுச்சிறு துண்டாய் உடைத்து அந்தச் சேர்வையைப் பூசிச் சூளைவைத்துச் சுட்டுப்பார்த்தார். இப்படி ஒன்றன்

---

* கடைப்பிடி—firm resolve.

பின் ஒன்றாக வெகு விதச் சேர்வை பூசிப் பலவாறு செய்த பரிசோதனை ஒன்றும் பயன்படவில்லை. கிரயம் கொடுத்துப் பாண்டம் வாங்கி வீணுக்கு உடைத்துப் போக்கடித்ததும், விறகும், மருந்தும், காலமும், உழைப்பும் பாழில செலவழித்ததுமொழிய மற்றொரு பயனும் இல்லை. இவ்வண்ணம் பிள்ளைகளுடைய வாய்ச்சோற்றையும் இடுப்புத் துணியையும் கொள்ளை கொடுப்பதனிற் பயன் சிறிதும் வெளிப்படையாகத் தோன்றாத பரிசோதனைகளின் அருமையெருமை பெண்பாலார்க்குக் கொஞ்சத்திலும் விளங்கி மனம் ஒப்பாது. பலிஸ்ஸியுடைய மனைவி தன் கணவருக்கு முறைமைப்படி எவ்விதத்திலும் ஏற்க நடந்து செய்கடன் தவறாது முடித்தும் அவர் பணத்திற்குப் பாண்டம் வாங்கி வாங்கி வியர்த்தமாய் உடைத்து எறிவதைக் கண்டு கண் சலித்து, இனிக் கிரயம் கொடுத்துப் பாண்டம் வாங்கவேண்டாமென்று தடுக்க அவள் தடையை அவர் கேட்கவில்லை. பளிங்குத்தளுக்கின் இரகசியத்தைக் கண்டறியாது விடுவதில்லையென்று கட்டுறுதியாய்ச் சங்கற்பித்திருந்த அவரை ஒரு பெண் தன் சொல்லாற் றிருப்பமாட்டுவாளா — அவர் மன ஓர்ப்பைத் தளர்விக்கக்கூடாதென்று கண்டு அவள் தடை சொல்வதை அவ்வளவில் நிறுத்திவிட்டாள்.

அன்றுதொட்டுக் காலம் ஏறக்குறைய வெகு மாசம் வருஷம் அவர் பரிசோதனை செய்துகொண்டிருந்தார். ஆதியில் அந்தரங்கத்தில் வைத்த சூளை அநித்தியமாய்ப்போக, அதன் மேல் அவர் வீட்டுக்குப் புறத்தில் யாவரும் காணப் பகிரங்கமாய் மற்றொரு சூளை வைத்தார். அதில் அவர் எரித்துத் தீர்த்த விறகு, பாழாய்ப் போக்கடித்த * திரவியம், உடைத்துக்கெடுத்த பாண்டம், வீணில் கழித்த காலம் மிகுதி. இவ்வாறு கையில் மடியில் உள்ள பொருள் எல்லாம் செலவழித்துப்போக, அவரையும் அவர் குடும்பத்தையும் தரித்

* திரவியம்—பொருள்.

திரம் முறைத்துப் பார்த்தது. இதைச் சுட்டி அவர் "இவ்வாறு அபுத்திபூர்வமாய்ச் சில வருஷ காலத்தைப் போக்கி, எடுத்த கருமம் எவ்விதத்திலும் முடியாததை எண்ணி எண்ணித் துக்கசாகரத்தில் மூழ்கி நெட்டுயிர்த்து எப்பொழுதும் அழுத கண்ணும் சிந்தியமுகமுமாயிருந்தேன்" என மொழிந்தார். பரீக்ஷைசெய்து ஒழிந்திருக்கையில், அவர் அப்போதைப்போது முன் பயின்ற இரண்டொரு தொழிலை அடுத்து ஒருவாறு ஜீவனம் பண்ணுவார். அவர் பயின்ற தொழில் கண்ணுடிக்கு வர்ணம் கொடுத்தல், சித்திரம் எழுதல், நிலம் அளத்தல். இத்தொழில்களைச் செய்து தேடிய பணம் சோறுக்கும் செலவிற்கும் பாதிக்குப் பாதியும் காணாது. இப்படித் தடுக்கெட்டுத் தடுமாறும் காலத்தில் விறகு விலை உயர்ந்து அருமைப்பொருளாயிற்று. பரீக்ஷைக்கு அப்பால் வேண்டுமளவிற்கு விறகு வாங்கிச் சூளை வைக்க அவரால் முடியவில்லை. ஆனால் அவர் முன்னிலும் அதிகம் ஓட்டாங்குச்சு வாங்கி மூன்றூறு நாலூறு துண்டாகத் துண்டித்துக் கட்டுமருந்து பூசி காலை மைல் தூரம் எடுத்துக்கொண்டுபோய்ச் சாதாரணமாய்த் தட்டோடு சுடும் சூளையில் வைத்துச் சுடத்தலைப்பட்டார். நன்றாய் வெந்தபின் எடுபித்துப் பார்த்தார். செய்த பரீக்ஷை ஒன்றும் வாய்க்கவில்லை. இது கண்டு அவர் மனம் கலங்கிற்று. ஏமாறியும், அவர் இளைத்துப் பின்னிடவில்லை. அவ்விடத்திலேயே அவர் இதுவரையில் போனதெல்லாம் போகட்டும் - இனிப் புதிதாகப் பரீக்ஷைசெய்யத் தொடங்குவோம் எனத் தீர்மானித்தார்.

சிறிது காலம் பரீக்ஷையை நிறுத்திவிட்டு நிலம் அளக்கச் சற்றுத் தூரம் போகும்படி நேரிட்டது. நிலவரி வாங்கும்பொருட்டு, சர்க்கார் இட்டபடி, லேக்கில் எனும் நகரத்திற்கு அயலில் உள்ள உப்பளம் அளந்து பரப்பு அறியவேண்டியிருந்தது அந்த வேலை பலிஸிக்குப் படிக்

தது. உப்பளம் அளக்கு பரப்புக் குறித்துப் படம் எழுதி அனுப்ப அவருக்குத் திட்டம் பிறந்தது. அவ்வேலை தொடங்கி முடியச் சிறிது காலம் சென்றது. அவர் தகுதியான சம்பளம் பெற்றார். வேலை முடித்துக் கொடுத்தபின், அவ ஸிக்குத் தாமதிக்காமல் முன் உள்ளதற்குப் பின்னும் ஒரு பங்கு அதிக சிரத்தையுடன் அவர் மட்பாண்டத்திற்குப் பளிங்குத் தனுக்கிடும் உபாயம் பரிசோதித்தறியத் தொடங்கினார். முப்பத்தாறு புது மட்கலம் வாங்கி உடைத்து உடைந்த கலவோடு அத்தனையிலும் எத்தனையோ கூட்டுமருந்து பூசி, அயலில் உள்ள கண்ணாடிச் சூளையில் சுடவைத்துப் பார்த்தார். கண்ட சித்தியால் அவர் சாதிய கருமம் வாய்க்குமெனச் சிறிது நம்பிக்கைக்கு இடம் உண்டாயிற்று. கண்ணாடிச் சூளையின் அதிக அனலில் கூட்டுத்திரவியங்கள் சில உருகியிருந்தன. [illegible] அக்கலவோடுகளில் எதிலாவது வெண் தனுக்கு விழுந்திருக்கிறதாவென்று மிகு விழிப்புடன் பார்த்தார். காணவில்லை.

பின்னும் இரண்டு வருஷகாலம் பரிசோதனை செய்து கொண்டிருந்தும், அவர் மனதிற்கு இனிய சித்தி சிறிதும் இல்லை. உப்பளம் அளக்க வரப்பெற்ற சம்பளம் முக்காலே மூன்று வீசம் செலவழிந்துபோகவும், அவர் மீண்டும் தரித்திராகி வருந்தினார். வருந்தியும், கையில் மடியில் அட்டுக்குக் கட்டோடே வழி இல்லாதுபோகுமுன் பின்னும் ஒரு முறை பெருமுயற்சி செய்துபார்க்க நிர்ணயித்தார். இம்முறை அவர் [illegible] வாங்கி உடைத்த மட்கலம் அனைத்தும் முந்நூற்றுக்கு அதிகமான கலவோடுகளில் கூட்டுமருந்து பூசிக் கண்ணாடிச் சூளைக்கு அனுப்பினார்; அனுப்பிவிட்டு, உண்டாகும் சித்தி அசித்தியைக் கண்ணாரக் காணும்படி தாமும் சூளைக்குப்போய் நாலு மணி நேரம் பதைப்பற்றுப் பார்த்துக்கொண்டிருந்து அப்பால் சூளையைப் பிரித்துப் பார்த்தார். முந்நூறு கலவோடுகளில் ஒன்றில் பூசிய சேர்வைமாத்திரம் உருகியிருந்து அதை

எடுத்து ஆறவைத்தார். வெந்து உருகிய சேர்வை சூடு ஆறிக் கல்லாய் இறுக இறுக வெண்ணிறம் பெயர்ந்து தனக்கு உண்டாயிற்று—அந்த ஓட்டில் பளிங்கொளிபோலும் மினுக்குப் படிந்திருந்தது! அதன் சிறப்பிற்கு "ஒப்பு - உயர்வு இல்லை!" என்று பலிஸ்ஸி எழுதியிருக்கிறார். இத்தனை காலம் காத்துக்காத்து அலுத்துப்போயிருந்த அவர் கண்ணுக்கு அது அருஞ்சிறப்புள்ளதாகத் தானே இருக்கும். அவர் ஆனந்தாவேசத்தால் தம்மை மறந்து அவ்வதிசயத்தை எடுத்துக்கொண்டு வீட்டுக்கு விரைந்தோடிப்போய்த் தமது பாரியாளுக்குக் காட்டினார். அவ்வேளையில் தமது ஸ்வரூபம் மாறியதாகத் தோன்றியதென்று அவரே சொன்னார். ஆனாலும் அவர் நாட்டம்வைத்து ஓடிய பந்தயம் இன்னம் அகப்படவில்லையே, அவர் தாம் கெலித்ததற்கு நிசம் என்ன. அறுதியிற் செய்த பிரயத்தனம் ஒருவாறு பலித்தது. பலிக்கவும், இதம் கண்ட அவர் மனம் தேறிப் பின்னும் எத்தனையோ பரீக்ஷை செய்தார் - செய்த பரீக்ஷை அத்தனையும் சிதறிப்போயின.

தாம் ஊகித்துச் செய்யத் தொடங்கிய புதுமை இனி விரைவிற் கைகூடுமென்று அவர் மனம் தெளிந்து, அதை அந்தரங்கத்தில் நிறைவேற்றும்படி தமது வீட்டுக்கு அயலில் கண்ணாடிச்சூளை ஒன்று கட்ட நிர்ணயித்து எவர் துணையுமின்றித் தாமாக வயலிற் செங்கல் அறுத்து உலர்த்தித் தோள் வலிக்கச் சுமந்துகொண்டுபோய்ச் சூளைக்கட்ட வேலை தொடங்கினார். கொல்லற்றுக்காரன் சிற்றாள் முதலிய வெவ்வேறு தொழில் செய்வோர்க்குரிய வேலை எல்லாம் அவர் ஒருவர் கையால் நடந்தேறின. இவ்வேலை முடிந்து உபயோகத்திற்கு வரப் பின்னும் ஏழு எட்டு மாசம் சென்றது. இதன் இடையில் தனக்கிட்ட எத்தனமாக பலிஸ்ஸி களிமண்ணில் சில பாண்டம் வனைந்து வைத்திருந்தார். முதலில் சூளையில் அடுக்கிவைத்து வெந்தபின் பாண்டங்களைப் பிரி

த்துத் தளுக்குச்சேர்வை பூசி முக்கியமான * குகைப்பரீக்ஷை செய்யும்படி மீளவும் சூளையில் வைத்தார். அவர் கைப்பணம் வரவரச் செலவழிந்துபோயிற்று. ஆனாலும் அவர் அஜாக்கிரதையாயிருக்கவில்லை. அறுதியிற் செய்யும் மஹா பரீக்ஷைக்கு விறகு திரளாய்த் தேடி க்ஷேமித்துவைத்துப்போதுமென்று அவர் எண்ணியிட்டு எல்லாம் சித்தமானபின் சூளைக்கு நெருப்பு வைத்தார். வரவர நெருப்புப் பற்றி வளர்ந்தது. பகல் முழுதும் அவர் சூளைப்பக்கத்தில் உட்கார்ந்திருந்து எரிய எரிய விறகிட்டுக்கொண்டுவந்தார். இரா முப்பது நாழிகையும் விழித்திருந்து அதேபிரகாரம் செய்தார். தளுக்குச்சேர்வையோ உருகவில்லை — பொழுதுமோ விடிந்தது. வீட்டில் உள்ள மிதமான காலைப்போஜனத்திற் சிறிதை அவர் மனைவி அவருக்குக் கொண்டுபோனாள். சூளையின் அண்டை உட்கார்ந்து எரிய எரிய விறகிட்டுக்கொண்டிருந்த அவர் சாப்பாட்டுக்கு எழுந்துபோக வாய்க்காதே, பின்னும் ஒரு தினம் சென்றது. தளுக்குச்சேர்வை உருகவில்லை. பொழுதுபட்டு மறு ராத்திரி முப்பது நாழிகையும் கழிந்தது. இப்படி இரண்டு பகல் இரண்டு ராத்திரி நெருப்பு இடைவிடாமல் எரிந்தவண்ணமாயிருந்தும், பாண்டங்களிற் பூசிய தளுக்குச்சேர்வை உருகவேயில்லை. உதிரம் வற்றி முகம் வாடி உடல் மெலிந்து தலைமயிர் வளர்ந்து சடைபற்றி ஊண் உறக்கம் அற்றுத் தம்மை மறந்திருந்த பலிஸ்ஸி சேர்வை உருகும் சமயம் பார்த்துக்கொண்டு சூளையின் அண்டை இருந்த இருப்பை விட்டு எழுந்திருக்கவேயில்லை. கருமம் சிதறியும் அவர் தைரியமோ சிதையவில்லை. கருமம் வாய்க்கவில்லையென்று காலம் நிற்குமா. சரியாய் ஆறு பகல் ஆறு இரவு சென்றன. இத்தனை காலமும் அசலசித்தராகிய பலிஸ்ஸி விழித்திருந்து உழைத்து, முடியாதெனத் தோன்றியதை முடிவிக்க மல்லுக்கட்டிக்கொண்டிருந்தார். மருந்தோ உருகவில்லை.

* குகைப்பரீக்ஷை—Crucial experiment.

தனுக்குச்சேர்வைத் திரவியங்களில் ஏதும் குறைகுற்றம் இருந்தாலும் இருக்குமென்றும், ஒருவேளை அதை உருக்கப் பின்னும் ஏதாயினும் சேர்க்கவேண்டுமென்றும் அவர் சிந்தையில் தட்டிற்று; ஆகவே, அவர் வேறு திரவியங்களை இடித்துக் கலந்து நூதன பரீக்ஷைக்கு எத்தனித்தார். இவ்வெத்தனத்தில் பின்னும் இரண்டு மூன்று வாரம் போயின; ஆனாலும், புதுப்பாண்டம் வாங்க வகை என்ன? முதற் பரீக்ஷைக்கு அவர் தமது கையால் வனைந்த பாண்டங்கள் சூளையில் வெந்து வெந்து நைந்து பழுதுற்றிருந்ததனால் மறு பரீக்ஷைக்கு உதவா. இருந்த ரொக்கம் எல்லாம் செலவாய்ப்போயிற்று. கடன் வாங்கினால் வாங்கலாம். அவர் தமது கைப்பொருளை வியர்த்தமான பரீக்ஷைகளில் இறைத்துச் சிதைக்கும் பேயனென்று அவர் மனைவியும் அயலாரும் மாத்திரம் எண்ணியிருந்தும், அவர் நாணயம் கெட்டுப்போகாதிருந்ததனால், கருமசித்திக்குக் குந்தகமின்றி வேண்டும் தொகை விரைவிற் கிட்டிற்று. விறகும் பாண்டமும் வாங்கப் போதுமட்டும் ரொக்கம் இஷ்டர் ஒருவர் கடனாய்க் கொடுத்துதவ அவர் அதை வாங்கி மறு பரீக்ஷை தொடங்கினார். நூதனமாகச் செய்த தனுக்குச்சேர்வை பூசிப் புதுப்பாண்டங்கள் சூளையில் அடுக்கிவைத்து நெருப்பு மூட்டப்பட்டது.

இப்பொழுது தொடங்கிய பரீக்ஷையே வாய்த்தாலும் வாய்க்கட்டும், போனாலும் போகட்டும் என்று அவர் செய்த கடைசிப்பரீக்ஷையில் நெருப்புப் பற்றிப் பக்குப் பக்கென்றெரிந்தது, சூடு வரவர வளர்ந்து அதிகரித்தது. தனுக்குச்சேர்வையோ உருகவில்லை. விறகு கொஞ்சம் குறைய எல்லாம் எரிந்துபோயிற்று. அப்பால் நிறுத்திவிடாமல் எரித்துக்கொண்டுவர விறகுக்கு வழி என்ன? தோட்டத்தைச் சுற்றிக் கிராதியில் இட்டிருந்தது. அந்தக் கிராதிமரம் எரித்தால் எரியும். பரீக்ஷையை முடிவு காணுமுன் நிறுத்திவிட அவ

ருக்குப் பிரியமே இல்லை. கிராதி போனாற் போகட்டுமென்று பிரித்துச் சூளையில் வைத்து எரித்தார். கிராதிமரம் எல்லாம் எரிந்துபோயின. எரிந்தும் சேர்வை உருகவில்லை. கிராதியும் போய்விட்டது. கருமமும் சிதறியது. சூடு ஆறவிடாமல் பின்னும் பத்து நிமிஷம் எரித்தால் சேர்வை உருகும். என்ன கஷ்டம் வரினும் அதைப் பாராட்டாமல் விறகு தேடி எரிக்கத்தான் வேண்டும். வீட்டில் நாற்காலி பீடமுதலிய தட்டுமுட்டுகளும் புத்தகத் தட்டுகளு மாத்திரம் மிஞ்சியிருந்தன. வீட்டுக்குள் ஏதோ நெறுநெறென்று ஒடிந்த சத்தம் சடுதியில் கேட்டது. பலிஸ்ஸிக்கு அறிவு கெட்டுப் பைத்தியம் வந்ததென்று அவர் மனைவியும் பிள்ளைகளும் வீரிட்டழ, அவர் பீடங்களைத் தூக்கி அடித்துடைத்துச் சூளையில் இட்டு எரித்தார். மருந்து உருகவில்லை! அப்பால் மிஞ்சியிருந்தது புஸ்தகத்தட்டு — அதையும் அவர் பெயர்த்து உடைத்துக் கொண்டுபோய் எரிக்க, அவர் மனைவியும் பிள்ளைகளும் அழுதழுது வெளிப்பட்டு அந்நகரவீதிகளில் பித்தம் கொண்டவர்கள்போல ஓடித்திரிந்து, பலிஸ்ஸி உன்மத்தராகி, வீட்டுத்தட்டுகளை அடித்துடைத்துச் சூளையில் வைத்தெரிக்கிறாரென்று கூச்சலிட்டார்கள்.

சரியாய் ஒரு மாசவளவாயில் அவர் தரித்த அங்கி களையவில்லை — உண்டியும் இல்லை உறக்கமும் இல்லை—கவலை பெருக ஓயாமல் மெய்வருந்தி உழைத்து மெலிந்துபோனார். கடனில் முழுகித் தட்டு வகையின்றித் தத்தளித்தார். ஆனாலும் என்ன, அவர் நாடிய பொருள் கைகூடியது. அவர் ஆவலோடு அறிய விரும்பின அந்தரங்கம் அறியப்பெற்றார். விறகு எல்லாம் எரிந்து தீரும் சமயத்தில் சூடேறி முதிர வேகவும் தளுக்குச்சேர்வை உருகியது. அவர் தளுக்குச்சேர்வை பூசிவைத்த பாண்டம் வீட்டில் சாதாரணமாய் வைத்துவழங்கும் உளதாவனைச் சாடி. சூடு ஆறியபின் அச்சாடிகளை எடுத்துப் பார்த்தார். அவற்றின் புறம் பளிங்குபோல மினு

கிடைப்பது. இந்தப் பெரும்பேற்றைப் பிரத்தியக்ஷமாய்க் கண்டபொழுது அவர் பட்ட நிந்தை கேட்ட திட்டு பழிச்சொல் இவை ஒன்றும் பொருளாய்த் தோன்றவில்லை. இனித் தமக்கு யோகதசை பெயரும்பொழுது தாம் கண்ட அரிய வித்தையைப் பிரயோகித்துச் சுகம் பெறலாமென்று அவர் ஆறித் தேறியிருந்தார்.

அப்பால் பலிஸ்ஸி குயவன் ஒருவனைச் சம்பளத்திற்கு அமர்த்தி மாதிரி கற்பித்து அம்மாதிரியாக மட்கலம் வனைவித்துத் தனக்கிடும்பொருட்டு தாமும் களிமண்ணிற் சிறு பதக்கங்கள் செய்தார். இப்பாண்டமுதலியவைகளைப் பணிக்காய்ச் செய்து விற்குந்தனையும் அவருக்கும் குடும்பத்திற்கும் சம்ரக்ஷணைக்கு வழி என்ன! ஸேந்தீஸ் நகரத்தில் பலிஸ்ஸியை நாட்பட அறிந்த சித்திரக்காரன் ஒருவன் இருந்தான். அவர் வெகு பணத்தை ஊதியமற்ற பரீக்ஷைகளில் வியர்த்தமாய் விரயம்செய்ததை அவன் அறிவான். அவர் புத்திமானல்லவென்று அவன் அபிப்பிராயத்திற் பட்டிருந்தாலும் இருக்குமாயினும் அவர் நெறி விலகாத ஞானியென்று பூர்த்தியாய் நம்பியிருந்தான். அது அவர் அதிர்ஷ்டந்தான். அவ்வூரில் அவருக்கு அனுகூலி வேறு இல்லை. அந்தப் புண்ணியவான் ஆறு மாசகாலம் அவர் விசாரமற்றுத் தொழில் செய்துகொண்டுவர, அவருக்கு உண்ண ஆகாரமும் இருக்க வீடும் கொடுத்துதவச் சம்மதித்தான். பாண்டம் வனைய வைத்துக்கொண்ட குயவனுக்குப் பொருந்தினபடி சம்பளம் கொடுக்கவோ அவரால் மாளவில்லை. வீடு வெறிதாயிருந்தது. தட்டுமுட்டுகளை உடைத்துச் சூளையில் வைத்து எரித்திட்டது அறிவோமே. அவர் உடுத்த வஸ்திரம் மாத்திரம் மிஞ்சியிருந்தது, அதை உரிந்துகொடுத்திட்டுத் தாம் நிர்வாணியாயிருந்தால் இருக்கலாமே தவிர மற்றப்படி அவரால் ஒன்றும் மாளாது. அறுதியில் அப்படித்தான் செய்தார். அவனுக்குச் செல்லவேண்டிய சம்பளத்தின் ஒரு பாகத்திற்குத் தாம் உடுத்த வஸ்திரங்களிற் சிலவற்றைக் கொடுத்தார்.

அதன்மேல் பலிஸ்ஸி செவ்விதாகச் சூளைக்களம் கட்டி
எழுப்பினார். அதன் அகத்தில் ஓரிடத்தில் தீத்தட்டிக்கல்
அடுக்கிக் கட்டியது பலமோசமென்று கைக்குக் கைம்மே
லே கண்டது. சூளையில் நெருப்பு வைத்துச் சூடேறவும்,
தீக்கல் எல்லாம் சக்கை சக்கையாய்ப் பிளந்து தெறித்துப்
பறந்து சிதறுண்ட துண்டுகள் சூளையில் வைத்த பாண்டத்
தில் குத்திப் பாண்டம் எல்லாம் பழுதாய்ப்போயின.
தனக்கோ நன்றாய்ப் படிந்தது. படிந்தும் பயன் என்ன?
பின்னும் ஆறு மாசம் உழைத்த உழைப்பெல்லாம் அடியோ
டே அவலமாய்ப்போயிற்று. பாண்டம் பழுதாகியும் தனு
க்கு வாய்த்ததனால் சிலர் மித விலை கொடுத்து வாங்க விரு
ம்பினார்கள். பழுதுற்ற பாண்டத்தை விக்கிரயம்செய்வது
தமக்கு அபிமானபங்கமென்று பலிஸ்ஸி விற்க உடன்படா
து தனக்கேறிய பாண்டம் அனைத்தையும் சின்னபின்னமா
கச் சிதறடித்தார். இதைச் சுட்டி அவர் சொல்லியது:—
"ஆறுதும் பெரிதல்ல. ஆசை பெருகப் பெருந் திரம
உண்டாய் எடுத்த கருமத்தைச் சித்தம் சலிக்காமல் தொடு
த்துச் செய்துவந்தேன். இப்படிகள் என்னைக் காண வரும்
சமயங்களில் சில வேளை என் இதயம் துன்புற்று வருந்துவ
துண்டெனினும், அதை நான் அவர்களுக்குச் சற்றுவது
காட்டாமல் நன்னக்கதை சொல்லிப் பரிவுபண்ணிவருவேன்.
நான் பட்ட பாடு ஒன்றல்ல - அனேகம். அவற்றுள்ளெல்
லாம் தீராப் பெரும்பாடு யாரார் அயலாரால்லல, என
வீட்டாரால் எனக்கு நேர்ந்த நிந்தையும் இழிக்கணுமே.
சாதனையின்றி ஒன்றைச் சாதிப்பார் உலகில் இல்லையே—
இதை எண்ணாமல், அந்தத் தப்பாக்கின நான் தொடங்கின
கருமத்தை முடிக்காததைப்பற்றி என்னைக் குறை சொன்னா
ர்கள். என் சூளைக்கு அனேக வருஷகாலம் கூரைக்கு இல்லா
திருந்தது. சூளையில் பாண்டம் வேக வைத்திருக்கும்பொ
ழுது, அநேகமுறை ராத்திரிகாலம் காற்றுக்கு மழைக்கு
இலக்காக உறக்கமற்றுக் காவல் காத்திருந்தேன். எனக்கு

ஆதரவு ஆறுதல் ஒன்றும் இல்லை. ஒரு பக்கத்தில் பூனைகள் அழுத சத்தமும் ஒரு பக்கத்தில் நாய்கள் ஊளையிட்ட ஒலியும் இரா முப்பது நாழிகையும் செவி அதிரக் கேட்ட மணியமாயிருந்ததுதான் நான் பெற்ற சுகம். சில வேளை குளையில் கடுங்காற்று பிரசண்ட வேகமாய் மோத, நான் தாங்க வசமற்று, வீட்டுக்குள்ளே போய் ஒதுங்கியிருப்பது உண்டு. அர்த்தராத்திரியிலும் பிற்சாமத்திலும் படுத்துக்கொள்ளப் போகும் பொழுது மழையில் நனைந்து விறைத்திருப்பேன். சேற்றில் விழுந்து வெளியே இழுத்து விடப்பட்டவனைப்போல் என் தேகம் எல்லாம் சேறும் சகதியும் புரண்டிருக்கும். நிலவின்றிக் கரு இருளில் திசை தெரியாமல் கள் உண்டவனைப் போலத் தள்ளாடித் தடுமாறித் தடுக்கி விழுவேன். விழுந்திருந்ததுபற்றி எனக்கு அத்தனை அலுப்பும் ஆயாசமும் உண்டாயிருக்கும். இவ்வாறு நாட்பட உழைத்தும் என் உழைப்பெல்லாம் வியர்த்தமாய்ப்போனதை எண்ணி எண்ணி மிகு மனத்துயர் அடைந்திருப்பேன். ஆனாலும், ஐயையோ! எனக்கு எங்கும் சுகம் இல்லை. தஞ்சமென்று வீடு தேடி விரைந்தோட, அது முன் பட்ட அவதியிலும் பதின்மடங்கு அதிக அவஸ்தையுள்ள எரிநரகக் குழியாய் முடிந்தது. அவ்வேளையில் என் மனம் என்ன பாடுதான் படாது. இத்தனை பெருந்துயர் அடைந்த நான் அப்பொழுதே பிராணித்து மாய்ந்து போகாமல் இன்றளவும் தப்பிப் பிழைத்திருப்பதை நினைக்கும்பொழுதெல்லாம் எனக்கு ஆச்சரியம் உண்டாகின்றது.”

கருமம் இந்தப் பருவத்தில் இருக்கையில் பலிஸ்வலிக்குக் குறுவிசாரம் மேலிட்டு இனித் தான் நினைத்த கருமம் கைகூடாது கஷ்டமெனக் கவலை துயர் உண்டாய் அவர் நோயும் பாயுமாய் விழுந்து படுத்ததொன்றொழிய மற்றொரு சுகத்தையும் அறியவில்லை. அவர் உடல் உதிரம் வற்றி உலர்ந்து வெற்றெலும்புக்கூடாகித் தரித்த வஸ்திரம் கந்தை கந்தையாய்க் கிழிந்து தொங்க, மனதிற் குடியேறிய துக்கம் முகக்குறியால் விளங்க, லேசர்ஸிலின் அயலில் உள்ள வயல

வெளியில் இருந்தார். அவர் எழுதிய வரலாறுகளில் விநோதமான ஒரு வாக்கியம் இருக்கிறது. அதில் அவர் தமது காலில் ஆடுசதை உலர்ந்து சுருங்கிப்போக, நாடா தொடுத்து இழுத்துக் கட்டிய பாதகோசம் நடக்கும்பொழுது தளர்ந்து குதிக்காலில் விழுந்ததென்று வெளியிட்டார். அவர் குடும்ப சம்ரக்ஷணையைத்தொட்டு நிர்விசாரமாயிருப்பதைப் பற்றி வீட்டார் நித்தமும் அவரை நிந்திக்க, அண்டை அயலில் உள்ளவர்கள் சொல்லச் சொல்லக் கேளாமல் பேய்ப் புத்தி கொண்டு நடந்ததைத்தொட்டு இவன் ஊர் லச்சை கெட்ட முட்டாள் என்று இட்டுத் தலைப்பட்டார்கள். கேட்டுக் கேட்டு அலுப்புற்று அவர் சிறிது காலம் முன் செய்த தொழிலை மீண்டும் தொடங்கி ஒரு வருஷம் சிரத்தையாய்ச் செய்துகொண்டுவந்து கையேறிய வருமானம் குடும்ப சம்ரக்ஷணைக்குக் கட்டிவந்தது. ஒருவாறு சீர்ப்பட்டாரென்று கண்டு அயலவர்களும் அவரைச் சம்மானிக்கத் தொடங்கினார்கள். மீண்டும் அவர் தம் மனதிற்கு மாதுரியமாயிருந்த பரீக்ஷையைக் கைக்கொண்டார். முன்னமே தருக்கிடும் சேர்வை கண்டறிய அவர் பரீக்ஷை செய்த காலம் பத்து வருஷம். பின்னிட்டு அந்தச் சேர்வையைக் கஸ்திப் பட்டுச் சோதனைமேற் சோதனை செய்து களங்கமற அறிந்து சாதிக்கப் பின்னும் எட்டு வருஷம் சென்றது. செய்யச் செய்ய அவருக்கு அநுபவம் முதிர்ந்து வியப்பருந்திறம் அமைந்தது. இன்ன பரீக்ஷைக்கு இன்ன சித்தி உண்டாமென்று அவர் எள்ளளவும் தவறாது அறிந்தார். செய்யும் பரீக்ஷைகள் சிறக்கச் சிறக்க, அவருக்கு * விர்த்தி ஞானம் மெத்தவும் உண்டாயிற்று. தப்பிப்போன பரீக்ஷைகள் அத்தனையும் அவருக்கு ஆதனமாய்க் கற்றறியும் அத்தனை பாடங்களுக்கும் சமானமாகித் தருக்கிடும் சேர்வையின் இயற்கையையும், களிமண்ணின் குணத்தையும், களிமண்ணைப் பதப்படுத்தும் முறைமையையும், சூளை

* விர்த்திஞானம் (விவகாரவிவேகம்)—practical knowledge.

லைவத்து நிர்வகிக்கும் சூக்ஷமத்தையும்பற்றி அவர் எத்தனை எத்தனையோ நுட்பங்களை அறிந்துகொண்டார்.

பதினைறு வருஷம் பாடுபட்டு உழைத்துத் தெளிந்தபின்புதான் பலிஸ்ஸி அச்சமற்றுத் தாமும் குலாலன் என்று சொல்லத் தலைப்பட்டார். அந்தப் பதினைறு வருஷம் அவர் தொழில் பழகின காலம். அவர் ஆதியோடு அந்தம் தமக்குத் தாமே உபாத்தியாயரானார். அதன்மேல் அவர் பாண்டம் விற்றுத் தேறும் பணத்தைக் கொண்டு குடும்பசம்ரக்ஷணை செய்து சுகித்திருக்கத் தக்க நிர்வாகி ஆனார். ஆனாலும் தாம் சாதித்தது போதுமென்று அவர் அம்மட்டில் ரமித்திருக்காமல் கடுமளவில் பூரண நிபுணராகக் கருதித் தாம் கைவிட்ட துறையில் ஓயாது உழைத்து படிப்படியாய்த் தேறிக்கொண்டுவந்தார். அவர் இயற்கைப்பொருள்களைக் கருத்துக் கூர்ந்து பார்த்து இறையும் தவறுமல் தமது பாண்டங்களில் வனையப் பயின்று இதில் அவருக்கு உண்டான அதிசய சித்தியைக் கண்டு, பெயர்பெற்ற பப்பன் பண்டிதர் அவரைச் சுட்டி "இந்தப் பதார்த்தவிஞ்ஞானிக்கு இத்தனை மகத்துவம் தெய்வத்தாலன்றி மற்றப்படி அமைவது அசாத்தியம்" என மொழிந்தார். அவர் வனைந்த சித்திரக்கிண்ணம் முதலியவைகளை வஸ்துநிசயசாலைகளில் இப்பொழுது காண்பவர்கள் இவை கிண்ணங்களல்ல, நவமணிகளைத் தோற்கடிக்கும் அருமணிகளென்று பாராட்டுவார்கள். பாராட்டி யானைவிலை குதிரைவிலை கொடுத்து வாங்குவார்கள். * அக்கிண்ணமுதலிய பாண்டங்களுக்கு அனி

* கிலக்ருஷ்மூர்த்தி லந்தன் நகரத்தில் மெஸ். பர்தலேகுடி வைத்திருந்த அரும் பொருள் வகை ஏலத்தில் விலைப்பட்டபொழுது, பலிஸ்ஸி வனைந்த சித்திரக்கிண்ணம் ஒன்றைக் கண்டு எல்லாரும் அதிசயப்பட்டார்கள். ஆறங்குலம் அகலமும் பன்னிரண்டு அங்குலமுள்ள அதன் மத்தியில் ஒரு பல்லியின் பிரதிமை வித்தையாக வனைந்திருந்தது. அச்சித்திரக்கிண்ணம் ஆயிரத்துநூற்றிருபது ரூபாய்க்கு விலைப்பட்டது.

யாக அவர் வினைவன பெரும்பாலும் வனவிலங்கு, பல்லி, அவ்வூர் வயல்வெளியில் உள்ள பூண்டு செடி கொடி இவைற்றின் பிரதிமைகளே. அவ்வுருக்களுக்கும் அவற்றால் விளங்கும் ஜீவ மூல வர்க்கத்துக்கும் அணுவளவும் வேற்றுமை தோன்றாது. பலிஸ்லி வினைதொழிற்றுறையில் உயர்ந்துயர்ந்து உச்சத்திற்கு வந்தபோது தமக்கு இட்ட தொழிற்பெயர் "மட்கலம் வனைந்து நாட்டகத்துள்ள ஜீவ மூல வர்க்கம் சித்திரிப்போன்" என்பது.

ஆனாலும், பலிஸ்லி பட்ட உபத்திரவத்தை நான் இன்னம் முற்ற முடியச் சொல்லவில்லையே. இரண்டொரு வார்த்தை சொல்லி முடிக்கிறேன். அவர் ப்ரொடெஸ்டாந்து கிறிஸ்தர். அவர் காலத்தில் பிரான்சு தேசத்தின் தென் பாகத்தில் அவ்வர்ணத்தாருக்கு ரோமான் மதஸ்தரால் உபத்திரவம் நேர்ந்து அதிகரித்தது. அவர் பயங்காளியல்ல - அச்சமற்றுத் தமது கோட்பாடுகளை வெளியிட்டார். ஆனதுபற்றிக் கடுவிஷம் கக்கும் பாம்பென்பென்று அவர்கள் அவருக்கு அஞ்சினார்கள். அவர் பகைவர் கோட்சொல்ல, அதைக் கேட்டுச் சர்க்கார் சேவகர் ஸேய்ந்தீஸில் உள்ள அவர் வீட்டில் நுழைந்து, தொழிற்சாலையின் கதவைப் பெயர்த்துத் திறந்துவிட, திரளாய்க் கும்பகூடிய கீழ்மக்கள் நுழைந்து அங்கிருந்த பாண்டம் அனைத்தையும் அடித்து நொறுக்கினார்கள். சேவகர் அவரை ராத்திரிகாலத்தில் போர்டோ நகரத்திற்குத் தீவிரமாய்ப் பிடித்துக் கொண்டு போய், கழுவேற்றியாவது சிரம் சேதித்தாவது கொல்லும் தினம் வருந்தனையும் சிறையிருத்தினார்கள். பின்பு அவரைத் தீ வளர்த்துத் தகிக்கும்படி தீர்ப்புப் பிறந்தது. மக்மோரென்ஸி எனும் ஊரின் அதிகாரியாகிய மிக்க செல்வாக்குள்ள பிரபு ஒருவர் அவரைப் பிராணதண்டனைக்குத் தப்புவிக்கத் தலைப்பட்டார். அந்தப் பிரபுவிற்குப் பலிஸ்லிமீது இவ்வாறு கிருபை உண்டானது அவரில் அன்புகூர்ந்ததனாலுமல்ல; அவர் மதபேதம் சமயத்

தை அபிமானித்ததனுலுமல்ல, தமது நயத்தை எண்ணியே. பரீஸ் நகரத்திற்குச் சுமார் பன்னிரண்டு மைல் தூரத்தில் அவருக்கு எகௌஎன் என்று ஒரு கிராமம். அந்தக் கிராமத்தில் அவர் அரணை அலங்கார மண்டபம் ஒன்று சமைப்பிக்கத் தொடங்கி அப்பொழுது வேலை நடந்துகொண்டுவந்தது. அதனை தளத்திற்குப் பளிங்குத் தளுக்கிடத் தக்க கைத்தொழிற்றிறமையுள்ள குலாலன் பலிஸ்ஸி ஒருவர் தவிர அத்தேசத்தில் மற்றெவரும் இல்லை. அவர் இறந்தால் தமது வேலை வளம்பெற முடியாதென்று கண்டு தான் அந்தப் பிரபு அவரை மரணத்திற்குத் தப்புவிக்கத் தலையிட்டார். அவருடைய வாக்குசகாயத்தால் பலிஸ்ஸியை அரசனுக்கும் அவருக்கும் நாட்டுப்பொருள்வகை வலையும் தொழிலாளியாக நியதிசெய்து துரைத்தன சாதனம் ஒன்று பிறப்பிக்கப்பட்டது. ஆகவே அவர் அந்த க்ஷணமே போர்டோ நகராதிகார எல்லைக்கு அப்புறப்பட இடம் பெற்றார். அவர் விடுதலை பெற்றுப் போய் வீடு சேர்ந்தபொழுது வீடு அங்கேது! அது பிரிந்து கலைந்து பாழ்பட்டு அலங்கோலமாயிருந்தது. தொழிற்சாலை மேற்கூரை சிதைந்துபோய் வெயிலுக்கும் மழைக்கும் இலக்காயிருந்தது. அவர் வனைந்த பொன்போலும் பாண்டமுதலிய அனைத்தும் தவிடுபொடியாய் நொறுங்குண்டிருந்தன. அப்பொழுது அவர் மனம் என்ன பாடுதான் படாது! அப்புறம் அவருக்கு அங்கென்ன வாழ்க்கை உண்டு! இனி ஒருகாலும் அவ்வூருக்குப் போவதில்லையென்று அடியில் ஒட்டிய தூசியை அசல உதறிவிட்டுப் பரீஸுக்குப் போய் மேற்சொல்லிய பிரபுவும் ராக்ஞியும் இட்ட வேலைகளைச் செய்துகொண்டுவந்தார். செய்துவரும் காலத்தில் அவருக்கு இருப்பிடம் தியுலெரீஸ் *.

* பிரான்சுதேசத்தில் ப்ரொடெஸ்டாந்து சமய பூர்வத்தைக் குறித்துப் பூராயமாய் ஆய்ந்தறியும் முயற்சியுள்ள [illegible]

பலிஸ்ஸி தம்மைந்தர் இருவரை வைத்துக்கொண்டு அவர்கள் கைத்துணையால் குயக்கலம் வனைதொழில் செய்து வந்ததுமன்றி, வயசு பின்னிட்டதன்மேல், இத்தொழிலில் தாம் அறியாமற் செய்த பல பிழைகளைத் தம் ஊரார் தவிர்க்கவும் நன்றாய்த் தொழில் பழகவும் தக்க விதிகளை உணர்த்தும் புஸ்தகங்கள் எழுதிப் பிரசித்தம் செய்தார். மேலும், கிருஷித்தொழில், கோட்டை கொத்தளம் அமைக்கும் முறை, * சராசரநூல் இவைகளை உணர்த்தும் புஸ்தகங்களும் இயற்றினார். அவர் சராசரநூலைக்குறித்துச் சிலருக்குப் பிரசங்கமும் செய்தார். சோதிஷம், ரசவாதம், † மாரணவித்தை முதலிய ‡ பேடிசவித்தைகள் அவருக்கு ஜன்மவிரோதம். அவர் அவைகளைக் கருவறுக்கக் கங்கணம் கட்டி நின்றார். இதனால் வெகு பெயர் அவருக்கு விரோதிகளானார்கள். அவர்கள் அவரைக் கண்ட இடத்தோறும் இவன் ¶ பாஷண்டன் என்று காட்டிக்கொடுக்கப் பார்த்தார்கள். அவர்களால் அவர் மீளவும் சமயத்வேஷத்தின்பொருட்டுப் பிடித்துச் சிறைச்சாலையில் வைக்கப்பட்டார். அப்பொழுது அவர் அற முதிர்கிழவன் – பருவம் எழுபத்தெட்டு. அது அவர் இடுகாட்டு வாசலில் நடுநடுங்கி அடிவைத்து நிற்கும் தள்ளாத பருவமாயினும் அவர் மனோதை

பிரதிமைகள் கட்ட உபக்கரணம் ஒன்றை இப்போது ஐந்தாறுமாசத்திற்குமுன் கண்டுபிடித்தார். மனுஷர் முகம், பூண்டு செடி, விலங்குஜாதி இவற்றின் உருமாதிரியாகச் செய்த கருக்கள் சில தரையில் அகழ்ந்தெடுத்தார். அவைகள் சற்றாவது கெட்டுப்போகவில்லை. சாதாரணமாய் நால்வரும் அறிந்த அவர் முத்திரை அவைகளுக்கு இட்டிருந்தது. அவ்வுலைக்களம் இருந்தது அவர் சித்திரகூடத்தின் கீழ்.

* சராசரநூல்=natural history

† மாரணவித்தை=witchcraft.

‡ பேடிசவித்தை=imposture.

¶ பாஷண்டன்=heretic.

ரியம் சற்றுவது இல்லைக்கவில்லை. அவர் அனுசரித்த மதத்தைத் தள்ளவேண்டுமென்றும், தள்ளாவிடில் கொல்வது நிசமென்றும் சர்க்கார் அவருக்கு அச்சம் காட்டினார்கள். அந்த அசாத்திய பருவுகளை அசைக்க ஆரால் முடியும். முன் பனிக்குந் தணுக்குச் சோலை கண்டன்றிப் பரிகை விடுவதில்லையென்று அவர் ஒரு பிடியாய் நின்றதுபோலவே சமய விசுவாசத்திலும் ஓட்டாரம் கட்டி நின்றார். மூன்றாவது வெள்ளி அரசர் அவரை ஒரு பொருளாய் எண்ணிச் சிறைச்சாலை அத்தனை தூரம் போய் அவருக்குப் புத்தி புகட்டி மதக்கோளைத் தள்ளிவிடும்படி அவர் மனதை வசப்படுத்தப் பார்த்தனர். அரசர் மொழிந்த வாக்கு இது:— "ஐயா, தாயாருக்கும் நமக்கும் காற்பத்தைத் வருவிக்கும் நீ தொண்டுசெய்துவருகிறாய், உன் சமயத்தாரைத் தீக்கு இரையாக்கியும், சர்வசங்காரம் செய்தும் வர, நீ ஒருவன் மாத்திரம் அச்சமற்றுக் கொண்ட கொள்கையைக் கைவிடாதிருக்கிறாய். இதுவரையும் கண்சாடையாய் விட்டுவந்தோம். இப்பொழுது கைஸ் பகுத்தாரும் நம் பகுத்தாரும் நம்மை இருக்க விடாது நெருக்குகிறார்கள். இனி உன்னைச் சத்துருக்கள்வசம் ஒப்புவிக்காமல் தீராது. உன் மதத்தை இன்று கைவிடாதிருப்பாயானால் அக்கினிக்குழியில் தள்ளப்படுவாய். இது நிசமென்று அறி" இது கேட்டு, வெள்ளிய அவ்விருத்தர் பின்வருமாறு மறுமொழி பகர்ந்தார். "ராஜசிங்கமே, தேவமகிமைக்காகப் பிராணத்தியாகம் செய்யச் சித்தமாயிருக்கிறேன். எனக்கு இதற்குமுன்னமே பல முறை ராஜவாக்குப் பிறந்தது. "உம்மை இருக்கவிடாமல் நெருக்குகிறார்கள்" என மொழிந்த வசனத்தைக் குறித்து இப்பொழுது பரிதபிக்கிறேன். "உம்மை இருக்கவிடாமல் நெருக்குகிறார்கள்" என மொழிந்தது, வேந்தரே, தங்கள் ராஜரீகத்திற்குத் தகாது. என்னை நெருக்க ஒருபொழுதும் நமனாலும் ஆகாது, கைஸ் கட்சியாராலும் மாளாது. தங்

கள் பலகுத்தார் சமஸ்தராலும் இயலாது. இறப்பது இன்வகையென்று எனக்குத் தெரியும்." இப்படிச் சொன்ன பலிஸ்ஸி அதித்து விரைவில் ரத்தசோகையால் இறந்துபோனார்; கழு ஏறி அல்ல, ஒரு வருஷகாலமும் சிறையிருந்து வருந்திச் சிறைச்சாலையில் அவர் இறந்தார். சத்தவீரர்க்குரிய உழைப்பும், * எவர்க்கும் இல்லாத பொறுமையும், கோடாத நேர்மையும், வெகு அபூர்வ உசித சகுண சகிர்தங்களுமுள்ளவரென்று கூறிக்கொள்ளப்பட்ட பலிஸ்ஸியின் வாழ்நாள் இவ்வாறு கலகமும் கலக்கமுமின்றி முடிந்தது. †

பீங்கானை ‡ கருபகராகிய ஜான் பிரெடரிக் பட்கர (John Frederick Bottgher) என்பவருடைய சரித்திரம் ஒரு விதம், பலிஸ்ஸியின் சரித்திரம் ஒரு விதம். ஆனாலும், பட்கர் சரித்திரத்திலும் சில அபூர்வமும் ஆச்சரியமுமான சங்கதிகள் உண்டு. பட்கர் பிறந்தது 1685-ம் வருஷம், வாயித்லாந்தில் உள்ள ஷிலீஸ் கிராமத்தில். பன்னிரண்டு வயசில் அவர் பெர்லின் நகரத்தில் மருந்துவகை செய்து விற்கும் ஒருவனிடத்தில் தொழில் பழக அமர்ந்தார். அவருக்கு இளமையிலேயே ரசாயனவித்தையில் அதிக வாஞ்சை உண்டென்றுத் தோன்றுகிறது. அவகாசம் காணுந்தோறும் அவர் ரசாயனபரீக்ஷை செய்துகொண்டேவருவார். அப்பரீக்ஷைகளில் பெரும்பாலாகவே ரசவாதமே ஒன்றையே

---

* எவர்க்கும் இல்லாத பொறுமை — extraordinary endurance.

† பலிஸ்ஸியின் சரித்திரத்தையும் அவர் உழைத்த உழைப்பையும் மார்லி என்பவர் சொல்லப் பிரசித்தமான தம் புஸ்தகத்தில் வெகு விஸ்தாரமாய் விவரித்திருக்கிறார். மேலே நாம் சுருக்கமாகக் கூறியவற்றைப் பெரும்பாலும் கண்டெடுத்தது ஸ்மைல்ஸ் "ஸ்வயமுயற்சி" எனப் பெயரிட்டுத் தம் ... விளக்கி எழுதிய புஸ்தகத்தில்.

‡ நிருபகர் — inventor.

சார்ந்தவைகள். சில வருஷகாலம் சென்றதன்மேல் லோக வர்க்கம் அனைத்தையும் கனகத் தக்க பேதியைக் கண்டு பிடித்ததாகவும், அதன் உதவியால் பொன் உண்டாக்க வகை அறிந்ததாகவும் பட்கர் விம்புக்குச் சொன்னார். அந்தப் பேதி இன்னின்ன அதிசயங்களைச் செய்யுமென்று அவர் தமக்கு மருந்து செய்யும் முறை கற்பித்த ஜார்ன் என்பவருக்குப் பரீக்ஷைசெய்து காட்டினார். அவர் செம்பைப் பொன் ஆக்கினதொன்று அந்த உபாத்தியாயரும் பிறரும் கொஞ்சமும் ஐயக் தக்கதாக அவர் ஏதோ சூது காட்டினார்.

ஒருவரிடத்தில் அமர்ந்து மருந்து செய்யப் பழகின வித்தியார்த்தி[illegible]வாத அந்தரங்க சூக்ஷமத்தைக் கண்டறிந்தாரென்று எங்கும் வதந்தி பிறந்து உலாவியது. *சொர்ணசுயம்பாகியாகிய அவ்வதிசய வாலிபனைக் கண் களிகூரக் காணும் ஆசையால் மருந்துக்கடையில் கும்பு திரளாய்க் கூடிற்று. அவனைக் கண்டு பேசும் விருப்பத்தை அரசரும் வெளியிட்டார். செம்பைப் பொனாக்கிய துண்டொன்று ஒரு துண்டை அரசருக்குக் காணிக்கையாய்க் கொண்டு போய்க் கொடுத்தபொழுது, அவர் இனி நமக்கு என்ன குறைச்சல் வரப்போகிறது பணம் தேவிட்டுமளவும் பொன்னை எளிதில் செய்வித்துக் கொள்ளலாமே என்று எண்ணி நெஞ்சம் பூரித்து, பட்கரை வசப்படுத்தி அரணிப்பான ஸ்பான்டெள கோட்டைக்குள் இருத்திப் பொன் செய்விக்க நிர்ணயித்தார். அப்பொழுது பருஷ்யா அரைத்தனத்தார் செலவிற்குத் திரவியம் இடையாமல் மெத்தவும் முட்டுப் பட்டார்கள். அரசன் அபிப்பிராயத்தை அவ்வாலிபன் அறிந்து தன் சூது வெளிப்படப்போகிறதென்று அஞ்சிக் கண்ணுக்கு எட்டாத் தூரத்தில் ஓடிப் பிழைக்கத் தீர்மானித்து, எல்லைப் பிரதேசத்தைத் தாண்டி ஸாக்ஸனிக்குப் போய்த் தப்பிக்கொண்டான்.

* சொர்ணசுயம்பாகியை "gold-cook"

பட்கரைக் கண்டுபிடித்து ஒப்புவிப்பவர்க்கு ஆயிரம் தாலர் வெகுமதி கொடுப்பதாக விளம்பரம் பிறந்தும் அவர் அகப்படவில்லை. அவர் உவிற்றென்பர்க்கில் போய்ச்சேர்ந்து, ஸக்ஸனி இலெக்டர் எனும் மன்னனிடத்தில் புகலடைந்தார். அம்மன்னன் பலாஷ்டிகனென்று மறு நாமம் தரித்த போலண்ட் அரசனாகிய ௨-வது ப்ரெட்ரிக் ஆகஸ்டஸ். அச்சமயத்தில் அந்த ப்ரெட்ரிக்கும் செலவிற்குப் பணம் அகப்படாமல் தட்டுக்கெட்டிருந்தான். ஆனதன்மையால், ரசவாதனுக்ஷ்டம் கண்ட அவ்வாலிபனைத் துணைக்கொண்டு வேண்டுமளவிற்குப் பொன் செய்துகொள்ளச் சமயம் கிட்டியதை நினைந்து மகிழ்ந்து தன் சேவகரை அனுப்பி, பட்கரை அந்தரங்கமாய் ட்ரெஸ்டெனுக்கு வரவழைத்தான். பட்கர் உவிற்றென்பர்க்கை விட்டுப் புறப்படவும் புருஷிய ராஜாட்சேவகர் வாசலில் நெருங்கி அந்த ரசவாதியைத் தங்கள்வசம் ஒப்புவித்திடக் கேட்டார்கள். ஆனால் சமயம் கடந்துபோயிற்று. பட்கர் அதற்குள்ளே ட்ரெஸ்டெனில் போய்ச்சேர்ந்து செம்பொன் மாளிகையில் இருக்க இடம்பெற்றான். அங்கு அவ்வாலிபனுக்கு எவ்வித உபசாரமும் நடந்தபோதிலும், அவனைத் தப்பவிடாமல் கட்டுக்காவல் செய்தார்கள்.

அப்பொழுது போலண்டுடன் அநாயகஸ்வீடன் மேற்கொண்டிருந்ததுபற்றி அரசன் பட்கரை அரண்மனையில் நிறுத்திவிட்டு, சிறிது காலம் சென்று திரும்பிவர நினைந்து போலண்டுக்குப் போய்விட்டான். போய் உவார்ஸா ராஜதானியில் சேர்ந்திருக்கையில், பொன் செய்யும் வகை அறிய அவன் மனம் பதைத்துப் பிறகு உதவியின்றித் தானாக எந்த லோகத்தையும் பொன்னாக்கிக்கொள்ளும்படி அவ்வந்தரங்கத்தைத் தனக்கு வெளியிட பட்கருக்குக் கடிதம் எழுதிக் கேட்டான். இப்படி அரசன் நெருக்கிக் கேட்டதனால், வாலிபனாகிய சொர்ண சயம்பாகி சிறு குப்

பியில் ஏதோ ஒரு * "செந்திரவம்" விட்டு அடைத்து அனுப்பி, இரும்பு செம்பு முதலிய எந்த லோகத்தையும் உருக்கி அத்திரவத்தில் ஒரு துளி விட, உடனே அது பொன்னாகுமென்று கடிதமூலமாய்த் தெரிவித்தான். இவ்வரிய திராவகக்குப்பியை ராஜகுமாரனாகிய பர்ஸ்ட் வான் பர்ஸ்டென்பர்க் (Prince Furst von Furstenburg) வாங்கிக் காவற் பட்டாளத்துடன் வார்ஸா நகரத்திற்கு விரைந்து கொண்டுபோனான். குப்பி கண்டவுடன் அரசன் பரீக்ஷை பார்க்கத் தீர்மானித்து தானும் குமாரனும் அரண்மனையில் அந்தரங்கமான ஓர் அறைக்குட் பிரவேசித்துக் கதவைப் பூட்டிப்போட்டுத் தாமே சொர்ண சயம்பாகம் செய்வதற்கு இடுப்பில் துணி தாக்கும் தோல் கட்டிக்கொண்டு குகை உண்டாக்கி அதில் செம்பு வைத்து உருக்கி, பட்கர் அனுப்பிய திரவத்திற் சிறிது ஊற்றினார்கள். பரீக்ஷை வாய்க்கவில்லை. பின்னும் ஊற்றி நன்றாய்க் கரைத்து பார்த்தார்கள். பிரயோஜனப்படவில்லை. என்ன பக்குவம் செய்தும் செம்பு செம்பாகவே இருந்தது. அரசன் ரசவாதி எழுதி அனுப்பிய முறையைக் கூர்மையாய்ப் பார்வையிட்டான். அதில் நாடிய கருமம் கைகூட வேண்டில், செந்திரவத்தை "மெத்தவும் சித்த சுத்தியாய்" விடவேண்டுமென்று எழுதியிருந்தது. அன்று சாயரக்ஷை அரசன் தகாதவர்களுடன் சகவாசம் செய்ததை நினைத்து அது தான் பரீக்ஷை தவறியதற்கு நிமித்தமென்று எண்ணி, மறு பரீக்ஷை செய்து பார்த்தான்" அதுவும் வாய்க்கவில்லை. அரசனுக்கு அப்பொழுது கன உக்கிரம் உண்டாயிற்று. இரண்டாவது பரீக்ஷை தொடங்குமுன் ஒரு முன்னிலையில் பாவ அறிக்கை செய்து மன்னிப்பும் பெற்றும் இப்படிக் கருமம் சித்தியாததாலேயே அரசனுக்குக் கோபாக்கினி பற்றி எரிந்தது.

---

* செந்திரவம்—a reddish fluid.

பணமுட்டோ வரவர அதிகரித்து அது தீர்க்க வகை ஒன்றும் தோன்றாததனால் பொன் செய்யும் அந்தரங்கத்தை பட்கர் வாக்கினின்று பலாத்காரமாய் வெளியிடுவிக்க அரசன் சங்கற்பித்தான். அந்த ரசவாதியோ அரசன் அபிப்பிராயத்தைக் கேள்வியுற்று, மீளவும் அங்கிருந்து ஒளித்தோட நிர்ணயித்து, காவற்சேவகர் கண் காணாமல் நழுவி வெளிப்பட்டு இரா பகல் மூன்று நாள் ஓய்வற நடந்து ஔஸ்திரியாவைச் சேர்ந்த என்ஸ் எனும் ஊரில் இறங்கி அங்கு அச்சம் இல்லையென்று இருக்க, அரசன் அவனைப் பிடித்துவர அனுப்பிய தூதரோ "பொன்மானை"* வால் பிடி தோள் பிடியாகத் தொடரும் வேட்டை நாய்களைப்போலத் தொடர்ந்து அடிபிடித்துப்போய் முற்றுகைசெய்து படுத்த படுக்கையில் விழுந்து அமர்த்தி அவர்கள் கையினின்று தப்பிக்கொள்ளும்படி அவன் தன்னால் ஆமளவிற்குத் திமிறிப் பார்த்தும், சமயத்தில் தன்னைத் தப்புவித்து உதவும்படி ஔஸ்திரிய அதிகாரத்தாரைக் கெஞ்சிக் கேட்டும் அவன் சாமர்த்தியம் ஒன்றும் பலிக்கவில்லை. அவர்கள் அவனைக் கை நெகிழ விடாமல் பிடித்த பிடியாய் ட்ரெஸ்டெனில் கொண்டுபோய்ச் சேர்த்து அங்கே சேர்ந்த நாள் முதலாக முன்னிலும் அதிக ஜாக்கிரதையாகக் கட்டுக் காவல் செய்தார்கள். சிறிது காலத்திற்குள் அவனை அங்கிருந்து கொண்டுபோய் அரணிப்பான் கனிக்ஸ்டீன் கோட்டையில் வைத்தார்கள். அங்கிருக்கையில், ராஜ ரொக்க சாலையில் பணம் கட்டோடே இல்லையென்றும், நெடுநாள் வரையில் சம்பளம் நிலுவையாயிருக்கும் பத்துப் பொலாந்திய பட்டாளத்தாருக்குச் சம்பளம் கொடுக்க நீ பொன் செய்து தந்தாலன்றி வேறு வகை இல்லையென்றும் அவனுக்கு அறிக்கைசெய்யப்பட்டது. ஒரு நாள் அரசன் தானே சிறைச்சாலைக்குப் போய் பட்கரைக் கண்டு, இந்தக்ஷணமே

* வால் பிடி தோள் பிடியாகத் தொடர — to be at the heels, to pursue closely, to follow hard.

ீ பொனை செய்யத் தொடங்கவேண்டும். அல்லாவிடில் தூக்கிற்போடப்படுவாய்! எனக் கடுகடுப்பாய்ச் சொன்னான்.

அரசன் இவ்வாறு சொல்லி ஒருதாறு வருஷமும் சென்றும் பட்டர் பொன் செய்யவுமில்லை, ராஜ கற்பனைப்படி தூக்கிடப்படவுமில்லை. ஏனென்னில், செம்பைப் பொன்னாக்குவதிலும் களிமண்ணைப் பீங்கானாக்குவது பெரிய வித்தையல்லவா-இவ்வரிய வித்தையைக் கண்டறிய இருந்த அவனைத் தூக்கிற் போட்டால் இவ்வித்தை வெளியருவது மற்றெவராலுமாம்? விந்தையான வேலைப்பாடுள்ள பீங்கான் சில சீனாவிலிருந்து போர்த்துகேஸர் சீமைக்குக் கொண்டுபோய் இடைக்கு இடையிலும் அதிகப் பொன்னுக்கு விற்றார்கள். ஆதியில் பட்டர் பீங்கானைக்குறித்து நினைக்கவந்தது திருஷ்டியந்திர நிர்மாணிகனும் இரசவாதியுமாகிய உவால்த்தர் வன் ஷிர்காஸ்(Walter von Tschiruhaus)என்பவனால். அவன் கல்வித்தெளிவும் பெருந்தகைமையுமுள்ளவன்; பர்ஸ்டென்பர்க் எனும் ராஜகுமாரனும் ராஜனும் அவனுக்கு மிக்க வெகுமானம் உண்டு. இது இருக்க, பட்டர் எத்தனை காசு செலவிலும் தூக்குமரமே தன் பங்கென்று ஏகம்பிடித்திருந்ததை அறிந்து ஷிர்காஸ் "பொன் செய்ய உன்னால் ஆகாதானால், மற்றேதாயினும் ஒன்றை வருந்தி வகை அறிந்து செய்யலாமே; பீங்கான் செய்" என்று அவனுக்குச் சமயோசித உபாயம் சொல்லிக்கொடுத்தான்.

ரசவாதியென்று பெயரெடுத்து ஏமாறிப்போன பட்டர் இந்தக் குறிப்பைச் சிந்தையிற் கொண்டு அன்று தொட்டு அல்லும் பகலும் அநுபவமுழைத்துப் பரீட்சைசெய்து வந்தான். பீங்கான் செய்யும் முறை அறி தொழில் முயற்சியில் ஈட்டுப்பட இளைக்காதிருந்தும் அவன் கருமம் வாய்க்கவில்லை. இப்படி இருக்கையில் ஒரு நாள் குகை செய்யத் தருவித்த செங்களிமண்ணின் துணையால் அவன் காரியம்

ளைகூடும் துறையில் சேர்த்தான். அதிக சூடு ஏற்ற அந்தக் களிமண் தன் உரு மாறாமல் பளிங்காய்ப்போயிற்று. உடைத்துப் பார்க்க அது உறுப்பு அமைதியில் பீங்கானைப் போன்றிருந்தும் வர்ணத்திலும் * உருவொளியற்ற தன்மையிலும் மண்ணாகவே இருந்தது. இப்படி அவன் செம்பீங்கான் வனையும் முறையைத் தற்செயலாய்க் கண்டறிந்து வனைந்து விற்றுக்கொண்டுவந்தான்.

டட்கர் வனைந்து விற்றது செம்பீங்கான், நாணயமான பீங்கானுக்கு உரிய வர்ணம் செம்மை அல்ல, வெண்மையென்று அவனுக்கு நன்றாகத் தெரிந்ததுபற்றி வெள்ளைப் பீங்கான் செய்யும் சூக்ஷமம் அறியப் பலவாறு பரிசோதனை செய்துபார்த்தான். இந்த முயற்சியில் எத்தனையோ வருஷம் சென்றும் அவன் சித்தி காணவில்லை. கடைசியில் முன்போலத் தெய்வகதியே அவனுக்கு உபகாரியாகி வெள்ளைப்பீங்கான் வனையும் உபாயத்தைக் கண்டறியும்படி உதவிற்று. 1707-ம் வருஷம் ஒரு நாள் தன்னுடைய பொய்மயிர் ஆச்சரியமான விதமாய்க் கனத்தது கண்டு இந்த விபரீதத்திற்கு ஏது என்னவென்று அவன் வேலைக்காரனைக் கேட்டான். பரிமளத்திற்காகத் தூவிய பொடியினால் மயிர் இப்படிக் கனக்கிறதென்று வேலைக்காரன் மறுமொழி பகர்ந்தான். அக்காலத்தில் மயிருக்கு இடும் பரிமள பஸ்பமாக வழங்கியது ஒரு வித மண். வேலைக்காரன் இந்த மறுமொழி சொல்லவும், தீவிர புத்தியுள்ள டட்கருக்குச் சூக்ஷமம் தெரிந்தது. நான் கண்டறிய நாடுவது இவ் வெண்மண்பொடி ஆனாலும் ஆகுமே - எப்படியும் அது இன்னதென்று உறுதி அறிய வாய்த்த இவ்வருஞ்சமயத்தைக் கை நெகிழ விடலாகாது என்று அவன் வெகு ஜாக்கிரதையாக வருந்தி உழைத்தான். உழைத்த உழைப்பு வியர்த்தமாய்ப்போகவில்லை. உழைப்பிற்குத் தக்க ஊதியம்

* உருவொளி—transparency.

கிடைத்தது. பரீக்ஷை செய்து பார்த்த அளவில் மேற்கு
றித்த கந்தப்பொடியிற் சேரும் திரவியங்களிற் பிரதான
திரவியம் (Kaolin) எனத் தெரியவந்தது. அது இல்லாத
குறைதான் இத்தனை காலம் அவன் நாடிய கருமம் கைகூடு
தற்கு நீங்கரிய தடையாயிருந்தது.

இந்த மர்மம் கண்ட பட்டர் என்ன சாமானியனா - விசே
ஷக்ஞன். அத்தகைமையுள்ள அவன் இதைக் கண்டதனால்
விளைந்த பெருஞ்சித்தி ஒன்றல்ல - பல; * ரசேந்திரத்தைக்
கண்டு பெறும் பயனிலும் பெரும்பயன் உண்டாயிற்று.
1707-ம் வருஷம் அக்டோபர் மாசம் அவன் முதல் முதல்
விளைந்த பீங்கானை அரசனுக்குக் காணிக்கையாகச் சமர்ப்
பித்தான். அதைக் காணக் காண அரசனுக்கு ஆனந்தமா
யிருந்தது. பட்டர் இவ்வாறு அறைகுறையாய்க் கண்டறிந்
த முறையை முற்ற முடியக் காணும்படி அவனுக்கு வேண்
டும் சகாயம் செய்வதாக ராஜவாக்குப் பிறந்தது. இத்
தொழிலில் கைதேர்ந்த ஒருவனை டெல்ப்ட் நகரத்தினின்று
வரவழைப்பித்து வேலை தொடங்கி பட்டர் வளமுறப்
பீங்கான் விளைந்தான். அதுபற்றி, ரசவாத முயற்சியை
க் கட்டோடே கைவிட்டு அவன் மட்கலம் வினைதொழில்
செய்து ஜீவனம்பண்ணினான். அவன் தொழிற்சாலை வாச
லில் "எல்லாம் வல்ல ஈசன் யாவையும் படைத்த பகவன்
† வாதியைக் குலாலனாக்கினார்" எனச் சிலையில் அறிக்கை
செதுக்குவித்து வைத்தான்.

பட்டர்பேரில் அரசனுக்கு இன்னும் விசுவாசம் உண்டா
கவில்லை. அவன் அறிந்த அந்தரங்கத்தைப் பிறருக்குச்
சொல்வானென்றும் தன் வசத்தினின்று தப்பிவிடுவானெ
ன்றும் அரசன் முன்போல் அவனைக் கட்டுக்காவல் செய்
வித்தான். அவனுக்கு நூதனமாகக் கட்டுவித்துக் கொ

* ரசேந்திரம்—the philosopher's stone.

† வாதி—an alchemist.

டுத்த தொழிற்சாலைகளுக்கும் சூளைகளுக்குங்கூட ராணுவ சேவகரைக் காவல்வைத்தான். அன்றியும் அந்தக் குலாலனைத் தப்பவிடாமற் காத்துக்கொள்ளும் பாரத்தை மேலான ராணுவ உத்தியோகஸ்தர்கள் ஆறு பெயர்மீது சுமத்தினான்.

அப்பால் நூதனமாக ஏற்பட்ட சூளைகளில் பட்கர் செய்த பரீட்சைகள் நன்றாய் வாய்த்தன. அவன் வனைந்த பீங்கானை நாணயமானதென்று விலை ஏறக்கொடுத்து வாங்கினார்கள். அது கண்டு, அரசன் பீங்கான் வனைதொழிற்சாலை ஒன்று ஸ்தாபிக்கச் சங்கற்பித்தான். டெல்ப்ட் நகரத்தில் பீங்கான்வேலை நடந்துபற்றி உலாந்ததேசத்திற் செல்வம் பெருகியது லோகப்பிரசித்தந்தானே. நாமும் அவ்வாறே பீங்கான் செய்து பெருஞ்செல்வம் பெற்றாலென்ன? என்று எண்ணமிட்டு அரசன் மீஸெனைச் சேர்ந்த அல்பொக்ஸ்பர்க்கில் "விஸ்தாரமான பீங்கான் வனைதொழிற்சாலை" ஒன்றை ஸ்தாபிக்கும்படி 1710-ம் ௵ ஜனுவரி 23௳ கட்டளை பிறப்பித்தான். அந்தக் கட்டளை லத்தீன்-ப்ரென்சு-டச்சு பாஷைகளில் மொழிபெயர்ப்பித்து, சகல ஐரோப்பிய அரசர் சமஸ்தானங்களிலும் உள்ள ஸ்தானாதிபதிகளால் அங்கங்கே பிரசித்தம் செய்யப்பட்டது. அக்கட்டளையில் அரசன் வெளியிட்ட வரலாறு இது:—ஸ்வீடிஷ் தளம் தாவடிவந்து இளைப்பித்தும் மிகவும் இளைத்துப்போன ஸாக்ஸனி தேசத்தின் க்ஷேமத்தை அபிவிர்த்தி செய்யும் பொருட்டுத் தரையினில் உள்ள ஐசுவரியபதார்த்தங்களைக் கருத்தாய்ப் பார்வையிடுவித்தேன். இந்த விசாரணையை இணக்கமாய்ச் செய்துவரும்படி சில நிபுணரைச் சேகரித்து விட்டேன். அவர்கள் பலவாறு பரீக்ஷைசெய்து ஒருவகைச் செம்பீங்கான் செய்யும் முறை கண்டறிந்தார்கள். அது இந்திய பீங்கானைப்போலல்ல, மிகவும் நாணயமானது. அன்றியும் அவர்கள் வர்ணக்கலமும் பீங்கானும் வனையும்

வகை அறிந்தார்கள். அவைகளைக் கத்தியால் வெட்டலாம், சாணைபிடிக்கலாம்; தளுக்கிடலாம். அவை இந்திய கலங்களுக்கு இடையா. அறுதியில் வெள்ளைப் பீங்கானும் செய்து சித்தி கண்டிருக்கிறார்கள். இனி இந்தப் பீங்கான் வகையும் திரளாகச் செய்யலாமெனத் தோன்றுகிறது. சர்க்கார் செலவில் ஸாக்ஸனியில் ஸ்தாபிக்கப்படும் தொழிற்சாலையில் அன்னிய தேசஸ்தரின் பீங்கான் வினையும் தொழில் நுணுக்கம் அறிந்த நிபுணர்களும், கைப்பாடுபட்டு உழைத்துக் களை தெளிந்தவர்களும் சிலர் வேண்டும். அவர்கள் காரியதரிசிகளின் சகாயராக நியமிக்கப்படுவார்கள். உயர்ந்த சம்பளம் கிடைக்கும்". அக்காலத்தில பட்கர் யூகித்தறிந்த வித்தையின் வரலாறு இந்தப் * பட்டோலையில் தெளிய விளங்குகின்றது.

ஸாக்ஸனி தேசத்திற்கும் அதன் அரசனுக்கும் செய்த பேருபகாரத்திற்காக அரசன் பட்கரை முதலில் பீங்கான் வினைதொழிற்சாலையின் காரியதரிசியாக்கி, அப்பால் அவனுக்கு உயர்ந்த பரன் பட்டமும் சூட்டினனென்று ஜர்மானியாவிற் பிரசுரமான பத்திரிகைகளில் கண்டிருக்கின்றது. இந்தப் பிரதிஷ்டைகள் அவனுக்குத் தகும். அதற்குச் சந்தேகம் இல்லை. ஆனாலும் அரசன் அவனைச் சிறக்கணித்து இரக்கமற்று வருத்தி அபகாரம் செய்தான். உத்தியோகஸ்தர்கள் இருவர் (மத்தேயு, நீமித்ஸ்) அத்தொழிற்சாலைகளுக்கு அதிகாரிகளாய் ஏற்பட்டார்கள். பட்கரோ அவர்கள் அதிகாரவசப்பட்டுக் கூலியாளுக்கு மேஸ்திரியாயிருந்தான், அப்பொழுதே அவன் வைதியமாகி நிர்ப்பந்தப்பட்டான். மீஸ்ஸெனில் தொழிற்சாலை கட்டும்பொழுது, அவன் உதவி அரசனுக்கு இன்றியமையாதிருக்கும், அவனை அரசன் ஓரிடத்தில் விசாரமற்று அடங்கியிருக்க விடாமல் காவற் சேவகருடன் ட்ரெஸ்டெனுக்கு அழைப்பித்து மீள

* பட்டோலை—a royal proclamation, edict.

அங்கிருந்து அனுப்பினான். வேலைகள் எல்லாம் முடிந்த பின்னும் ராத்திரிதோறும் அவனை ஒரு அறைக்குள் விட்டுக் கதவைப் பூட்டிவிடுத்தான். இந்த நிர்ப்பந்தம் எல்லாம் பட்ட பட்டு வருந்தி அவன் மனம் குன்றிப்போயிற்று. அவன் அடிக்கடி அரசனுக்கு விண்ணப்பப் பத்திரம் அனுப்பிச் சித்தம் இரங்கித் தன் உபத்திரவத்தைத் தணிக்கும்படி பிரார்த்தித்தான். அவ்விண்ணப்பங்கள் சில கல்லையும் மெழுகாய் உருக்கத்தக்கவைகள். அவன் ஒரு விண்ணப்பத்தில் "நான் பீங்கான் வனையும் தொழில் ஒன்றைத் தவிர மற்றெதையும் சிந்தியேன்" என்றும், மற்றொரு விண்ணப்பத்தில் "ஆக்ஷமம் கண்ட எவனும் இதுவரையில் செய்த வேலைக்கு மிஞ்ச நான் செய்வேன்! எனக்குச் சிறைமீட்சி, சிறைமீட்சி மாத்திரம் தந்தருளப் பிரார்த்திக்கிறேன்" என்றும் எழுதினான்.

அரசன் இம்மனுக்களுக்குச் செவிகொடுத்தானில்லை. அவன் ரொக்கவிரயம் செய்யவும் உபகாரம் செய்யவும் சித்தமாயிருந்தான். சிறை நீக்கவோ அவன் மனம் ஒப்பவில்லை. அவன் பட்கரைத் தனக்கு உரியனென்று சிறக்கணித்தான். இந்த நிர்ப்பந்தத்தில் இருந்து துன்புற்ற பட்கர் சிறிது காலம் உழைத்துக்கொண்டுவந்தான். இரண்டொரு வருஷம் உழைத்த பின்னர் அவன் நிர்விசாரியானான், அவனுக்கு உலகப்பற்று விட்டுப்போயிற்று. நான் எனது என்னும் அபிமானம் அடியோடே இல்லாதொழிந்தது. அவன் மது உண்ணத் தலைப்பட்டான். சாமானியன் ஒன்று செய்தால், அது நன்றானாலும் தீதானாலும் பிறர் அதைக் கவனிக்கிறதில்லை. சற்று வியாபகன் செய்யும் தீமையையும் பாராட்டித் தாமும் அவ்வாறு செய்வார்கள். அப்படிச் செய்வது தமக்குப் பெருமையென்று கொண்டாடுவார்கள். *பிரமாண பலத்தின் இயற்கை இப்படி இருக்கின்றது. பட்கர் குடித்ததைக் கண்டவுடன் அத்தொழிற்சாலையில் வேலை

* பிரமாண பலம்—force of example.

செய்தவர்களிற் பெரும்பாலார் தாமும் குடியரானார்கள். ஆகவே, அவர்களுக்கு ஓயாமல் சண்டை சச்சரவு உண்டாயின. அடிக்கடி ராணுவ சேவகர் போய்ச் சண்டையிடும் அந்தக் குயவனை விலக்கிக் கலகம் தீர்க்கும்படி நேரிட்டது. சிறிது காலம் சென்று அவர்கள் எல்லாரும் (முந்நூறு பெயருக்கு அதிகம்) ராஜதுரோகிகளென்று சிறைச்சாலையில் போடப்பட்டார்கள்.

வரவர மெலிவுற்று பட்கர் மோசமான வியாதியில் விழுந்தான். 1718-ம் ௵ மேமீ அவன் பிராணன் நிற்காதென்று நாழிகைதோறும் நினைத்திருந்தார்கள். அவ்வருமருந்தன்ன மூடியன் இறந்துபோனால் என் செய்வேனென்று ஏங்கி, அரசன் காற்றுவாங்கிலே காவற் சேவகருடன் வண்டிச்சவாரி போகும்படி அவனுக்கு இடம் கொடுத்தான். ஒருவாறு ஸ்வஸ்தம் அடைந்தபின் அவன் இடைக்கிடை ட்ரொஸ்டெனுக்குப் போய்வர இடம் பெற்றான். 1714-ம் ஆண்டு ஏப்ரில் மாசம் பட்கருக்கு எழுதியனுப்பிய கடிதத்தில் அரசன் சிறை நீக்கிவிடுவதாக வாக்கிட்டிருந்தான். ஆனால் அவ்வாக்குப் பிறகும் பிரயோஜனப்படவில்லை. சமயம் முந்திவிட்டது. மாறிமாறிக் குடிப்பதும் உழைப்பதுமே மணியமாயிருந்ததனால் அவன் உள்ளுடைந்து உடல் மெலிந்துபோயிற்று. இடைக்கிடை சித்தம் தெளிந்து மேலான அபிப்பிராயம் ஜனிப்பதும் உண்டு. அவனைக் கட்டாயமாய்ப் பிடித்துச் சிறையிருத்தியதனால் அடிக்கடி சௌக்கியத்தாழ்வு கண்டு வருந்தினான். அவன் பின்னும் நாலைந்து வருஷம் நடைப்பிணமாயிருந்து அழுந்தி 1719-ம் ௵ மார்ச்சுமீ 13௳ மரணமடைந்தான். தீராத்துயருக்கு ஆளாயிருந்த அவன் இவ்வாறு மரணத்தால் அத்துயரினின்று விடுவிக்கப்பட்டான். இறக்கும்பொழுது பட்கருக்குப் பருவம் முப்பத்தைந்து. மீஸெனில் உள்ள ஜொஹானிஸ் மசானத்தில் அவனும் சரி ஒரு நாயும் சரியென்று பார்ப்பவர்களுக்குத் தோன்றும்படி அவன் உடலை

ராத்திரிகாலத்தில் க்ஷேமித்தார்கள். ஸாக்ஸனி தேசத்திற்கு உத்தம உபகாரியாகிய பட்கர் இருக்கும் நாள் எல்லாம் பட்ட பாடும் இது, இறக்கும் சமயத்தில் கெட்ட பேடும் இதே.

பீங்கான் வினைக்கு விற்கத் தொடங்கவும், ஸாக்ஸனி தேசத்தில் ஆதனமாக முக்கிய அரசிறை வருவழி ஒன்று ஏற்பட்டது; அதனால் ஸாக்ஸனி அரசனுக்குச் செல்வம் பெருகுவதைக் கண்டு ஐரோப்பிய ஏகாதிபதிகளிற் பெரும்பாலார் அவனைப்போலத் தாமும் பீங்கான் வினைவிக்கத் தொடங்கினார்கள். வன்மையான பீங்கான் செய்யும் முறையை பட்கர் கண்டறியுமுன் பதினைந்து வருஷகாலமாய் ஸெவ்ரெ கலெளடில் மென்மையான பீங்கான் செய்துகொண்டுவந்தார்கள். வன்பீங்கான் வரவும் அதே காரணமான தென்று வியக்கப்பட்டது. ஸெவ்ரெஸில் வன்பீங்கான் வினையத் தொடங்கியது 1770-ம் வருஷம். வரவர எல்லோர்க்கும் அதன்பெயரில் நாட்டம் உண்டாக, மென்பீங்கானைத் தேடுவாருமில்லை, வினைவாரும் இல்லை. இப்பொழுது பிரான்சியர் கைத்தொழிலால் அமையும் பொருள்வகையுள் விசேஷ திரவிய உற்பத்திக்கு இடமாயிருப்பது பீங்கான். ப்ரென்சு பீங்கானே சிரேஷ்டம். இதற்கு ஆக்ஷேபம் இல்லை.]

அங்கிலேய குலாலனாகிய ஜொஸையா உவெட்ஜ்வுட் (Josiah Wedgwood)டின் சரித்திரம் பலிஸ்ஸி பட்கர் எனும் இருவர் சரித்திரம்போல பல வேறுபாடுள்ளதல்ல, அதிக அனுகூலம் அமையப்பெற்றது. அவன் பிறந்த காலானுகூலம் மெத்தவும் உண்டு. சென்ற சதாப்த மத்தியகாலத்திற்குமுன் வினைதொழிற்றிறத்தில் உத்தம தரத்தாராகிய ஐரோப்பா தேசத்தாரிற் பெரும்பாலார்க்கு அங்கிலேயர் ஈடல்ல, இளைத்தவர்களே. ஆனாலும் கலம் வினையும் குயவர் ஸ்டாப்பர்ட்ஷியர் மாகாணத்தில் வெகு பெயர் இருந்தார். உவெட்ஜ்வுட் எனும் பெயருள்ள குலாலன் இவன்

ஒருவன் மாத்திரம் அல்ல, பின்னும் எத்தனையோ பெயர் உண்டு. அவர்கள் வனைந்த கலமுதலியவைகள் நாணயமானவைகளல்ல, மட்டித்தரம். பெரும்பாலும் அவர்கள் வனைந்தது செங்கல் வர்ணச் சாதா மட்டிப்பீங்கான். சூளையில் இட்டுச் சுடுமுன் ஈரம் உலராதிருக்கும்பொழுது அப்பீங்கான்களுக்கு அவரவர் அடையாளம் நகத்தாற் கீறுவதுபோலக் கீறுவார்கள். மட்பாண்டவகையில் நாணயமானவைகள் முக்கியமாய் உலாந்ததேசத்தைச் சேர்ந்த டெல்ப்ட் நகரினின்றும், தாகசாந்திக்கு உதவும் கற்பாத்திரம் கலோனினின்றும் இங்கிலாந்திற்குப் போய்ச்சேரும். அன்னிய தேசிகளாகிய குயவர் இருவர் ந்யுரெம்பர்க்கினின்று போய்ச் சிறிது காலம் ஸ்டாப்பர்ட்ஷீயரில் இறங்கியிருந்தார்கள். சகோதரரான அவர்கள் பெயர் ஈலர்ஸ் (Elers). அவர்கள் சற்றுப் பணிக்கான கலங்களை வனைந்தார்கள். அப்பொழுது அங்குள்ளோர் அக்கலங்களைப் புதுமையாய்க் கொண்டாடினார்கள். அவர்கள் நாட்பட அங்கிருக்கவில்லை. கொஞ்சக் காலத்திற்குள் செல்ஸியாவிற்குப் போய்ச் சித்திரக்கலம் மாத்திரம் வனைந்து விற்றார்கள். ஏதாயினும் கூராயுதத்தாற் கீறினும் கீறுபடாத தனுக்குள்ள பீங்கான் இங்கிலாந்தில் செய்தவர் இல்லை. கெடு நாள்வரையில் ஸ்டாப்பர்ட்ஷீயர் மாகாணத்தில் வனைந்து வெள்ளைப் பீங்கானென்று கொண்டாடியது வெள்ளையே அல்ல, சற்று அழுக்கு படிந்து பாலேடுபோலப் பழுப்பு வர்ணமுள்ளது. இங்கிலாந்தில் குயக்கலம் வனைதிறம் இவ்வண்ணம் இருக்கையில், 1730-ம் வருஷம் பர்ஸ்லெம் எனும் ஊரில் ஜோஸையா உவெட்ஜ்வுட் என்பவன் பிறந்தான். அவன் இறந்தது அதற்கு அறுபத்து நாலு வருஷம் சென்றபின். அந்த அறுபத்து நாலு வருஷத்திற்குள் இங்கிலாந்தில் குயக்கலம் வனைதொழில் பூர்த்தியாகத் திருந்திச் சிறந்தது. ஊக்கத்தினாலும், கைச்சமர்த்தினாலும் விவேகத்தினாலும் அவன் நூதனமாக அடிகோலி அந்தத் தொழிலை உரப்பித்

தான். அவனுடைய * சமாதிசாசனத்தில் "திருத்தமற்று எவரும் நாடாதிருந்த அற்ப வினைதொழிலைத் திருத்திச் சிறப்பித்துத் தேச வர்த்தகத்திற்கு முக்கியதுறை ஆக்கினார்" என்று வரைந்திருக்கின்றது.

அப்போதப்போது சாமானியராகப் பிறந்தவர்கள் சிலர் மனவலி உடையோராகி எப்பொழுதும் கைத்தொழில் முயற்சி செய்துவர, கைப்பாடுபட்டுப் பிழைக்கும் ஜனங்கள் அவர்களைப் பார்த்துத் தாமும் திருந்தி முன்னுக்குவருவார்கள். அன்றியும் மேற்குறித்த சிலர் ஜாக்கிரதையும் எடுத்த கருமம் தொடுத்து முடிக்கும் துணிவுமுடையவர்கள். இதைக் காணும் எவ்வகைத் தொழில் செய்வோரும் அவரவர் துறையிற் சோர்பற உழைக்கப் பயில்வார்கள். மேலும் அவர்கள் தேசத்திற்கு உண்டாம் பெருமை பெரும்பாலும் அவர்களாலேயே உண்டாகும். ஜொசையா உவெட்ஜூடும் உழைத்து இளைக்காத அவர்களில் ஒருவனே. ஆர்க்ரைட்டைப்போல் அவனும் உடன்பிறந்தார் பன்னிருவருக்கு இளையோன். அவன் தகப்பனைப்போலப் பாட்டன் சின்னப்பாட்டன் இம்மூவரும் குயவர்தாம். அவன் சின்னஞ்சிறியனாயிருக்கையில் தகப்பன் இறந்துபோனான். அவனுக்கு உள்ள பிதிரார்ஜிதம் ஆக இருநூறு ரூபாய். அவன் ஒரு கிராமப் பாடசாலையில் எழுத வாசிக்கப் பயின்றிருந்தான். தந்தை இறந்தபின், அவனைப் பள்ளிக்குப் போகாமல் நிறுத்திவிட்டு, தமையனுடைய சிறிய வினைதொழிற் சாலையில் நூல் சுற்றும் வேலை செய்யவைத்தார்கள். அப்பொழுது அவனுக்குப் பருவம் ஆகப் பதினொன்று. அவன் முதல் முதல் உழைக்கத் தொடங்கியது அங்கே தான். அவ்வுழைப்புத் தொடக்கத்தை 'ஏணியின் அடிப்பழு' என்று அவனே எழுதியிருக்கிறான். அப்பால் சொற்ப காலத்திற்குள் அவனுக்கு அம்மை வியாதி மிகவும் உக்கிர

---

* சமாதிசாசனம் = epitaph, an inscription upon a monument.

மாய்க் கண்டது. அதனால் விளைந்த பீடை ஜீவனை உள்ளளவும் தொலையவில்லை. அம்மை வியாதி தீரவும் வலது முழந்தாளில் ஒரு ரோகம் ஜனித்து மாறுவதும் அடிக்கடி மறந்து உண்டாவதுமாயிருந்து, வெகு வருஷம் சென்றதன்பின் அந்தக் கால் தறிக்கப்பட்டது. கொஞ்சக் காலத்திற்குமுன் மெஸ். க்லாட்ஸ்டோன் துரை பர்ஸ்லெம் ஊரில் உவெட்ஜ்வுடின் புகழ்ச்சியைக் குறித்துச் செய்த சாதுரியமான பிரசங்கத்தில் அவனைப் பீடித்த ரோகந்தான் பின்னிட்டு அவன் அடைந்த மேம்பாட்டின் காரணமெனத் தோன்றுகிறது என மொழிந்தது நன்றாயிருக்கின்றது. "கால் போனபின், சரீர உறுப்பு எல்லாம் இருந்து அவைகளைப் பிரயோகிக்க வகை அறிந்து மனவலியுடன் பிரவிர்த்திக்கும் ஆங்கிலேயஜாதி இயற்கை அவனுக்கு வருமா வராது. அது வராதிருப்பினும், மற்றேதாயினும் பெருங்குறையில் வல்லவனாதல் கூடாதாவென்று தனக்குள்ளே சிந்தித்துப்பார்த்தான். அவன் தன் உள்ளிந்திரியங்களை ஆராய்ந்துபார்த்தான். தான் பயிலத் தொடங்கிய தொழிலின் இயற்கையையும் சூக்ஷமத்தையும் உள்ளுறத் தியானித்தான். இப்படி எல்லாம் செய்யும்படி அவன் உறுப்புக்குறை அவனை நெருக்கி ஏவியது. இதனால் விளைந்த சித்தி என்ன - சொல்லுகிறேன். அத்தொழிலின் இயற்கையை அவன் சித்தம் தெளிய அறிந்து கிரஹித்துக்கொண்டான். இந்தச் சித்தி மட்பாண்டம் வனைதலில் உலகறியச் சிறந்த அத்தேனைய குயவருக்கும் பொறாமை உண்டாக்கத்தக்கது. இது தெடரிய சித்தியென்று அவர்களும் ஒப்புக்கொள்வது நிசம்."

தமயன் வசத்தில் இருந்து தொழில் பழகக் குறித்த காலம் சென்றதன்மேல், உவெட்ஜ்வுட் மற்றொரு தொழிலாளியுடன் பங்குகூடி, கத்திப்பிடி - பரணி - பெட்டி-வீட்டில் வழங்கும் வேறு வித விதப் பொருள் பல சிறக்கச் செய்து

விற்றுக்கொண்டுவந்தான். பின்பு மற்றொரு தொழில்செய்வோனுடன் பங்குகூடிப் போஜனப்பந்திக்குரிய பீங்கான்*பச்சடைகாய்த்தழை-விளக்குத்தான் - மூக்குத்தூட்சிமிழ் முதலியவைகள் செய்துவிற்றான். இதிலும் அவன் தேறவில்லை. அப்பால் பங்குச்செட்டை விட்டு 1759-ம் ஆண்டு பர்ஸ்லெம் ஊரில் தன் பாடாக வேலை தொடங்கினான். அங்கு அவன் ஜாக்கிரதையாய் வனைதொழில் செய்தான். அத்தொழிலில் முன் இல்லாத அங்கங்களைச் சேர்த்தான். வரவர அவன் தொழில் பெருகியது. அக்காலத்தில் ஸ்டாப்பர்ட்ஷீயரில் வனையப்படும் பாண்டங்கள் உருநலம், நிறநலம் - தளுக்கு நலமுள்ளவைகளல்ல - உடைதாளத் தக்கவைகளுமல்ல. இந்நலம் அனைத்தும் பொருந்த நாணயமான பாண்டம செய்வதே அவன் முக்கிய நாட்டமாயிருந்தது. இத்தொழிலைக் கசடறக் கற்கும்பொருட்டு வேலை ஒழிந்த வேளையில் ரசாயன சாஸ்திரம் கற்றுக்கொண்டுவந்தான். உருக்குதல்-பளிங்குமினுக்கிடுதல்-களிமண்பேதம் அறிதல் இவைகளைப்பற்றி அவன் பற்பல பரீக்ஷைகள் செய்தான்; எதையும் சூக்ஷ்மமாய் ஆய்ந்து திட்பநுட்பமாய் உற்றறியும் அவனுக்கு நெருப்புக்கற் சேர்க்கையுள்ள ஒரு வகைக் கருமண்ணைத்தீயில் வைத்தால் வெளுத்துப்போமென்று திருஷ்டாந்த பூர்வமாகத் தெரியவந்தது. இந்த அதிசயத்தைக் கண்டு மனத்தூரசில் தூக்கிப் பார்க்கப் பார்க்க, நெருப்புக் கல்லைக் குயக்கலம் வனைகளத்தில் உள்ள செந்தூளுடன் கலக்கும் புத்தி பிறந்தது. கலந்த கலப்பை வேகவைக்க அதற்கு வெண்ணிறம் பெயர்ந்தது. அதற்கு ஸ்வச்சமான பளிங்குத் தளுக்குள்ள மினுக்குப் பூச, அது மிகவும் நாணயமான பாண்டமாயிற்று. பின்னாளில் அங்கிலேய மட்பாண்டம் எனப் பெயர் வழங்கத் தொடங்கி விஸ்தாரம் விக்கிரயமாகி எவர்க்கும் உதவும் பாத்திரம் ஆகியது அதே.

பச்சடைகாய்த்தழை = green pickle leaves.

உவெட்ஜ்வுட் சிறிது காலம் சூளைகளாற் பிராணசங்கடப் பட்டான். ஆனாலும் ப்லிஸ்ஸி பட்டபாடு அவன் படவில்லை. பலிஸ்ஸியைப் போல் அவனும் நேர்ந்த சங்கடங்களை நிலை குலையாமல் மேற்கொண்டது அடுத்தடுத்துச் செய்த பரீக்ஷைகளாலும், துணிவு குன்றாத் தொடர் முயற்சியினாலுமே. போஜனபந்திக்குரிய பீங்கான் வனைய அவன் ஆதியிற் செய்த எத்தனம் எல்லாம் அவலமாய்ப்போயின. பல மாசம் உழைத்த உழைப்பும் பெரும்பாலும் ஒரு நாளில் நாசமாய்ப்போயிற்று. அவன் கெடு நாள்வரையில் விட்டு விடாமல் அந்தப் பரீட்சை செய்து, காலமும் — ரொக்கமும் — கஷ்டமும் வெகுவாய்ச் செலவழிந்தபின்புதான் தகுதியான பளிங்குத் தனக்குக் கண்டுபிடித்தான். அவன் கண்டதைக் கை நழுவ விடும் பிரகிருதியுள்ளவனல்ல. பதறாமற் பொறுத்து உழைத்துச் செய்ய நினைத்ததைச் சாதித்துச் சித்தி பெற்றான். குயக்கலத்தை நாணயமாக வனையும் ஆசை அவனைப் பிடித்து ஆட்டிற்று. கொடிப்பொழுதேனும் அவன் அதை மறந்திருக்கவில்லை. அவன் தடை அறுத்துச் சந்தேகம் தெளிந்து, வெண்கற்பாண்டமும் எட்டு வர்ணக் கலமும் திரள் திரளாய் வனைந்து அன்னிய தேசங்களுக்கு அனுப்பியும் தன் தேசத்தில் விற்றும் சீமானான பின்னும், வரவர வித்தையாக வனைந்து கலங்களை மேலு மேலும் சிறப்பித்துக்கொண்டுவந்தான். நாற்றிசையிலுமுள்ள குலாலருக்கு அவன் இயற்கையைக் காணக் காண நூதன பிரவிர்த்தி அம்மாகாணம் எங்கும் உண்டாயிற்று. இவ்வாறே வர வர பிரித்தானியர் கைத்தொழில் முயற்சித் துறைகளிற் பெருந்துறையாகிய வனைதொழிற்றுறை உரமாய் அடிகோலியது. ஜீவன் உள்ளளவும் அவன் நாட்டம் செய்வதைத் திருந்தச் செய்யவேண்டுமென்பதே. "வனையும் எவ்வகைப் பாண்டத்தையும் தப்புக்கேடாய் வனைவதினும் தீர்ப்பாய் விட்டுவிடவேண்டும்" என்று சங்கற்பித்திருப்பதாக அவன் வெளியிட்டான்.

குலத்திற் பிறந்து செல்வாக்குள்ள பிரபுக்கள் வெகு பெயர் உவெட்ஜ்வுட்க்கு இதயபூர்வமாய் உதவி புரிந்தார்கள். அவன் சத்தியசித்தனாகத் தொழில் செய்தது கண்டு, அவனைப்போல் வேறு வேறு துறைகளில் சத்தியத்தை அனுசரித்து நடந்தவர்களுக்கு அவன்மீது அபிமானம் உண்டாயிற்று. உண்டாகவே, அவர்கள் அவனுக்கு உதவி புரிந்து உற்சாகம் கொளுத்தினார்கள். இங்கிலாந்தில் வனைந்த பீங்கான் ஆதியில் ராஜ. பந்திபோஜனத்திற்கு அனுகூலித்தது சார்லட் ராக்கினி காலத்தில். அக்கலங்களை அந்த ராக்கினிக்கு வனைந்து கொடுத்தவன் அவனே. ஆனதுபற்றிப் பின்னிட்டு அவ்வகைப் பாண்டத்திற்கு "ராக்கினி பாண்டம்" எனப் பெயர் வழங்கியது. அரண்மனையார்க்கு வேண்டும் பாண்டவகை செய்துகொடுக்க உவெட்ஜ்வுட் நியதிபெற்றான். இச்சுதந்தரத்தை அவன் பிரபுப்பட்டத்திலும் பெரும்பட்டமென நன்குமதித்தான். பார்த்து வனையும்படி சிறந்து விலை உயர்ந்த சில பீங்கான்களை அவனிடத்தில் மாதிரியாய்க் கொடுக்க அவன் வனைந்த பாண்டமும் மாதிரிப்பாண்டமும் ஒன்றுக்கு ஒன்று அணுவும் வேறுபடாது ஒத்திருந்தது கண்டு எல்லாரும் ஆச்சரியப்பட்டனர். ஹெர்க்யுலேனியத்தினின்று கொண்டுவந்து வைத்திருந்த பூர்வகாலத்துச் சிறந்த சித்திரக்கலங்கள் சிலவற்றை அவன் ஸ்ரீ வில்லியம் ஹாமில்தன் துரையிடத்தில் இரவல்வாங்கி, அச்சம் அவைகளைப்போலும் கலங்களைப் பணிக்காய் வனைந்தான். ஒரு முறை பார்பெரினி வேஸ் என உலகறியப் பெயர் வழங்கிய விசித்திரமான தட்டம் ஏலத்தில் வந்தபொழுது போர்த்லாந்து ட்யூக்பிரபு பத்தினியாரும் உவெட்ஜ்வுட்டும் அதில் நாட்டம் வைத்து ஒருவர்க்கு ஒருவர் எதிரிட்டு விலை ஏற்றிக் கேட்டார்கள். உவெட்ஜ்வுட் 17,850-ரூபாய் வரையும் விலை உயர்த்திக் கேட்டு அப்பால் மாளாதென்று விட்டுவிட, அந்தப் பிராட்டியார் 18,900-ரூபாய் கொடுத்து வாங்கினார். பின்பு உவெ

ட்ஜூட் அதை விரும்பிக் கேட்ட நிமித்தம் இன்னதென்று அறிந்தோர் சொல்லக் கேள்வியுற்று லெடி பிரபுபத்தினியார் உதாரமதியுடன் அந்தக்ஷணமே அவனை அழைத்து நீ விரும்பியவாறு இந்தப் பார்த்துத் தட்டம் ஒன்று வனைந்து கொள்ளென்று கொடுத்துதவினர். அவன் அதைப் பார்த்து ஐம்பது தட்டம் வனைந்து முடித்தான். அதற்குச் சென்ற செலவு 25,000-ரூபாய். தட்டம் விற்றுத் தேறிய பணம் அது செய்யச் சென்ற செலவிற்குக் கட்டிவரவில்லை. அத்துனையும் நஷ்டந்தான். ஆனாலும், பெரிதல்ல, என்ன அதிசயமானாலும் சரி, ஒருவன் செய்ததைக் கண் கண்டால் கைத்திறமும் முயற்சித்திறமுமுள்ள அங்கிலேயர் தவறுமற் சாதிக்கமாட்டுவார்கள், சாதியாது விடார்கள் எனத் தெரியக்காட்ட அவன் எண்ணிய எண்ணம் ஈடேறிற்று.

உவெட்ஜூட் நினைத்ததைச் சாதிக்கும்படி துணையாகக் கொண்ட சாதனங்கள் ரசவாதி குகையும், புராதன கலைஞன் அறிவும், ஓவியன் கைத்திறமுமே. இளைஞனாயிருக்கும் பொழுதே அவன் ப்லாக்ஸ்மனைக் கண்டு பரிச்சயமானான். இந்தப் பழக்கம் இருவர்க்கும் அனுகூலமாய் முடிந்தது. உவெட்ஜூட்டால் ப்லாக்ஸ்மனுக்கு விவேகவிர்த்தி விஸ்தாரம் உண்டாயிற்று. ப்லாக்ஸ்மனால் உவெட்ஜூட் மட்கலம் வனையவும் பீங்கான் வனையவும் சிறந்த மாதிரிகளைத் திரளாய்க் கற்றுக்கொண்டான். ஆகவே அவன் வனைந்த கல முதலியனவைகள் கலத்திற்குக் கலமாகவும் கண்கொள்ளா அழகுள்ள விநோத வஸ்துக்களாகவும் இருந்தன. அவைகளைக் கண்டு கண்டு, பூர்வத்தார் கைத்தொழிற்றிறத்தை யாவரும் மெச்சி முயன்று பயின்று கைதிருந்தினார்கள். அன்றியும், அவதானமாய்ப் பரீக்ஷை செய்து பார்க்கப் பார்க்க, பீங்கான், மட்கலம் முதலியவற்றிற் சித்திரம் எழுதும் வித்தையும் அவனுக்குச் சாதகமாயிற்று. இவ்வித்தை நூதனமல்ல, பூர்வகாலத்தில் எதிரஸ்க ஜாதியார் இவ்வித்தையிற் கைதேர்ந்தவர்கள். ஆனால், ப்லினி காலத்திற்குப்பின்

இதை அறிந்து பயின்றவர்கள் இல்லை. உவெட்ஜ்வுட் வினை தொழிலின்றி, சாஸ்திர நுட்பங்களிலும் வல்லவனும் சாஸ்திர அபிவிர்த்திக்கு அநுகூலியுமானான். அவன் யூகித்து இயற்றிய உஷ்ணமானி எனும் யந்திரம் நாளதுவரையில் அவன் பெயரால் வழங்கிவருகின்றது. தேசத்திற்கு உபயோகமான சகல உபாயங்களையும் அவன் சலிப்பறப் பிரதிபாலித்துவந்தவன். திரெந்து - மெர்ஸி வெட்டாறு ஏற்படுமுன் இங்கிலாந்தின் கீழ்கரையினின்று மேல்கரைக்கு நாட்டகத்தினூடே கப்பல் போக வரப் பாதை இல்லை. முக்கியமாய் அந்தத் தேசாபிமானி செய்த முயற்சியினாலும், ப்ரின்ட்லி எனும் சிற்பியுடைய சாமர்த்தியத்தினாலுமே அவ்வெட்டாறு ஏற்பட்டது. அம்மாகாணத்தார் தெரு வளமின்றி அலைக் கோலப்பட்டது கண்டு அந்தத் தர்மிஷ்டன் குயக்களத்தை ஊடறுத்துச் செல்லும்படி பத்து மைல் தூரம் திருகுமாறு தெரு ஒன்று வயணமாகச் செப்பனிடுவித்தான். அவன் கீர்த்தி அட்ட திக்கும் எட்டிற்று. அவன் முன்பு பார்ஸிலேமிலும் அப்பால் எத்ரூரியாவிலும் அடிகோலிக் கட்டுவித்த தொழிற்சாலைகளின் அதிசயத்தை ஐரோப்பாவில் அங்கங்கிருந்து பெரியோர்கள் வெகு பெயர் போய்ப் பார்த்தார்கள்.

உவெட்ஜ்வுட் உழைத்த உழைப்பின் பயனை அங்கிலேயர் அனைவரும் இப்பொழுது அனுபவித்துவருகிறார்கள். அவன ஜன்மகாலத்தில் இங்கிலாந்தில் மட்கலம் வினைதொழில் வயணமாய் அறிந்தோர் இல்லை. அவன் மரணகாலத்திலோ வினைதொழிலே அத்தேசத்தார்க்கு இன்றி அமையாத அருந்தொழில்களில் ஒன்றாயிற்று. அவன் இளைஞனாயிருந்தபொழுது அங்கிலேயர் தமக்கு வேண்டும் ஆய்க்கலங்களைப் புறத்தேசங்களினின்று தருவித்துக்கொள்வார்கள். அவன் பருவம் முதிருமுன் இங்கிலாந்தில் வனையும் மட்கலமுதலியவைகள் அங்கிலேயர் செலவிற்கும் கண்டு, இதர தேசங்களுக்கும் குறையற ஏற்றுமதிசெய்தனுப்பப்பட்டன. இங்கிலாந்தில்

வனைந்த கலமுதலிய சரக்குகளுக்கு இதர தேசங்களில் கிர்
ணைவிகிதம் ஏற விதித்திருந்தும் சரக்கேற்றுமதி எவ்வள
வும் குறையவில்லை. வர்த்தகர் திரள் திரளாய் ஏற்றிக்கொ
ண்டுபோய் விற்றார்கள். உவெட்ஜ்வுட் தன் தொழில் வரலா
றுகளைப் பற்றிப் பார்லிமெந்தில் சாக்ஷி பகர்ந்தது 1785-ம்
வருஷம். அப்பொழுது அவன் வனைதொழில் கையிட்டு ஆக
முப்பது வருஷம். அவன் வாக்குமூலமாய் வெளிப்பட்ட சில
முக்கியமான குறிப்புகளை இதன் அடியிற் காண்க:—அவன்
காலத்திற்கு முன் குயக்கலம் வனைதொழிலில் கைதேர்ந்த
வர்கள் இல்லை. கலம் துப்புக்கேடாய் வனைந்து பிழைத்
தவர்கள் மிகவும் சிலர். அவர்களுக்கு உழைப்புக்குத் தக்க
கூலி கிடைக்கவில்லை. அவன் காலத்திலோ மட்கலம் வனைந்து
பிழைத்தவர்கள் கிட்டத்தட்ட 20,000-ம் பெயர்; அன்றியும்
மட்கலம் வனைதொழிற்குச் சார்பாக நிலக்கரிக் கனிகளில்
கஷ்டப்பட்டு உழைத்தவர்கள் திரளான பெயர்; கரைவழி
கடல்வழி இருவழியாகவும் மட்கல வியாபாரம் செய்து
பிழைத்தவர்கள் எத்தனையோ பெயர். தேசத்தில் பல இடங்
களில் வனைதொழிலால் அனேக விதங்களில் தொழில் செய்
வார்க்கு உண்டான முயற்சி அதிகம். இந்தக் கணக்கெல்
லாம் மேற்குறித்த தொகையிற் சேராது. அவன் காலத்தி
ல் வனைதொழிற்கு விசேஷ விர்த்தி உண்டானது மெய்யே.
ஆயினும், வனைவாருடைய நிலை பெறு முயற்சியாலும், வர
வர விர்த்திக்கும் அறிவாலும், மஹா பிரித்தானியாவிற்கு
உள்ள நீர் நிலைவளத்தாலும், அரசாட்சி நலத்தாலும் வனை
தொழிற்கு காலடைவில் உண்டாகத்தக்க பூரண அபிவிர்த்
திக்குத் தன் முயற்சியால் உண்டாயிருக்கின்ற திருத்தம்
சிறுவைப்பிராயமென்று உவெட்ஜ்வுட் அபிப்பிராயம் சொ
ன்னான். இம் முக்கியமான கைத்தொழிற்றுறையில் பின்
னிட்டு உண்டான தேற்றத்தால் அவன் அபிப்பிராயம் எழுத்
தெழுத்தாய் நிதரிசனப்பட்டது. 1852-ம் ஆண்டு இங்கிலா
ந்தில் வனைந்த மட்கலங்களில் அங்கே செலவானவை போ

க, இதர தேசங்களுக்கு ஏற்றுமதியானவை 84,000,000. ஆனாலும நாம் இங்கு எண்ணத் தகும் விஷயம் விளைந்த பாண்டத்தின் தொகையும் விலையுமாத்திரமல்ல, இத்தொழில் பயின்று செய்துவரும் குடிகளின் பூர்வ நிலை திருந்திச் சிறந்திருப்பதுமே. உவெட்ஜ்வூட் பாண்டம் வினையத் தொடங்கியபொழுது, ஸ்டாப்பர்ட் ஷீயர் மாகாணத்தின் ஸ்திதி நாகரிகமுமல்ல, அநாகரிகமுமல்ல, இரண்டுக்கும் பொது. குடிகள் வறிஞர், விற்பத்தியில்லாதவர்கள், தொகையிற் குறைந்தவர்கள். உவெட்ஜ்வூட் தொடங்கிய வினைதொழில உறுதியாய் நிலைப்பட்டபொழுது குடித்தொகைக்கு மும்மடங்கு அதிகமான பெயருக்கு வேலை மிகுதியாயிருந்தது. நல்ல சம்பளமும் கிடைத்து; செல்வம் பெருகப் பெருக, கல்வி நாகரிகமுதலியவைகளும் விர்த்தியாயின.

இவ்வகைப் பிரவிர்த்தியுள்ள மனுஷர் நாகரிகம் நிலை பெறும் தேசங்களில் கைத்தொழிலாண்மையுள்ள சூரரென்று யாவரும் வெகுமானிக்கத் தகும். நெஞ்சை வருத்தும் சோதனைகளும் தொலையாச் சங்கடங்களும் உண்டாம் பொழுது அவர்கள் உள்ளத்திற் பிறக்கும் பதைப்பற்ற துணிவும், தகுமுயற்சி செய்யும்பொழுது அவர்கள் சலிப்பின்மையும் தீரமும் அதனதன் மட்டில் ராணுவ சேவகன் கடலோடி இவ்விருவருடைய விக்கிரமத்திற்கும் சிரத்தைக்கும் இளைத்தவைகளல்ல. கைத்தொழில் அபிவிர்த்திக்கு வழி காட்டும் அந்தப் பராக்கிரமர் சௌரியமாய்ச் சாதித்தவைகளைச் சௌரிமாய்க் காத்துக்கொள்வது மேற்சொல்லிய இருதிறத்தார் தர்மமும் * அபிமானமுமாம்.

* அபிமானம் — pride, a noble self-esteem springing from a consciousness of worth.

அத்தியாயம் - ௪.

கருத்தும் கைப்பிடியும்.

கடவுள் தந்த கைம்முதலாகிய காலத்தை வைத்து நிர்வகித்து, கடிகாரப் பளிங்கு கவிழ்ந்துபோனால், கொட்டுண்ட மணல் எல்லாம் அத்தனை நக்ஷத்திர வித்தெனப் பாவித்துக் குனிந்து ஓய்வற்று வருந்திப் பொறுக்கத் தக்க முயற்சியுள்ளவர்களே தனவான்கள்.— ட' அவினந்து (D' Aveuant)

“தொடங்கிய கருமத்தைச் செய்துகொண்டேவா, வரவர அதில் உனக்குப் பத்தி உண்டாம்!” — ட' அலெம்பர்த் (D' Alembert.)

பூலோகத்தில் மிகவும் பெரிய காரியங்கள் எளிய சாதனங்களாலும் சாமானிய குணங்களைப் பிரயோகிப்பதனாலும் முடிவது வழக்கம். நித்தநித்தம் அவரவர்க்கு உரிய விசாரமும் குறைபாடும் நியமமுமுள்ள சாமானியர் முதலாக உத்தமதரத்து அனுபவசாலிகளாவதற்கு அவகாசம் மெத்தவும் உண்டு; உள்ளம் உவந்து உழைப்பவனுக்கு அவன் எப்பொழுதும் நடந்து வழக்கப்பட்ட துறையிலேயே முயற்சி செய்ய நிமித்தமும் தேடித்தெளிய இடமும் குறைவற உண்டாம். மனுஷர் சுகவாழ்வின் மார்க்கம் உயிர் உள்ளளவும் ஓயாது நன்மை செய்யும் பூர்வ ராஜ பாதையின் பக்கத்தில் அதனோடு இணையாகச் செல்லுகின்றது; நினைந்த கருமத்தை ஒரு பிடியாகப் பிடித்து நெஞ்சறிய நேர்மையாய் உழைப்பவர்களுக்கே பெரும்பாலும் அதிக சித்தி உண்டாகின்றது.

* தெய்வம் கண்கெட்டதென்று மனுஷர் பெரும்பாலும் குறைசொல்வார்; ஆனால், மனுஷனைப்போலத் தெய்வம் அவ்வளவு கண்கெட்டதல்ல. காற்றும் அலையும் கலம் செலு

* தெய்வம்=fortune.

த்த வல்ல மானுமி பக்ஷம் இருப்பதுபோலத் தெய்வம் சாதாரணமாய் முயற்சியுடையோர் பக்ஷமென்று தொழில் செய்வோர் சரித்திரத்தை நுழைந்து பார்ப்பவர்களுக்குத் தோன்றும். * சாமானியபுத்தி, அவதானம், கருத்து, கடைப்பிடி முதலிய சாதாரண குணங்களே மிக உயர்ந்த கல்வித்துறைப் பயிற்சியிலும் மனுஷருக்கு முக்கியமாய் உதவுகின்றன. † புத்திசாமர்த்தியம் ஒருவனுக்கு இல்லாதிருப்பினும் பெரிதல்ல; ஆனாலும், தரம் உயர்ந்த புத்தி சாமர்த்தியமும் அந்தச் சாமானிய குணங்களைச் சாதனைசெய்வது இழிவென்று பழியாது. வித்தை முதலியவைகளில் மிகவும் வல்லவர்களென்று பெயர் பெற்றவர்களும் புத்திசாமர்த்தியத்தால் ஆவதொன்று இல்லையென்றிருந்தார்கள். சாமானியராயிருந்து ஒவ்வொரு துறையிற் சித்தி பெற்றவர்களைப்போல் அவ்வல்லாளரும் வியவஹாரஞானமும் கடைப்பிடியுமுடையோராயிருந்து தேறினவர்களே. தென்றல் முற்றிப் பெருங்காற்றாவதுபோல் சாமானியபுத்தி முதிர்ந்து புத்திசாமர்த்தியமாகின்றதெனச் சிலர் இதற்கு இலக்கணம் கூறியுமிருக்கின்றனர். ஒரு வித்தியாசாலைத் தலைவராகிய சிறந்த ஆசிரியர் ஒருவர் புத்திசாமர்த்தியம் என்பது <u>முயலும் திறம்</u> என்றார். தனக்குத் தானே அறிவுகொளுத்தும் திறம் புத்திசாமர்த்தியம் என்பது ஜான் பாஸ்டருடைய (John Foster) பக்ஷம். புத்திசாமர்த்தியம் என்பது பொறுமை என பப்பன் (Buffon) மொழிந்தார்.

நியூட்டனுடைய புத்தி தரம் மிக உயர்ந்ததென்பதற்கு ஆக்ஷேபம் இல்லாதிருப்பினும் இவ்வதிசயமான நுட்பாதி நுட்பங்களை எல்லாம் நீர் கண்டறிந்த வகை என்ன என்றொருவர் கேட்க, "நித்தநித்தம் அவைகளைச் சிந்தித்தவண்ணமாயிருந்து" கண்டறிந்தேன் என அவர் அடங்கி உத்தரம்

* சாமானியபுத்தி = common sense.
† புத்திசாமர்த்தியம் = genius.

சொன்னாராம். நட்டங்களைத் தாம் சூழ்ந்தறியும் வகையை மற்றொரு நாள் அவர் பின் வருமாறு வெளியிட்டார்;—"விஷயத்தை விலக விடாமல் எப்பொழுதும் என் கண்ணெதிரில் வைத்து, ஆதியில் உதயமாகும் ஒளி சிறிது சிறிதாக வளர்ந்து களங்கமற்று நிறைவொளியாமளவும் பதறாமற் காத்திருக்கிறேன்". ந்யூட்டன் ஆனாலென்ன, மற்றவர்கள் ஆனாலென்ன, அருந்தொழில் செய்து பெரும்பெயர் பெற்றது முயற்சி குன்றாக் கருத்தினாலும் கடைப்பிடியாலுந்தான். அவர் இளைப்பாறும்படி ஒரு நாளும் செயல் ஒழிந்திருக்கிறதில்லை. ஒரு விஷயத்தை நிறுத்திவிட்டு மற்றொன்றைக் கற்கத் தொடங்குவதே அவர்க்கு இளைப்பாறும் காலக்ஷேபம். "உலகத்திற்கு நான் ஏதும் உபகாரம் செய்தேனானால், அதன் சாதனம் சலியா முயற்சியும், * பதறாச் சிந்தனையுமே யொழிய மற்றொன்றல்ல" என்று அவர் டாக்தர் பென்த்லி (Dr. Bentley)க்குச் சொன்னார். மேலும், மற்றொரு † மகாதத்வக்ஞராகிய கெப்லர் (Kepler) தாம் கல்வி கற்பதையும், கற்றுத் தேறுவதையும் சுட்டிப் பின் வருமாறு மொழிந்தார்:—"வெர்ஜிலில் சொல்லியவாறே எனக்கும் அமைந்தது. இவ்விஷயங்களிற் சோர்பறச் சிந்தை செலுத்திவர, பின்னும் சிந்தனை செய்தற்கு ஏது உண்டாயிற்று. இப்படித் தொடர் அறாமற் சிந்திக்கச் சிந்திக்க கோழி அடை காப்பதுபோல் என் மனம் சர்வசிந்தனாசக்தியுடன் விஷயத்திற் படிந்தது."

வேறு உதவியைநாடாத பொறுமையுங் கடைப்பிடி இவ்விரண்டின் வசத்தால் விளைந்த அபூர்வ பயனைக் கண்டு தெரிய மனுஷர் வெகு பெயர் புத்திசாமர்த்தியம் என்பது மிகவும் அரிய வரமென்று மனுஷர் சாதாரணமாய் எண்ணியிருக்கிறார்களே இப்படி இராதென்று சந்தேகிக்கத் தொடங்கினார்கள்.

---

* பதறாச்சிந்தனை—patient thought.

† மகாதத்வக்ஞர்—great philosopher.

* புத்திசக்திமானுக்கும் சாமனிய மதியுடையோனுக்கும் உள்ள அந்தரம் கிஞ்சித்தென்று *வால்த்தெயர் (Voltaire) சாதித்தார். இம்மாத்திரமல்ல, முயன்றால் மனுஷர் அனைவருக்கும் கவிபாடும் திறமும் வாக்கலங்காரமும் உண்டாமென்று பெக்கேரியாவும் (Beccaria), படம் சித்திரிக்கும் நுணுக்கமும், சித்திரப் பிரதிமை சிருஷ்டிக்கும் சிறந்த சாமர்த்தியமும் எளிதில் கைவருமென்று ரேனால்ட்ஸும் (Reynolds) நினைத்திருந்தார்கள். இது மெய்யானால் கறேவா இறந்தபொழுது, அவன் சகோதரனைப் பார்த்து, "தமையனார் தொழிலை விட்டுவிடாமல் செய்து வர நினைந்திருக்கிறாயா" என்று மந்தபுத்தியுள்ள அங்கிலேயன் ஒருவன் கேட்ட கேள்வி அத்தனையும் பிரமாதமல்லவே. யாவரும் புத்திசக்தராதற்கு ஒத்த தகைமையுள்ளவர்களென்றும், அந்தக்கரணங்கள் முறைமையாய் இயலும் விதிகளை அனுசரித்துச் சிலர் சாதிப்பவைகளைப் பிறரும் அவ்விதிகளை அடுத்து இதர துறைகளிற் சாதிக்க மாட்டுவார்களென்றும் லாக் (Locke), ஹெல்வீஷியஸ் (Helvetius), டிடராத் (Diderot) எனும் வித்வஜ்ஜனர் நம்பியிருந்தனர். வருந்தி உழைத்தவர்கள் எத்தனையோ அதிசயங்களைச் சாதித்தார்கள். இது உள்ளது. மிகவும் வியக்கத்தக்க புத்திசாமர்த்தியமுள்ளோர் எல்லோரும் இளைக்காது உழைத்தவர்கள். இது அறிவோம். ஆனாலும், பிறப்புவாசியாகச் சித்தமும் புத்தியும் சிரேஷ்டமாய் அமையாதிருக்கச் சம்பவித்தால், எத்தனைதான் வருந்தி உழைத்தாலும் ஷேக்ஸ்பியர் (Shakespeare), நியூட்டன் (Newton), பீதொவென் (Beethoven), மைகெல் அஞ்ஜிலோ (Michael Angelo) இவர்களுக்கு இத்தனை மகத்வம் உண்டாகவேமாட்டாது.

ரசாயன சாஸ்திரி ஆகிய டால்தன் (Dalton) தாம் ஜன்ம விவேகியென்று கிஞ்சித்தும் நம்பவில்லை. தமக்குள்ள வித்தி

* புத்திசக்திமான் = a man of genius.

யாசம்பத்துகள் எல்லாம் மற்றொரு விதத்தாலல்ல, சலியா முயற்சித் திறம் ஒன்றாலேயே அமைந்தனவென்று சொன்னார். ஜான் ஹன்தர் (John Hunter) தம்மைச் சுட்டிச் சொல்லிய வாக்கியம் இது:—"என் மனம் தேன்கூட்டுக்குச் சமானம். அதில் கிரா இரைச்சலும் காண்பவர் கண்ணுக்கு எல்லாம் ஒன்றோடு ஒன்று மயங்கிய தோற்றமும் நிறைந்துண்டெனினும், அது குறைவறக் கிரமமாய் வகுத்துக் கிரமமாய் அமைந்திருக்கின்றது. அன்றியும் இவ்வுலகப்பரப்பில் அங்கங்குள்ள அரிய பண்டசாலைகளிலிருந்து ஓயாது உழைத்து உத்தம உண்டிவகை சேர்த்துக் கொண்டுவந்து அதில் வைத்திருக்கின்றது." அதிசய யூகிகள், கம்மாளர், ஓவியர், புத்திசக்தர், நாநா விதத் தொழில் நுட்பம் தெரிந்தோர் இவர்கள் எல்லாரும் பெரும்பாலும் சலிப்பற முயன்று சிந்தைவைத்து உழைத்துச் சித்தி கண்டவர்களே தவிர மற்றப்படி அல்ல. இது பெரிய மனுஷருடைய சரித்திரவரலாறுகளைக் கண்ணோட்டமாய்ப் பார்த்தாலே தெரியும். காலமுதலாக எந்தப் பொருளும் அவர்கள் கைப்படப் பொன் ஆகியது. சூக்ஷமம் இது - எந்தக் கருமமும் கைகூடிவருவது அதை முதிர ஆண்டறிவதனாலே. அந்த ஆட்சி சித்தமும் வித்தையில் சித்தம் வைத்து விஷய ஆராய்ச்சி செய்துகொண்டு வந்தாலன்றி மற்றப்படி அமையாது. இது ஜேஷ்டராகிய டிஸ்ரேலி (Disraeli) கொண்ட கொள்கை. ஆகவே, உற்றுப்பார்க்குமிடத்தில் உலகம் உள்ளம் உவக்க வியந்து கொள்ளும் வல்லாளகண்டர்கள் அத்தனையும் ஜன்ம விவேகிகளல்ல, புத்திசக்தியில் மத்தியம தரமானவர்கள், சலிக்காத கடைப்பிடியுள்ளவர்கள்; பெரும்பாலும், விவேக சிகாமணிகளாகப் பிறந்தவர்களல்ல, எதானாலும் சரி தாம் கைக்கொண்ட தொழிலில் கருத்துவைத்து ஓயாது உழைத்தவர்கள். ஒரு தேசத்தில் விதவை ஒருத்திக்கு ஒரு மகன். அவன் முகத்தில் விவேகம் ஜொலித்தது; முயற்சியோ கட்டோடே இல்லை. நாளடைவில் இதைக் கண்டு கண்டு மிகு

வியசனமுற்ற தாய் ஒரு நாள் "ஐயோ! மகன் பிடித்ததை விடாது சாதிக்கும் வரம் பெறவில்லையே" எனப் பரிதபித்துச் சொன்னாள். கைப்பிடியின்மையால் நிலையாய்ப் பிரசித்தியுள்ள இவ்வகை [illegible] உடையோரும் மத்தமதியுள்ளவர்களும் [illegible] மூழ்கிவிடுகிறார்கள். "பையப் பைய நடப்பவன் [illegible] களைக்காமல் நெடு நேரம் தொலை வழி நடப்பான்" இது இத்தாலிய பழமொழி.

ஒன்றுபற்றி, எதுவும் மனதிற்கு இலக்காய்க் கொண்டு முக்கியமாய்ச் சாதிக்கவேண்டியது யாதெனில், பாடு தாங்கி உழைக்க நன்றாய்ப் பயின்றிருப்பதே. இந்தப் பயிற்சி இருந்தால், அப்புறம் எதையும் சாதிப்பது பாரமல்ல, எளிது. நாம் ஒருகாரி செய்ததை அமைப்பட்டு போதுமென்று விடாமல் மேலுமேலும் செய்யக் கற்றுக்கொள்ளவேண்டும். வருந்தி உழைக்க உழைக்க எதையும் எளிதில் சாதிக்கும் வல்லமை உண்டாம். எந்த எளிய வித்தையும் பண்படாமல் ஒருவனுக்கு அமையாது. [illegible] எதுவும் சாமானியமல்ல, அது எவ்வளவோ அருமையாய் [illegible] சாதிக்கின்றது! பிரித்தானிய மந்திரிசபையின் [illegible] ஸ்ரீ ராபர்ட் பீல் (Sir Robert Peel) அவர்களை [illegible] இருக்கும்போதுத் [illegible] அதிசயங்கள் அவருக்கு [illegible] பலகாலம் [illegible] பிள்ளை. அந்தப் பருவத்தில் [illegible] நிறுத்து, ஆசனமீது [illegible] ஒரு விஷயத்தைப்பற்றி [illegible] ஞாயிற்றுக்கிழமை தேவாலயத்தில் கேட்ட பிரசங்கத்தில் ஞாபகமாயிருப்பதைச் சொல்லச் சொல்வார். ஆரம்பத்தில் தேறுதல் பெறவில்லை, ஆனால் இப்பழக்கத்தை இடையில் நிறுத்திவிடா

மல் கடைப்பிடியாய்ப் பயின்று வர வர, * அவதான சாதக பலம் உண்டாயிற்று. பிரசங்கத்தைக் குரு வாக்கினின்று பிறந்த மேனியாய் முறை பிறழாமல் ஆதியோடந்தம் ஒப்புவிக்கும்படியான அருஞ்சமர்த்து அவர்க்கு அமைந்தது. பிற்காலத்தில், பார்லிமெண்டு சபையில் எதிரிகள் சொல்லும் நியாயங்களை முறைப்படி அவதானித்து, கடைசியில் ஒவ்வொன்றுக்கும் அம்முறை தவறாது எதிர் நியாயம் சொல்லிக்கொண்டுவருவார். இந்த அவதானசக்தியில் அவருக்கு ஒப்பு உயர்பு இல்லை. இவ்வரம் அவர்க்கு அமைந்திருக்கும் அற்புதத்தை எண்ணி எண்ணி யாவரும் மயங்குவார்கள். இவ்வற்புத அவதானசக்தி ஆதியில் டோட்டன் தேவாலயத்தில் தந்தையுடைய கண்டிப்பால் அமைந்ததை அவர்கள் நினைக்கவில்லை. அது அவர்களுக்கு எப்படித் தெரியும்.

சாமானிய சாதனைகளையும் இடைவிடாது மனம் கூர்ந்து செய்யச் செய்ய உண்டாகும் சித்தியை நினைக்க எவரும் ஆச்சரியப்படுவார். கின்னரம் வாசிப்பது விந்தையல்லவெனத் தோன்றும்; தோன்றினும், அதில் வல்லமை நிறைந்து உண்டாவதற்கு எத்தனை காலம் வருந்தி வருந்தி அதைச் சாதனை பண்ணிவரவேண்டும்; ஒரு நாள் வாலிபன் ஒருவன் கியார்டினி (Giardini) எனும் கின்னரனைப் பார்த்து, "ஐயா, கின்னரம் வாசிக்கப் பழக எவ்வளவு காலம் செல்லும்" என்று கேட்க, அவன் "தினந்தோறும் பன்னிரண்டு மணிநேரம் வாசித்துக்கொண்டுவந்தால், பூர்த்தியாய் இருபது வருஷம் செல்லும்" என்று உத்தரம் சொன்னான். மேற்படி உரையைக் கூத்தாடிகளும் என்பார்கள். பிரதாபத்திற்கு இலக்காகிய நாடகக்கணிகை பரதநாட்டியத்தில் சிறந்த நிபுணி ஆதற்கு அத்தப் பயன் இல்லாத் தொழிலை பல வருஷகாலம் ஓயாது கஷ்டப்பட்டு பழகவேண்டும். ராத்திரி நாடகசாலையில் கூத்தாட, தாகலியோனி (Taglioni) என்பவள்

---

* அவதானசாதகபலம் — the power of the habit of attention.

தகப்பனிடத்தில் மூன்று இரண்டு மணிநேரம் மிகக் கடுமையாய் ஆட்டம் பயில்வான். அதற்குள் அங்கம் எல்லாம் புண் போல் நோக வெயர்த்துக் களைத்து மூர்ச்சித்து விழுந்து போவான். பின்பு வஸ்திரம் களைந்து வெயர்வை துடைத்துக் களை ஆற்றி இறந்தவனைப் பிழைப்பிப்பதுபோல் எத்தனையோ உபசாரம் செய்வார்கள். மூன்றுவே இத்தனை பாடுபடுவதேன் - ஏனெனில் ராத்திரி நாடகசாலையில் துரிதகதியாய்த் துள்ளிப் பாய்ந்து ஆடுவதற்கு அவயவங்களை வணக்கி வசப்படுத்த. 'ஆடிய காலே பாடிய பிட்டே'.

இதில் ஒன்று அறியவேண்டும். உத்தம தரமான தேற்றம் உண்டாக நாட்படும். அருந்தொழில்களை அடிக்குளே சாதிக்கக்கூடாது. எந்தத் துறையிலும் படிப்படியாய்த் தேறுவது இயற்கை. தீவிரகதியாய்த் தேறவில்லையென்று நாம் மனக்குறைகொள்ளலாகாது. "பதைப்பற்றுப் பொறுத்திருக்க வகை அறிவதே எத்தொழிற் சித்திக்கும் மர்மம்" என டி மேஸ்திரி (De Maistre) மொழிகின்றார். விளைவு அறுக்குமுன் வித்திடவேண்டும். விதைத்த தானியம் விளையப் பெரும்பாலும் நாட்படும். எத்தனை நாள் செல்லினும் ஏற்கும் பருவத்தில் விளையுமென்று ஆவித் தேறி ஆசையோடு எதிர் நோக்கியிருக்கவேண்டும். பெரும்பாலும் அருங்கனி தரும் மரம் பூத்துக் காய் காய்த்துக் கனி முதிர வெகு காலம் செல்லும். அதற்கு நாம் எவ்வளவு காலம் காத்துக்கொண்டிருப்பினும் ஏற்கும். "காலமும் பொறுமையும் கம்பளிக்கொண்டான் இலையைக் கனைக்கு ஆடைய பட்டாக்கும்" இது கிழக்குத் தேசத்தில் வழங்கும் பழமொழி.

ஆனாலும் பதறாமல் பொறுத்திருக்கையில் மனுஷர் உல்லாசமாய் உழைக்கவேண்டும். உழைப்பவர்க்கு உல்லாசம் முக்கியம். அது ஒருவனுடைய ஞானம் சக்திகளுக்கு விசை உண்டாக்கும். "இன்பக்களிப்பே பத்தில் ஒன்பது பங்கு மனதின் பலம்" என அத்தியாசிரியர் ஒருவர் மொழிந்தார். அவ்

தன்மைபோல, வ்யவகார ஞானம் பத்தில் ஒன்பது பங்கு உல்லாசமும் முயற்சியுமாம்.* இக்குணங்களே சித்திக்கும் சக்திற்கும் பிரானபதமானவைகள். தெளியத் தடையின்றித் துரிதமாய் செலுத்திய உழைப்பதுதான் ஒருவனுக்கு இவ்வுலகில் உன்னத இன்பம் எனத் தோன்றுகிறது. தாளாண்மை, துணிவு முதலிய மற்ற நற்குணம் அனைத்திற்கும் முக்கியமாய் அதுவே தாரகம். ஸிட்னி ஸ்மித் (Sydney smith) எனும் வித்வான் யோர்க்ஷியர் மாகாணத்தில் பாஸ்டன்-லீ-ஸ்லே எனும் ஊரில் புரோகிதம் செய்துவரும்பொழுது அது தம் இயற்கைக்கு உரிய தொழிலென்று அவர் சிந்தையிற் படவேயில்லை. பட்டிருந்தும், அவர் தளராது தம்மால் ஆனமட்டும் சிலவிக்க நிர்ணயித்து உல்லாசமாய் உழைத்தார். இதைத்தொட்டு அவர் மொழிந்த வாக்கு "நான் இத்தொழிலை விரும்பி இதனை மேற்கொண்டு உறவாட நிர்ணயித்திருக்கிறேன். என் இறைமைக்கு இது தகாதென்று கடிந்து, என்னைப் புறக்கணித்து விட்டவர்கள், எனக்கிங்கெவர் துணையும் இல்லை எனமுதரகச் சிரமம் தொடுத்துக் குறை கூறி விண்ணப்பப் பத்திரம் ஒன்று எழுதித் தபாலில் அனுப்புவதனை, மேற்சொல்லிய நிர்ணயப்படி செய்வதே நன்மை" இவ்வாறே டாக்டர் ஹுக் துரையவர்கள் (Dr. Hook) தேவ ஊழியம் செய்ய வீட்டைக் கடந்து விட்டு மற்றொரு இடத்திற்குப் பிரயாணப்படும் சமயத்தில், "நான் எங்கெங்கே போனாலும் தேவ ஊழியத்திற்கான கைங்கர்யத்தை என்னால் இயன்ற அளவிற்குச் செய்வேன் - உழைக்க ஒன்றும் இல்லாதிருந்தால், அதனைப் பாராட்டி சிருஷ்டித்து உழைப்பேன்" எனக் கொண்டார்.

முக்கியமாய் * லோகஹிதத்திற்காக உழைப்பவர்கள் பதறமற் பொறுத்து வெகு காலம் உழைக்கிறார்கள். உழைக்கும் உழைப்பின் பயன் கைமேலே வருமெனக் காணும் உல்லா

* லோகஹிதம்—public good.

சப் பெரும்பாலும் அவர்களுக்கு இல்லாதிருக்கும். சிற்பான்மை அவர்கள் விதைக்கும். தானியம் பனி உறைந்திருக்கும் மாரிகாலத்திலே தரைக்குள் மறைந்து, வசந்த காலம் பிறக்கவும் முளைக்கும்; விதைத்தவர்கள் விதைத்த தானியம் முளைக்குமுன் அடி ஓய்ந்து பலபேர் இறந்துபோவதும் உண்டு. ரோலண்ட் ஹில் (Rowland Hill) என்பவர் ஊருக்கு உழைத்த உபகாரி. அவர் கருதி உழைத்த உழைப்பின் பயன் அவர் காலத்திலேயே விளைந்தது. இது எவரோ ஒருவர்க்கன்றி எல்லார்க்கும் அமையாது. ஆதாம் ஸ்மித் (Adam Smith) எனும் வித்துவான் கலாசாலை கோவில் முறிந்து மக்கிப்போன சாவகலாசாலையில் உலகம் திருந்தச் சிறப்பு விதை விதைத்தவர். அவர் அப்பெ வெகு காலம் வருந்தி உழைத்து, 'சர்வதேசத் தனம்' எனும் கிரந்தத்திற்கு அடிகோலினார். அது கருதியாய்ப் பயன்பட எழுபது வருஷகாலம் சென்றது. அதன் விளைவு எல்லாம் இன்னும் கொய்து முடியவில்லையே.

ஆசை இழந்தால் அதற்கு நிவிர்த்தி ஒன்றும் இல்லை. குணம்-கிரியை - ஒழுக்கம் எல்லாம் அந்தமாய் மறியபோம். புத்தி சக்தி மெத்தவுள்ள ஒருவர் வியாகுலம் பெருகியிருப்பதுப்பற்றியபோது, "ஆசை எல்லாம் போனபின் போத்திபின் நான் பயந்த உழைப்பினைப்பற்றிச் சகிப்பேன்" என நொந்து சொன்னார். கேரி (Carey) எனும் இங்கிலீஷ் போதகர் மிகு உல்லாசமுள்ள நாளிய புருஷர். உழைப்பதை ஆசை கொண்டு உழைப்பில் மகிழ்ந்ததுலேயே அவருக்கு இவ்விரு குணங்களும் அமைந்தன. இந்தியாவில் இருந்தபொழுது அன்றையது அவர் ஒருவர் இயற்றும் கிரந்தங்களைப் பலமுறை ஒன்றுமேல் ஒன்றாகச் சலிக்க எழுதியும் மாணவிக்கில்லை. வேலைகளை ஒன்று மாறி ஒன்று செய்வதுதான் அவருக்கு இளைப்பாறுதல். கேரிக்குக் கைத்துணையாய் உழைத்தவர்கள் உவர்ட்டென்ற (Ward) மார்ஷமும் (Marsham). கேரி தகப்பன் சக்கிலி, உவார்ட் தந்தை தச்

சன்; மார்ஷ்மனும் பிதா கைக்கொண்டனன். அம்மூவரும் மனம் ஒத்து வருந்தி உழைத்து, ஸ்ரீராமபுரியில் சிறந்த வித்தியாசாலை ஒன்று கட்டுவித்தனர்; செழித்து விர்த்திக்கும் மிஷன் ஸ்தானம் பதினறு ஸ்தாபித்தனர்; பைபிள் வேதத்தைப் பதினறு பாஷையில் மொழி பெயர்த்தனர்; மனுஷருக்கு அனுகூலமான நீதிநெறி வித்தை பிரிட்டிஷ் இந்தியாவில் விதைத்தனர். தம் இழிகுலத்தைப்பற்றி கேரி ஒருபொழுதும் லஜ்ஜைப்படவில்லை. ஒரு சமயத்தில் இந்திய ராஜபிரதிநிதி மாளிகையில் கேரி தேசிகர் பகுபோஜனத்திற்கு அழைக்கப்பட்டார். உயர்ந்த உத்தியோகஸ்தர்கள் வெகு பெயர் விருந்துண்ணப்போயிருந்தார்கள். கேரிக்கு எதிர்முகமாய் உட்கார்ந்த ராணுவ உத்தியோகஸ்தர் ஒருவர் பக்கத்தில் உள்ள மற்றொருவரைப் பார்த்து இந்தக் கேரி முன்பு பாதரக்ஷை செய்து விற்றவரல்லவா என்று சற்று உரக்கக் கேட்டார். கேட்டது அடித்தாற்போலக் கேரி செவியில் விழுந்தது. விழவும், அவர், "அல்ல, பிரபு, செருப்புத் தைக்கும் சக்கிலி" என்று உள்ளதை ஒளிக்காமற் கூவி உரைத்தார். அவர் குணம் ஆழிகள் நன்றாய் விளங்கிய கதை ஒன்று சிறு பருவத்தில் அவருக்கு உள்ள கைப்பிடியைப் பற்றிச் சொல்லியிருக்கின்றது. ஒரு நாள் மரம் ஏறி அடிசறுக்கி விழுந்து அவர் கால் முறிந்துபோயிற்று. சொஸ்தமாக நாலைந்து வாரம் சென்றது. காயம் கட்டிக் காலில் கோல் ஊன்றாமல் நடக்கத்தக்க பலம் வரவும், அவர் மறுபடியும் போய் அம்மரத்தில் ஏறினார். விடாப்பிடியாக அவருக்கு உள்ள இவ்வசைவற்ற துணிவு, வங்காளர் அறிவினையிற் செய்த குருத்தொழிலுக்கு ஆவசியகம் வேண்டியிருந்தது. அத்தொழிலை அவர் உதாரமதியோடும் ஸ்திரசித்தத்தோடும் சாதித்தார்.

"ஒருவன் செய்ததை எவனும் செய்யமாட்டுவான்." இது டாக்டர் யங் (Dr. Young) எனும் தத்துவஞானி நீதிமொழி. அவர் மேற்கொண்டு செய்ய நினைத்த பணியை முய

றி எதையும் தம்மால் மாளாதென்று விட்டுப் பின்வாங்க வில்லை. இது நிசம். ஒரு நாள் யங்கும் வேட்டையாடுவதில் வெகு சாமர்த்தியன் என்று பேர்பெற்ற வேறொரு யார்க்லே பிரபுவுடைய வேளத்திரனும் குதிரை ஏறிப்போனார்கள். யங் அன்றுதான் முதல் முதல் குதிரை ஏறினது. அவர்கள் இருவருக்கும் முன்னே குதிரைவீரன் ஒருவன் ஏறிப்போன குதிரை எதிர்ப்பட்ட வேலியைத் தாண்டிச் சென்றது. அது கண்டு யங்கும் தமது குதிரையைத் தாண்டவிட்டு அது பாயும்பொழுது பதறி விழுந்துபோனார். விழுந்து நமக்கு அடாத செய்கை நமக்கேன் என்று சொல்லிப் பின்னிட்டாரா, இல்லை இல்லை. [illegible] திரும்பவும் ஏறிக் குதிரையை விட்டார். அது பாயும்பொழுது இம் முறையும் அவர் இருப்பு விட்டு விலகி விழப்போகிற சமயத்தில் கழுத்தை நன்றாய்க் கட்டிப்பிடித்துக்கொண்டார். மூன்றாம் முறை அவர் சித்திரப்பிரதிமைபோலக் குதிரை முதுகில் அசையாதிருக்க, குதிரை தட்டுத் தடக்கி விழாமல் சுகமே வேலியைத்தாண்டி ஓடிற்று.

தரித்திரதசையில் அலைந்தபொழுது, ஒரு நாள் சிலந்திப்பூச்சியின் செய்கையைக் கண்டு கருமம் கடைப்பிடியாயிருக்கப் பழகின தார்த்தாரியனாகிய தைமர் (Timour) என்பவனைப் பற்றிச் சொல்லிய * உபகதை எல்லோருக்கும் தெரியுமே. அமெரிக்காவில் பக்ஷிசாஸ்திரியாயிருந்த ஆதுபன் (Audubon) தன்னைக்குறித்துச் சொல்லிய பின் வரும் உபகதையும் அதுபோல் இனிதாயிருக்கும்:—"தான் எழுதி வைத்திருந்த அசல் படம் இருநூறையும் [illegible] வெட்டிப்போயின. போக, பக்ஷிவித்தையில் உழைக்கும் உழைப்பு அம்மட்டில் முக்காலே மூன்று வீசம் நஷ்டமாய்ப்போமென்று என்னம் [illegible] யாயிருந்தது; [illegible] படம் எழுதிப் [illegible] வைத்திருக்க முயன்ற

---

* உபகதை—an anecdote or story.

எனக்கு அந்நேரந்தொட்டு உண்டான கடைப்பிடி கடைப்பிடியன்று, வைராக்கியமென்று சொல்லத்தகும். இந்த வைராக்கியம் இருந்தால் அயர்ச்சியில் * நெஞ்சழிந்து நினைவு தடுமாறும்படியான இடர் பல நேரினும் எவ்வளவும் அஞ்சாமல் வழியில் அவ்விடைஞ்சல் தவிர்த்து ஈடேறலாகுமென்று எல்லாரும் உணரும்படி எனக்கு நடந்த சங்கதி ஒன்றைச் சொல்லுகிறேன். தெக்கத்தி மாகாணத்தில் ஓஹையோ நதிக்கரையில் உள்ள மெரியட்டாஎன்ற ஊரில் சில வருஷகாலம் சஞ்சரித்தேன். சஞ்சரிக்கும்பொழுது ஒரு முறை பிலடெல்பியா நகரத்திற்குப் போகக் கருமம் இருந்தது. புறப்படுமுன், படம் எல்லாவற்றையும் எடுத்து ஒரு மரப்பெட்டிக்குள் பத்திரமாய் வைத்துப் பூட்டி பழுதின்றி வைத்திருக்கும்படி என் பந்து ஒருவரிடம் ஒப்புவித்தேன். நான் போய் மீளவும் வீடு வந்து சேர ஐந்தாறு மாசம் சென்றது. வீடு சேர்ந்து சில தினமாகவும் சுற்றார் உறவர் சேர்ந்தார் சிலரைக் கண்டு களித்து கொண்டாடியபின், பெட்டி நினைவு வந்து அதைப்பற்றி விசாரித்தேன். அதை நான் உள்ளக்களிப்பால் எனது பொக்கிஷப்பெட்டியென்று சொல்வது வழக்கம். பெட்டியை எடுப்பித்துத் திறந்து பார்த்தேன், பார்த்தபொழுது என் மனம் பட்ட பாட்டையெல்லாம் சொல்லி ஆகிறதல்ல — இதை வாசிக்கிறவர்களுக்கு அது சொல்லாமலே தோன்றும். நோர்வே எலி ஒரு சோடு பெட்டிக்குள்ளே போய் அமர்ந்து படங்களைத் துண்டு துண்டாய் வெட்டிப் பாழாக்கிவிட்டன. அதற்கு ஒரு மாதத்திற்குமுன் ஆகாயத்தில் சஞ்சரிக்கும் பட்சஜாதி ஆயிரம் வரையும் பார்த்தெழுதின சித்திரப் படங்களாயிருந்த அக்காகிதங்கள் எல்லாம் இப்படிப் பாழ்ப்பட்டிருக்கவும், எலிக்குஞ்சுகள் அதற்குள்ளே சஞ்சரிக்கவும் கண்டேன்! கண்டபொழுது எனக்கு வந்த உஷ்ணம் எவ்வளவென்றது.

* நெஞ்சழிதல்—being disheartened, discouraged.

என் மூளையில் நெருப்புப் பற்றி எரிந்து தேகம் எங்கும் கொதித்தது. அந்தக் கொடிய அவஸ்தையைத் தாங்க என்னால் முடியவில்லை. என் புத்தி மாறுபட்டுப்போயிற்று பகற்காலத்தில் நான் கைப்பிள்ளைபோலத் திரிந்தேன் நாலு ஐந்து பக்க ராத்திரி மெய்மறந்து தூங்கினேன். பலஹீனமாயிருந்ததால் வரவர மனப்பிரமைப்பு மாறி அறிவு தெளிந்தது. நாலு பெயரையும்போல் ஓட உலாவத்தக்க வல்லமையுள்ளவனானபின் இனி அச்சம் இல்லையென்று மனம் தேறித் தைரியமும் குறிப்பும் புஸ்தகமும் கை லேகினியும் எடுத்துக்கொண்டு காட்டுக்குப் போனேன். முன்பு எழுதிவைத்திருந்த எலிக்குக் கொள்ளைகொடுத்த பட்டத்தைவிடச் சிறந்த பட்டம் இனி எழுதமாட்டேனென். எழுத எழுதக் கை திருந்துவது இயற்கைதானே. இதை நினைத்து எனக்குக் களிப்பு உண்டாயிற்று. அன்று தொடங்கிப் பட்டம் எழுதிக்கொண்டு வரவரக் கொஞ்சம் குறையமென்று வருத்தமின்றி மனம் உறுதியடைந்தது.”

பீடத்தில் கொளுத்திவைத்த மெழுகு வர்த்தியை ஸ்ரீ ஐஸக் ந்யூட்டன் (Sir Isaac Newton) வளர்த்த வைரமணி எனப் பெயருள்ள 'டைமண்ட்' என்னும் நாய் ஆகஸ்மிகமாய்த் தட்டி விழுத்தி அவர் அநேக வருஷகாலம் முயற்சிக்கமாய்க் கணித்து எழுதிவைத்திருந்த கோளவித்தியா பத்திரங்கள் சுட்டுப்போட்டு எரிந்துபோன கதை எல்லாருக்கும் தெரியுமே. இந்த நிரம்ப பெருநஷ்டத்தை நினைத்து நினைத்து [illegible] மனம் நொந்து ஒடுங்கினார், அவ்வறிய தத்துவஞானியுடைய மேதாவிலாசம் அற்பமாய்ப்போயின. மிஸ்டர் கார்லைல் (Mr. Carlyle) பிரான்ஸிய ராஜ்ய பரிவர்த்தனத்தைப்பற்றி எழுதிவைத்திருந்த கையெழுத்துப் புஸ்தகத்தின் முதல் பாகமும் இவ்வாறே வகைமோசமாய்க் கெட்டுப்போயிற்று. அயலில் உள்ள வித்வான் ஒருவர் அக்காகிதத்தை வாசித்தப்பார்

க்கக் கேட்டு வாங்கியிருந்தார். ஏதோ கைபிழைபாடாக அக்கையெழுத்துப் பிரதியை அவர் கூடத்தில் வைத்து விட்டு மறந்துபோனார். நாலைந்து வாரம் சென்றதன் மேல் அச்சிடுவோர் எழுத்து அடுக்கக் கையெழுத்துப்பிரதி வேண்டுமென்று கார்லைலை அடிக்கடி கேட்க, அவர் இஷ்டரிடத்தில் அதைக் கேட்டு வாங்கி வரும்படி ஆள் அனுப்பினார். இஷ்டர் அதைத் தேடிப்பார்த்துக் காணவில்லை. அங்குள்ளவர்களை ஒவ்வொருவராய் அழைத்துக் கெட்டியாய் விசாரித்தார். அவ்வீட்டு வெள்ளாட்டி கூடத்தில் ஒரு கட்டுக் காகிதத்தைக் கண்டு அது ஒன்றுக்கும் உதவாதென்று எண்ணி அடுப்பு எரித்துக்கொண்டு வந்ததாக வெளிப்பட்டது! அப்புறம் என்ன செய்கிறது. பெற்றவனுக்கல்லோ தெரியும் பிள்ளை அருமை - மலடி அறிவாளா - உள்ளதை உள்ளபடி அந்தத் துரை கார்லைலுக்குச் சொல்லியனுப்பினார். வெள்ளிடிபோலும் அந்தச் சொல்லைச் செவிகொளக் கேட்டபொழுது கார்லைலுக்கு உண்டான தீவிர மனோவேதனையை இக்கதை கேட்பவர் சொல்லாமலே தெரிந்துகொள்வார். மனஸ்தாபப் பட்டதனால் அடுப்பில் எரிந்து சாம்பலாய்ப்போன அரிய கிரந்தம் வருமா? போனது போகட்டுமென்று மனதைக் கடிந்துகொண்டிருந்து அவர் அந்தக் கிரந்தத்தைப் புதிதாய் எழுதத் தொடங்கினார். விஷயக்குறிப்பு எழுதிய கடிதமும் இல்லை. வெகு நாளுக்கு முன் எழுதி மறந்துபோன சங்கதிகள் அபிப்பிராயங்கள் வாக்கியங்கள் எல்லாவற்றையும் மறுபடி ஞாபகத்தில் வருவித்து எழுதிக்கொண்டுவந்தார். முதலில் அப்புஸ்தகம் எழுதியது அவருக்கு சுபகாலக்ஷேபமாயிருந்தது ; இரண்டாம் முறை எழுதியபோது யமவேதனையாயிற்று. அவர் பட்ட துயரத்திற்கும் அவஸ்தைக்கும் அளவு இல்லை. எவ்விதத்திலும், அவர் எடுத்த கருமத்தில் சலிப்படையாதிருந்து என்னவும் தவறாமல் முடித்தார். * சித்தநிர்ணயம் இருந்தா

* சித்தநிர்ணயம்=determination of purpose.

ல் முடியாததையும் முடிவிக்கலாகுமெனபதற்கு இது நல்ல திருஷ்டாந்தம். சித்தநிர்ணயத்தில் இவருக்கு மிஞ்சினவர்களைக் காண்பது அரிது.

யந்திரமுதலியவைகளை யூகித்து நிர்மாணித்த உன்னத நிபுணர் சரித்திரங்களும் கடைப்பிடி எனும் இக்குணத்தையே மயக்கறத் தெளிய விளக்கும். ஜார்ஜ் ஸ்டீவின்ஸன் (George Stephenson) என்பவர் வாலிபருக்கு உபந்யாசம் செய்யும் சமயங்களில் தாம் சொல்லும் உத்தம புத்திமதிகளைப் பால் கடைந்து வெண்ணெய் எடுப்பதுபோல செருக்கிச் சுருக்கிப் பின் தொடரும் இரண்டொரு சொல்லில் அடக்கிச் சொல்வார். அவை இவை:—"நான் செய்தபடி செய்யுங்கள்—அரும்பம் கடைப்பிடி." சென்னிலில் நீராவியந்திர நிர்மாணம் எனும் அருந்தொழில் ஐயமற முடித்துப் பெரும் பிரதிஷ்டைபெற்ற அவர் அதற்கு மூர்த்தி இடத் தப்பப் பதினைந்து வருஷகாலம் அந்த முயற்சியில் பாடுபட்டார். உவாத் (Watt) என்பவர் * கனீகரணயந்திரம் செய்து முடிக்கச் சுமார் முப்பது வருஷம் சென்றது. ஆனாலும், வித்தை-கலை-கைத்தொழில் எனும் இதர துறைகளிலும் கடைப்பிடி சாதித்த மேற்குறித்தவர்களைப்போலப் பிரபலமானவர்கள் உண்டு. நினிவேயின் தரைக்குள் புதைந்திருந்த † சலவைக்கற்பலகைகளை வெட்டி வெளிப்படுத்தி, அப்பலகைகளில் வரையப் எழுதியிருக்கும் ‡ அம்புத்தலை எழுத்தைக் கண்டுபிடித்தது பெரிய அதிசயம். ஆதியில் வழங்கிய இவ்வெழுத்தும் மெலிந்தவியாபாரவிகத்தை ஒழித்த நாள் முதல் வெகு காலமாய் மனுஷருக்குத் தெரியாதுபோயிற்று.

* கனீகரணயந்திரம்—Condensing Engine.

† சலவைக்கல்—marble.

‡ அம்புத்தலையெழுத்து—cuneiform or arrow-headed character.

ஈஸ்ட் இந்திய கம்பெனியார்வசம் ராணுவசேவகம் செய்த நிபுணர் ஒருவர் பெர்ஸியாவிலிருந்த கர்மன்ஷா எனும் ஊரில் இருக்கையில், அதன் அயலில் உள்ள பழைய கோரிகளின் அடிவாரத்தில் அமைந்திருந்த சாசனம் எழுதியிருப்பது கண்டார். அக்கோரி முதலிய பட்டணங்கள் ஞாபகத்துக்கு எட்டாத அதி பூர்வ காலத்தொட்டு அங்குள்ளவைகள். அவர் கண்ட சாசனங்களைப் பார்த்து எழுதி வைத்தார். அவற்றுள் ஒன்று கெடுங்கலம் எனக் கொண்டாடப்படும் பிஹிஸ்தன் எனும் மலையில் வரைந்திருப்பது. அது செங்குத்துமலை - தளமட்டத்திற்குமேல் அதன் உயரம் 1700-அடி. அம்மலை அடிதலத்தில் 300-அடி பரப்புமட்டும் பாரசீக - ஸிதிய - அஸீரிய பாஷைகளில் சாசனங்கள் எழுதியிருந்தன. அப்பிக்ஷைகளை அறியாதவைகளோடும், வழங்கிக்கொண்டிராத பாஷைகளை வழங்காதொழிந்தவைகளோடும் ஒப்பிட்டுப் பார்த்துக்கொண்டு வரவர அந்த ராணுவ உத்தியோகஸ்தருக்கு அவ்வெழுத்துகளின் அக்ஷரம் சிறிது தெரிந்தது. அவிர்தமட்டும் அவர் கெலிகளைக்கும் ஏற்படுத்திவைத்தார். அவர் பெயர் ராலின்ஸன் - பிற்பாடு கைட் பட்டம் பெற்று ஸ்ரீ ஹென்ரி ராலின்ஸன் (Sir. Henry Rawlinson) எனப் பெயர் வழங்கியவர் அவர்தாம். அந்த சாசனப் பிரதிகளைப் பரிசோதிப்பதற்காகும்படி அவர் சீமைக்கு அனுப்பினார். பின்பு ஈஸ்ட் இந்திய கம்பெனியார் உத்தியோகஸ்தரிலொருவராயிருந்த நாரிஸ் (Norris) எனும் துரை ஒருவர் சீமையில் இருந்தார். அவர் பிரசித்தரல்ல, மெத்த அடக்கமுள்ளவர். எவர்க்கும் விவரம் தெரிகிறாத அப்புதுகவில் அவர் அடைப்பு அனைத்தும் தேர விசாரித்து ஆராய்ச்சிசெய்து அந்தப் பிரதிகளை அனுப்பினார்கள். அவர் பார்த்து மாதிரத்தில் பிஹிஸ்தன் மலையடியில் வரைந்திருக்கும் அப்பிபிசாசனத்தை மேற்படி ராணுவ உத்தியோகஸ்தர் தவறும் பார்த்து எழுதவில்லையென்று சொன்னார். பிஹிஸ்தன் மலையை அவர்

எப்பொழுதும் பார்த்ததேயில்லை, அம்புத்தலையக்ஷர ஞானமும் அவருக்கு நன்றாய்த் தெரியுமென்பதற்கு இது சாக்ஷி. ராலின்ஸன் துரை இன்னும் அவ்விடத்திற்கு அயலில் இருந்ததனால் அந்த மலைக்குப் போய்ப் பின்னும் ஒரு முறை சாசனத்தைப் பார்வையிடும்படி நாரிஸ் அவருக்கு எழுத, இவர் தாம் எழுதிய நகலை அசலுடன் ஒத்துப்பார்த்து அந்நகல் தப்பென்று கண்டார். கண்டு திருத்தி எழுதி அனுப்பி விட்டு அன்றுதொட்டுப் பார்த்துப் படித்துப் பயின்று மிகவும் தேறினார்.

ஆனாலும் இவ்விருவரும் தம்முயற்சியால் கற்ற கல்வி பயன்படுதற்கு ஒரு விதி வேண்டுமே. அவர்கள் அறிவைச் சாதனைபண்ணிக்கொண்டுவர இடம் இருந்தாலல்லவா அது வரவரக் கூடும். இதற்கும் ஒரு * பாட்டாளி சமயத்தில் எதிர்ப்பட்டார். அவர் ஔஸ்தென் லேயார்ட் (Austen Layard). ஆதியில் அவர் லந்தன் நியாயவாதி ஒருவரிடத்தில் தர்மசாஸ்திரம் கற்றுக்கொண்டுவந்தவர். ராணுவ உத்தியோகஸ்தர் - கம்பெனி லிகிதர் - நியாயவாதி மாணாக்கர் ஆகிய மூவரும் வெகு காலமாய் வழங்காதொழிந்துபோன பாஷையையும் பூமிக்குள் புதைந்து மறைந்த பாபிலோன் சரித்திரத்தையும் கண்டு வெளியிடுவாரென்று எவராவது சொப்பனத்திலும் நினைந்திரார். ஆச்சரியமாக இப்படித்தான் சம்பவித்தது. ஐரோப்பாவுக்கு இக்கரையில் உள்ள தேசங்களைப் பார்க்கும் ஆசையால் இத்தேசத்திற்கு வந்தபொழுது லேயார்டு அவர்களுக்கு வயசு இருபத்திரண்டு. அவருக்கு வழித்துணையாய் வந்தவன் வேறொருவன். தற்காப்பின்பொருட்டு அவர் துப்பாக்கி முதலிய படைக்கலங்களும் கொண்டிருந்தார். அன்றியும் ஓயாமல் ஒருவரோடு ஒருவர் சண்டையிட்டுப் பிராண சத்துருக்களாய்ப் பல ஜாதியார் வசிக்கும் தேசத்தில் அச்சமற்றுத்

* பாட்டாளி=labourer.

திரிய அவர்க்கு உதவின முக்கியமான படைக்கலங்கள் அவருடைய மலர்ந்த முகமும், அதிவிநயமும், ரணகம்பீரமுமே. கைப்பொருளுதவியற்று, கருத்து - கடைப்பிடி - சித்தநிர்ணயம் - அனிவு - அரும்பொறுமை இவைகளைத் துணையாகக்கொண்டு, முறைதிருத்தனைகளை நுழைந்து கண்டு வெளியிட்டு - விதமாய் அதித்தவைகளைத் தேற விசாரித்து அறிந்துகொள்ளும் அனந்தாவேசம் எனும் வாகனம் ஏறி வெகு வருஷகாலம் பாடுபட்டுழைத்ததன்மேல், சரித்திரப் புதையல் அவருக்கு மெத்தவும் அகப்பட்டது. அவர் தரையை வெட்டிப்பிரித்து அப்புதைபொருளை வெளியாக்கினார். அதற்குமுன் எவன் ஒருவனும் பிறர் உதவியின்றித் தன் முயற்சியால் இவ்வகைப் புதையல் இவ்வளவு எடுக்கக் கண்டது கேட்டதில்லை. புதைத்துக் கிடந்த வேலைப்பாடுள்ள பிரதிமை முதலியவைகளை இரண்டு மைல் தூரம் வெட்டி வெளியிட்டார். இவ்வரிய பூர்வ வஸ்துக்களில் ஆணித்தரமானவைகளெல்லாம் சேர்த்துக் கொண்டுபோய்ப் பிரித்தானிய வைதகிசயசாலையில் வைத்திருக்கிறார்கள். ஏறக்குறைய மூவாயிரம் வருஷத்திற்கு முன் நடந்தவைகளைத் தொட்டுக் கிளம்பு வேதத்திற் சொல்லிய வரலாறுகளுக்கு அந்தப் பூர்வ வஸ்துகள் பலமான சாக்ஷியமாய் ஏற்பட்ட விந்தையை என்னென்று சொல்லலாம். இவ்வாறு அவைகள் உதயமானது பூர்வகாலிகளுக்குக் கடவுள் ஞானவேதம் ஒன்றை அருளியதுபோலிருக்கது. தனக்குட் புதைந்திருந்த அந்தச் சிறந்த பழைய கைவேலைப்பாடெல்லாவற்றையும் வெட்டிவெளியாக்கினதைத் தொட்டு மேயர்ட்டுலா தாமே 'கிளிமே ஞாபகக்குறி' எனும் கிரந்தத்தில் எழுதியிருக்கும் வரலாறுகள் அவ்வாவருடைய அருந்தொழிலையும் * தேட்டாண்மையையும், மனவலிமையையும் குறித்து உள்ள விபரம் அனைத்திலும் சிறந்த சத்தியவரலாறுகளென்று எப்பொழுதும் வியந்துகொள்ளப்படும்.

---

* தேட்டாண்மை—industry, thriftiness.

பப்பன் பிரபு "புத்திசக்தி என்பது பொறுமை" என்றார். இதன் உண்மையும், பொறுத்து நோயதும் முயற்சித்திறமும் அவருடைய சரித்திரத்தால் பரிஷ்காரமாய்த் தெரியவரும். அவர் முயற்சியாய் ஆராய்ந்து சராசராளவில் சொல்லிய சித்தி கண்டுபிடிப்புணர்ச்சியிலும், பாலியத்தில் அவர் புத்தி மந்தியமந்தரமாகவே இருந்தது. அவர் நினைக்கப்பதும் மெது, கற்றதை எழுதி அமைவாய் வெளியிடுவதும் மெது. அன்றியும் சோம்பு அவருக்கு ஜன்ம இயற்கை. இந்தப் பிரகிருதியுள்ள அவர் செல்வராகப் பிறந்ததனால் பாடுபட நிமித்தம் இல்லையே—சும்மா இருந்து பெருவாழ்வு வாழ்ந்தாலே விரும்புவார். ஆனால் அவர் அப்படிச் செய்யவில்லை. தமது சுகத்தை மறுத்துவிடவும், சிரத்தையாய்க் கல்வி கற்றுத் தேறவும் பாலியத்திலேயே அவர் பிரதிக்ஞை செய்திருந்தார். காலம் என்பது திரவியம் என்றும், அது கிடைத்து நிற்காதென்றும் எண்ணி, அதிகாலையில் நித்திரையில் வீண்பொழுது போக்குவதை நினைத்து மிகு மனஸ்தாபப்பட்டு, இவ்வழக்கத்தை விட்டுவிடத் தீர்மானித்தார். நெடுநாட் பழகின பழக்கம் கொஞ்சத்தில் எப்படியோ—அதை நிறுத்திவிட அவர் கொஞ்சக் காலம் பட்டபாடு மிகுதி. சித்தஸ்திரம் இருந்தும் நிச்சித்தபடி காலைவரம்பு தப்பாமல் எழுந்திருக்க அவரால் முடியவில்லை. இனிப் பிறர் துணையின்றிப் பிரதிக்ஞை முடிக்கத் தம்மால் மாளாதென்று, அவர் தமக்குக் குற்றேவல் செய்யும் ஜோஸெப் என்பவனை அழைத்து, "நீ என்னை ஆறு மணிக்குமுன் எழுப்பிவிடுவாயானால், ஒரு முறைக்கு இரண்டரை ரூபாய் வீதம் உபகாரம் தருவேன்" என்று வாக்கிட்டார். ஆரம்பத்தில் சிறிது காலம் அவரைப் பிடித்த படுக்கையினின்று எழுப்பிவிடுவது பிரயாசைகரமாயிருந்தது. சில வேளை அவர் எழுந்திருக்கமாட்டேனென்று சொல்வார்—சில வேளை உடம்புக்குச் சுகம் இல்லையென்று சாக்கிட்டுக்கொண்டு படுத்திருப்பார். சில வேளை அட்டாதே போவென்று சினக்குறிப்புக் காட்டுவார். இப்படிச் சொல்லி காழி

ளை சென்று எழுந்து அன்று பகல் முழுதும் சொற்படி என்னை எழுப்பாதுபோனையே பாவீ என்று திட்டுவார். கடைசியில் அவ்வேலைக்காரன் துணிவு கூர்ந்து இனி என்னதான் போனாலும் வெகுமதி பெறுவது விடுவதில்லையென்று பிரதிக்கினை செய்துகொண்டு, குறித்த காலவரையறை தப்பாமற் போய் யஜமானை எழுப்புவான். பின்னும் சற்று வேளை படுத்திருக்க விடு என்று கெஞ்சுவார், நித்திரை இன்னம் தெளியவில்லையென்று சொல்லி நேரம் கடத்துவார், இக்ஷணமே உன்னைச் சேவகத்தினின்று தள்ளிவிடுவேனென்று வெருட்டுவார். அந்த வெருட்டுக்கு அவன் அஞ்சவில்லை. துணிந்தவனுக்கு அச்சம் ஏது. ஒரு நாட் காலையில் எழுப்ப எழுப்ப பப்பன் படுத்த படுக்கையினின்று எழுந்திருக்கவேயில்லை, ஒட்டாரமாய்ப் படுத்துக்கொண்டார். அதற்கு அந்த வேலைக்காரன் வளமான உபாயம் ஒன்றை அடுத்துத் தன் கருத்துப்படி சாதித்தான். அந்த உபாயம் மற்றொன்றல்ல. அறக் குளிர்ந்து உறையும் பதத்திற்கு வந்த தண்ணீர் ஒரு தோண்டி மொண்டுபோய் யஜமான் படுத்திருந்த மெத்தை நனைய அவர் உடம்பில் தெறிக்காமல் இறைத்தான். மெத்தை நனையவும் பப்பன் அடித்துப் பதைத்து எழுந்தார். இந்த உபாயத்தை வேலைக்காரன் விடுவிடாமல் அடுத்துச் செய்யச் செய்ய நாட் சென்று உரந்த வழக்கம் பற்றறத் தொலைந்தது. தாம் எழுதிய சராசர நூலின் நாலு மூன்று காண்டம் ஜோஸெப்புடைய சகாயத்தால் எழுதி முடித்ததாக இதைச் சுட்டி பப்பன் அடிக்கடி சொல்வதுண்டு.

பிரதி தினமும் காலையில் ஒன்பது மணி தொடங்கிப் பின்னேரம் இரண்டு மணி வரையும், சாயரக்ஷை ஐந்து மணி தொடங்கி ராத்திரி ஒன்பது மணி வரையும் பப்பன் குறையாமல் நாற்பது வருஷகாலம் இருந்த இருப்பில் நூல் எழுதிக்கொண்டுவந்தார். அவர் இடைவிடாமல் எப்பொழுதும் முயற்சி செய்துகொண்டு வந்ததனால், நன்றாய்ப் பயின்று கலை தெளிந்திருந்தார். "உழைப்பு அவருக்கு உயிர்த்துணை;

உள்ளநாளளவும் கல்வியே அவருக்கு ஆனந்தம்; பிரபலராயிருந்து அவருடைய கடைசிக்காலத்தில் இன்னும் சில வருஷம் வித்தியா காலக்ஷேபம் செய்ய இடம் பெறுவது எனது வாஞ்சையென்று அவர் அடிக்கடி சொல்வதுண்டு" என அவர் சரித்திரம் எழுதின வித்வான் சொல்லுகிறார். அவர் நெஞ்சறிய நன்றாக உழைத்தவர்; தமது சிறந்த அபிப்பிராயங்களைப் பிறர் அறிய வருந்தித் தெளிமொழிகளில் எழுதி வெளியிட்டவர். அவர் தமது வாசகத்தை அலுப்பற்று மேலு மேலும் பிழை கண்டு திருத்தித் திருத்தி நன்றாய் விளக்குவார். ஆகவே அவர் இயற்றிய கிரந்தங்களின் வாசகசுத்தி பூர்த்தியென்று சொல்லலாகும். அவர் இயற்றிய "சமஸ்த சாரசர காலாவலி" எனும் கிரந்தம் அழித்தழித்துப் பதினொரு முறை எழுதியபின்பு தானே அவர் மனதிற்கு இதமாயிற்று. அவர் அதைப் பெயர்த்துப் பெயர்த்து எழுதினது பதினொரு முறை, முன் அதைச் சிந்தித்துச் சீர்தூக்கிப்பார்த்ததோ கிட்டத்தட்ட ஐம்பது வருஷம். உழைக்கும் துறையில் அவர் கிரந்த நிபுணர்; அவர் செய்வதெல்லாம் கிரமமாயிருக்கும். கிரமம் இல்லாவிடில் ஜன்ம விவேக முக்காற்பங்கு பலம் குன்றுமென்று அவர் சொல்வது வழக்கம். அவர் எழுதிய கிரந்தங்கள் பிரபலமாய் வாய்த்தது முக்கியமாய்ச் சலிப்பறச் சிந்தை செலுத்தி வருந்தி உழைத்ததனாலேதான். "விவேகம் என்பது எந்த விஷயத்தையும் ஆழ்ந்து நினைந்து அவதானிப்பதனால் விளையும் சித்தியென உள்ளம் தேற நம்பி, பப்டன் பண்டிதர் முதல் முறை தான் கிரந்தம் எழுதி முடிப்பதற்குள் சுத்தமாய்ச் சோர்ந்துபோயினேன். நான் எழுதியது ஒருவாறு சரிதானென்று என் புத்தியில் பட்டதுண்டு. உண்டெனினும், எழுதினதை மீளவும் நுணுக்கமாய்ப் பிழைபாராமல் தீராதென்று ஒரு பிடியாய் நின்று வாசித்துப்பார்த்தேன். இப்படி எழுதும் நான் ஒவ்வொன்றையும் ஒரு முறைக்கு இரு முறை இரு முறைக்குப் பல முறை வாசித்து

வாசித்துத் திருத்தி வழக்கப்பட்டதனால், மேலுமேலும் நினைத்து எதையும் திருத்துவது எனக்கு அலுப்பாயல்ல, ஆனந்தமாயிற்று என்றார்" என நெக்கர் பெருமாட்டி (Madme Necker) எழுதியிருக்கிறார். மேலும் பப்பன் இயற்றிய பெரு நூல் அனைத்தையும் எழுதியது மிகக் கொடிய வியாதி கண்டு உபத்திரவப்படும்பொழுது.

பப்பனைப்போலப் பலமான கடைப்பிடியுள்ள வித்துவான்கள் பின்னும் வெகு பெயர் உண்டு. இந்த ரூபமாய்ப் பார்க்குமிடத்தில் முக்கியமாய் ஸ்ரீ வால்த்தர் ஸ்காத்(Sir Walter Scott)உடைய சரித்திரத்தில் நமக்கு அறிவு தரத் தக்க குறிப்புகளைக் காணலாம். ஒரு நியாயவாதியிடத்தில் வெகு வருஷகாலம் கஷ்டப்பட்டுழைத்துப் பண்பட்டதனால் அவருக்கு உழைப்பில் அருந்திறம் உண்டாயிற்று. அவர் பார்த்துவந்த அலுவல் நியாயவாதி எழுதிக்கொடுத்ததை நித்தமும் பார்த்தெழுதிக்கொண்டுவருவதே. அநுதினமும் திருப்பித் திருப்பிச் செய்ததையே செய்து அலுப்புற்றதனால், சாயரக்ஷையில் வீட்டுக்குப் போய் இளைப்பாறுவது அவருக்கு மிக்க இன்பமாயிருந்தது. பெரும்பாலும் அவர் ராத்திரிகாலத்தில் கல்வி கற்றுப் பத்திரிகை முதலியவைகள் வாசித்துக்கொண்டிருந்தார். கேவலம் கல்விமுயற்சியில் நாள் கழிப்பவர்கள் விட்டுவிடாமல் எப்பொழுதும் அம்முயற்சி செய்யத் தாளார்கள். இந்தக் குணாதிசயம் ஸ்ரீ வால்த்தர் ஸ்காத்திற்கு மெத்தவும் உண்டு. பகல் முழுதும் நியாயவாதி உத்தியோகசாலையில் அலுப்புற உழைத்துப் பண்பட்டிருந்ததனால் நமக்கு இச்சாமர்த்தியம் உண்டாயிற்றென்று அவரே சாக்ஷிபகர்ந்தார். அவர் எழுதும் ஒவ்வொரு பக்கத்திலும் இத்தனை சொல் இருக்கவேண்டுமென்று வரையறை உண்டு. இவ்வரையறைப்படி பக்கம் ஒன்றுக்குக் கூலி இரண்டு அணா குறித்த காலவரம்பு கடந்து அவர் சில வேளை அதிக வேலை செய்துவருவார். இருபத்துநாலு மணிநேரத்தில் சராசரி நூற்றிருபது பக்கம்

எழுதுவார். அதற்குக் கூலி பதினைந்து ரூபாய். அதில் அன்னவஸ்திராதிகளுக்குச் செல்வது சென்று ஏதும் மிஞ்சினால் அதற்கு இடைக்கிடையே புஸ்தகம் ஒன்று பாதி வாங்குவார். அதிக நேரம் வேலை செய்யாமலும் செலவை நெருக்காமலும் இருப்பாரானால், அந்த ஒன்று பாதி வாங்குவது கூட அசாத்தியம்.

கைசலிக்க உழைத்து வழக்கப்பட்டிருந்ததை ஏகாந்த பிற்பருவத்தில் தமக்குப் பெருமையாய் எடுத்துப் பேசுவார். அன்றியும், விவேகிகள் சாமானியரைப்போலக் கைப்பாடுபட விரும்புவது இயற்கையல்லவென்று சொல்வது தப்பு; அது † குறுங்கவிஞர் சொல்லும் ‡ பொருந்தா முறைப்பாடு என்று அவர் உறுதிமொழி பகர்ந்தார். ஆனால் தினமும் நாலைந்து மணிநேரமாவது பிழைப்பிற்கு உரிய வேலைகளில் மெய் வருந்தி உழைப்பது அறுதியில் மனதின் உன்னத கருவிகரணாதிகளுக்கு அனுகூலமென்று அவர் அபிப்பிராயம் சொல்வார். பிற்பாடு, எடின்பர்க் ஸெஷன் கோர்ட்டில் சிரேஷ்ட லிகிதர் உத்தியோகம் செய்தபோது, அவர் கிரந்தம் எழுதும் வேலையை முக்கியமாய்க் காலைப் போஜனத்திற்குமுன் செய்து முடிப்பார். போஜனத்திற்குப்பின் கோர்ட்டுக்குப் போய், ரெஜிஸ்தர் செய்த பத்திரங்களையும் பல வித சாதனங்களையும் பார்வை யிட்டுக் கையொப்பம் வைப்பார். மொத்தம் பார்க்கில், "முக்கியமாய்க் கல்விமுயற்சியில் அவர் மனம் பிரவர்த்தித் திருந்த காலத்திலும் பிரதி வருஷமும் அநேகம் ஆறு மாசம் அன்றன்று அதிக காலம் பிழைப்பிற்கு உரிய தொழில் செய்துகொண்டுவந்தார். அவர் சரித்திரத்தில் இது ஒரு அதிசயமாகத் தோன்றுகிறது" என லக்கார்த் என்பவர் சொல்லுகிறார். காம்ப[illegible] கவியானவர் [illegible]

† குறுங்கவிஞர்—sonneteers, writers of short poems.
‡ பொருந்தாமுறைப்பாடு—cant, affected complaint.

ஜீவனம் பண்ணுகிறதென்று அவர் பிரதிக்கினை செய்து அதே பிரகாரம் நடந்தார். "கல்வி எனக்கு ஊன்றுகோல், கக்கதண்டமல்ல. நான் கற்ற கல்வியால் தேடும் திரவியத்தைக் கூடியவரையில் வேறு காரியங்களிலன்றிக் குடும்ப சம்ரக்ஷணைக்காகச் செலவிடுகிறதில்லை. இது எனது நிர்ணயம்" என்று ஒரு சமயத்தில் அவர் சொன்னார்.

அந்தந்த வேலையை அததற்குக் குறித்த வேளையில் தவறாமற் செய்துமுடிக்கும் வழக்கத்தை அவர் நன்றாய்ச் சாதனைசெய்திருந்தார். இந்தச் சாதனை அவர்க்கு இல்லாதிருக்கச் சம்பவித்தால், அவர் இயற்றிய அளவு கடந்த கிரந்தங்களை எழுத மாளுமா மாளாதே. அன்றன்று வரப்பெறும் கடிதங்களில், விசாரித்து யோசிக்க வேண்டியவைகள் போக மற்றவைகளுக்கு அன்றன்றே உத்தரம் எழுதிப் போடவேண்டும் என்று அவர் நியதிசெய்திருந்தார். கடிதங்கள், பத்திரங்கள் எப்பொழுதும் மழைபொழிவதுபோல் அவருக்குத் திரளாய் வந்துகொண்டிருந்தன. அது கண்டு சில வேளை சாந்தசீலராகிய அவர்க்குச் சிறிது கடுப்பு உண்டாவதுமுண்டு. அவர் * சமயநிஷ்டரல்லாதிருக்கச் சம்பவித்தால், அந்தக் கடிதப் பிரளயத்திற்குச் சலிக்காமல் ஈடுகொடுத்து நிற்கமாட்டாரா — அவர் தினமும் அதிகாலையில் ஐந்து மணிக்கு எழுந்திருந்து தாமே தீபம் ஏற்றி வைத்துச் சவரம்பண்ணி வஸ்திரம் தரித்துக்கொண்டு ஆறு மணிக்குமுந்தி எழுது பீடத்திற்குமுன் வேலை தொடங்க எத்தனமாய் உட்கார்ந்திருப்பார். சவரம் செய்துகொள்ளும்பொழுதும் உடை உடுக்கும்பொழுதும் அவர் சித்தை ஏதாயினும் ஒரு விஷயத்தில் பிரவர்த்தித்துக்கொண்டிருக்கும். மேசையில் பத்திரங்கள் எல்லாம் வரிசையாக வைத்திருக்கும். அடிக்கடி பார்க்கவேண்டிய புஸ்தகங்கள் அவர் ஆசனத்தைச் சுற்றித் தரையில் அணியணியாய் வகுத்து வைத்திருக்கும். புஸ்தகங்களுக்கு அப்பால் அவர்க்கு

* சமயநிஷ்டை — punctuality.

இஷ்டமுள்ள நாய அதமம ஒன்றாயினும் அவர் முகத்தைப் பார்த்துக்கொண்டு படுத்திருக்கும். காலைப் போஜனத்திற்குக் குடும்பத்தார் எல்லாரும் கூடுவது ஒன்பதரை மணிக்கு. அதற்குள்ளாக, அன்று செய்யக் குறித்த வேலை அரைக்கலாவாசி முடிக்கப்போம். அந்த நாள் வேலைக்குக் கழுத்து முறியத்தக்க அளவு வேலை காத்திருக்குமென்று அவர் சொல்வார். அவர் சிரத்தையாய் எப்பொழுதும் இளைப்பற முயற்சி செய்தவர்; வெகு வருஷகாலம் பதறாமற் பொறுத்துழைத்துக் கலைப்பொருள் மெத்தவும் சம்பாதித்தவர். இவ்வரிய நிபுணர் தமது வித்தியாபலத்தை எப்பொழுதும் சிறக்கணித்துப் பேசுவார். "நான் இறங்கிய துறை அனைத்திலும் என் அறியாமையால் வருந்தியும் திவிரகதி குன்றியும் போனதுண்டு" என்று ஒரு முறை அவர் வாக்கினின்று பிறந்தது.

மெய்யறிவும் மனத்தாழ்மையும் இவ்வகை ஆம். கல்வி ஏற ஏறக் கர்வம் அடங்கும். டிரினிடி வித்தியாசாலை மாணாக்கன் ஒருவன் ஒரு நாள் ஆசிரியரிடத்திற்குப் போய், "கல்வி கற்று முடித்ததால்" விடை பெற்றுப் போக வந்தேனென்று சொல்ல, ஆசிரியர், "மெய்யா, நான் இப்பொழுதுதான் கற்கத் தொடங்குகிறேன்" என்று அவன் முகம் முறியச் சொன்ன வாக்கியத்தில் எவ்வளவோ ஞானம் இருக்கின்றது. பல விஷயங்களை வெண்மட்டமாய் அறிந்து ஒன்றையும் நுழைந்தறியாத வெள்ளறிவுடையோன் தன் வித்தியா சமர்த்தைக் குறித்து மேன்மை பாராட்டினும் பாராட்டுவான்; அறிவாளியோ "நான் கற்றறிந்ததெல்லாம் எனக்கு ஒன்றும் தெரியாது என்பதே" என்று பணிந்து சொல்வான், அல்லது நியூட்டன் என்பவர் சொன்னபடி, நான் இதுவரையிற் கற்றதெல்லாம் கடற் கரையிற் கண்டெடுத்த சில கிளிஞ்சில், அதோ என் கண்ணெதிரில் கரைகாணாதிருக்கின்ற கல்விப் பெருங்கடலில் நான் இன்னம் இறங்கவில்லை என்று சொன்னாலும் சொல்வான்.

இரண்டாம வகுப்பு வித்வஜ்ஜனர் சிலருடைய சரித்திரத்தால் கடைப்பிடித்திடும் மயக்கமற விளங்கும். "இங்கிலாந்து வேல்ஸ் இவற்றின் சிறப்பு" எனும் புஸ்தகமும், சிற்பசாஸ்திரத்தில் மற்றனேக மேலான கிரந்தங்களும் எழுதின ஜான் பிரிட்டன் (John Britton) என்பவர் பிறந்தது வில்த்ஷியர் ஜில்லா, கின்ஸ்டன் கிராமத்தின் ஓர் பஞ்சைக் குடும்பத்தில். அவர் தகப்பன் சிறிது காலம் ரொட்டிசுட்டு விற்றும், சிறிது காலம் சாராயம் காய்ச்சி விற்றும் பிழைத்தவன். கடைசியில் வியாபாரம் சிதைந்து அவன் கடன்பட்டு உன்னதெல்லாம் போக்கடித்துப் பைத்தியகாரனுகி இறந்துபோனுன். அப்பொழுது பிரிட்டன் சிறு குழந்தை. இச்சிறுவன் பள்ளியிற் கற்றது அற்பம். அவனுடன் கற்ற சகபாடிகளும் விளையாட்டுத் தோழரும் தீயொழுக்கமுள்ளவர்கள். ஆனால் அவன் அவர்கள் துறையில் இறங்கிக் கெட்டுப்போகவில்லை, சிறு பருவத்திலே அவனைச் சிறிய தந்தையுடைய மதுக்கடையில் தொழில் பழக வைத்தார்கள். சாராயத்தைப் புட்டியில் விட்டு அடைத்துக் கொண்டுபோய்க் கிடங்கில் அடுக்குவது அவன் வேலை. இவ்வேலை இடைவிடாமல் அவன் செய்துகொண்டுவந்த காலம் ஐந்து வருஷத்திற்கு அதிகம். அப்பால் அவன் இளைத்து நோயாளி ஆனுன். ஆகவே, சிற்றப்பன் அவனைத் திக்கற்றுத் திரியும்படி தெருவிலே விட்டான். அவன் அங்கியுறைக்குள் வைத்திருந்த பணம் ஆக இருபத்தொரு ரூபாய். ஐந்து வருஷம் பாடுபட்டுழைத்ததற்குச் சிற்றப்பன் கொடுத்த சம்பளம் அம்மாத்திரந்தான். அதன்பிறகு ஏழு வருஷகாலம் அவன் பட்ட பாடு பகரப்படுகிறதல்ல. அவன் சரித்திரம் அவனே எழுதிப் பிரசுரப்படுத்தினுன். அதில் "எனக்கு விடுதி கொடுத்தவர்கள் ஏனெனில், வாரம் ஒன்றுக்கு விடுதிச்செலவு மூன்று ரூபாய். அங்கிருக்கும்பொழுது கல்வியில் ஆசை பெருகி மாரிகாலத்தில் ராத்திரிவேளையில் பெரும்பாலும் படுத்தபடுக்கையில் வாசித்துக்கொண்டிருப்பேன்.

குளிர் காய நெருப்பு எரிக்கும்படி விறகு வாங்க எனக்கு நா
வகம் இல்லையே'' எனச் சொல்லுகிறான். பாத் நகரத்திற்
குக் கால்நடையாய்ப் போய் அங்கவனுக்கு நிலவறையில்
பலபண்டம் சேமிக்கும் தொழிலில் அமர்ந்தது. சிறிது கா
லம் அங்கிருந்து அப்பால் லண்டன் நகரத்தில் பஞ்சைக்
கோலமாய்ப் போய்ச்சேர்ந்தான். கையிற்றுட்டுப் பணம் கா
லுக்குச் சோடு, உடம்பு மூட ஆடை ஒன்றும் கிடையாது.
இப்படி இருந்தும், மனம் சலித்து வீணிற் பொழுது கழி
க்காமல் முயற்சியாய் வேலை விசாரித்துத் திரிந்தான். ஒரு
சாராயக்கடையில் நிலவறை வேலை அவனுக்குப் படிந்தது.
காலையில் ஏழு மணிக்கு நிலவறையில் போய் அவன் மீண்டு
வெளியே வர ராத்திரி பதினொரு மணி வரையிற் செல்லும்.
பிரதிதினமும் காற்றடைப்பான இருளறையில் அத்தனை
நேரம் இருந்து கஷ்டப்பட்டதனால் அவன் விரைவில்
சௌக்கியம் குன்றி அவ்வேலையை விட்டுவிட்டான். அந்தக்
கஷ்டஜீவனம் செய்துவரும்பொழுது அன்றன்று வேலை
ஒழிந்திருக்கும் சொற்ப காலத்தில் சிறிது வேளை எழுதி
எழுதி அவனுக்குக் கையெழுத்து நன்றாய்ப் படிந்திருந்தது.
ஆனதுபற்றி, வியாபாரி ஒருவரிடத்தில் எளிதாக அவ
னுக்கு எழுத்துவேலை அமர்ந்தது. சம்பளம் வாரம் ஒன்று
க்கு ஏழரை ரூபாய். இவ்வுத்தியோகம் செய்துவரும்
பொழுது, அவகாசம் கண்டு அங்கங்குள்ள புஸ்தகசாலைக
ளுக்குப் போய்க் காணும் அரிய புஸ்தகங்களை ஆனமட்டும்
வாசித்துக்கொண்டிருந்தான். கிரயம் கொடுத்து வாங்
கிக் கிரமமாய் வாசிக்க ஸௌகரியம் இல்லை. காலாவர்
த்தியில் அவனுக்கு அவ்வொன்று இவ்வொன்றாக அநேக
விஷயங்கள் தெரிந்தன. பின்பு வாரம் பத்து ரூபாய்ச்
சம்பளத்தில் மற்றொருவரிடத்தில் அவனுக்கு உத்தியோ
கம் படிந்தது. மேற் சொல்லியவாறு ஒழிந்த வேளையில்
புஸ்தகம் தேடி வாசித்துக் கல்வியை விருத்தி செய்துகொ
ண்டுவருவதை அவன் ஒரு நாளும் மறந்திருக்கவில்லை.

வாவாந் தேதி இருபத்தெட்டுப் பருவத்தில் "பிஜாரோவின் அருந்தொழில் வரலாறு" எனும் புஸ்தகம் எழுதிப் பிரசுரஞ்செய்தான். அன்றுதொட்டு அவன் சாந்தனையும் சென்ற காலம் ஏறக்குறைய ஐம்பத்தைந்து வருஷம். இத்தனை காலமும் கல்வியபிவிர்த்தி முயற்சியிற் கழிந்தது. ப்ரிட்டன் பிரசுரஞ்செய்த கிரந்தம் நூறு இரண்டல்ல, சரியாய் எண்பத்தேழு. அவற்றுள் சிரேஷ்டம் "இங்கிலேய அத்தியக்ஷர் தேவாலய பூர்வம்" எனும் புஸ்தகம். அது பதினாலு புஸ்தகமாக வகுத்திருக்கின்றது. அது மசந்தான் கிரந்தந்தான். ஜான் ப்ரிட்டனுடைய சலியா முயற்சிக்கு உசித ஞாபக சின்னம் அதே.

தோட்டப் பயிர்த்தொழில் பயின்ற லௌடனும்(London) இத்தகைமையுள்ளவனே. கஷ்டம் பாராட்டாமல் உழைக்கும் திறத்தில் அவன் ராக்ஷசன். எடின்பர்க்கு நகரத்தின் சமீபத்தில் இருந்த கிருஷிகன் ஒருவனுடைய மைந்தனுதலால் கைப்பாடுபட்டுழைப்பதே இளம்பருவம் தொட்டு அவன் குலவிர்த்தி ஆயிற்று. படம் எழுதவும், கண்ணுக்குத் தோன்றும் தேசக்காட்சிகளைச் சித்திரிக்கவும் எவரும் அவனுக்குக் கற்பிக்காமலே திறமை உண்டாயிற்று. இதைக் கண்டு அவன் தகப்பன் அவனைச் சிறந்த நந்தவனங்கள் செய்யும் தொழிலைப் பயில ஒருவனிடத்திற்கு அனுப்பினான். இத்தொழில் பயின்றுவரும் காலத்தில் வாரந்தோறும் இரண்டு ராத்திரி அவன் சற்றும் நித்திரை செய்யாமல் விழித்திருந்து படித்துக்கொண்டு வருவான். ராத்திரி விழித்திருந்தபடியால் மறுதினம் அவன் வேலையில் முயற்சி குன்றிப் பின்வாங்குவானு இல்லை இல்லை, மற்றவர்களைக் காட்டிலும் பின்னும் ஒரு பங்கு அதிகம் பாடுபடுவான். ராத்திரிகாலத்தில் நித்திரை மறந்து கல்விகற்கும் சாதனை நடந்து வரும்பொழுது அவன் பிரான்சிய பாஷையும் கற்றுத் தெளிந்து பதினெட்டுப் பருவமாகுமுன் வித்தியாமண்டலம் எனும் புஸ்தகம் ஒன்றிற் பிரசித்தப்படுத்த

ஆலிவாரட் என்பவனுடைய சரித்திரத்தைப் பிரான்சிய பாஷையினின்று மொழிபெயர்த்துக் கொடுத்தான். விவசாயில் தேறித்தெளிந்த ஆவல் அவனுக்கு மிகுதி. இங்கிலாந்தில் தோட்டவேலை செய்துவரும்பொழுது அவனுக்கும் பெருமை இருபது. இவ்விளம்பருவத்தில் அவனுக்கு முதியோர்க்கு உரிய பாரசிக்கத்தை உண்டாக்கக் கூடிய புஸ்தகத்தில் அவன் எழுதிவைத்த பின் வரும் வாக்கியத்தால் தெரிகினறது:—“எனக்கு இப்பொழுது பருவம் இருபது. என் வாழ்நாளில் மூன்றில் ஒரு பங்கு சென்றபின்பு, இவ்வளவில் உலகத்திற்கு என்ன உபகாரம் செய்தேன்?” இது சாதாரணமாய் இருபது வயதுள்ள வாலிபன் வாக்கினின்று பிறக்கும் சொல்லேயல்ல. பின்னை பாஷை கற்றபின், அவன் ஜர்மன் பாஷை கற்று வினாவின் பண்டிதனானான். விஸ்தாரமான நிலம் வாங்கி, விசாலத்தில் நூதனமாய் வந்பட்ட இருபிரிவு முறையை அனுசரித்துப் பயிர்செய்து சிறிது காலத்திற்குள் விவசாயத்தால் அவன் வெகு திரவியம் சம்பாதித்தான். ஐரோப்பாவில் சண்டை ஒழிந்து சமாதானம் நிலைபெற்றபின் அங்குள்ளவர்கள் அனுசரிக்கும் இருவிதிகளை ஆராய்ந்தறிந்து வரும்படி அவன் பிரயாணப்பட்டான். இம் முறைக்கிரமமாக ஐரோப்பா கண்டத்திற்கு அவன் போனது ஒரு முறையல்ல, இரு முறை. அவ்விரு பிரயாண வரலாறுகளையும் அவன் இயற்றிய வித்தியாமனோடைம் என்னும் புஸ்தகத்தில் காணலாம். அவனுக்கு உதவும் ஆகிய விஷயங்கள் அனேகம் அக்கலைக்களஞ்சியத்தில் இருக்கின்றன. விந்தியாமண்டலம் என்ற பெயர் வழங்கும் கிரந்தங்களை வேறுவேறு பெயர் எழுதியிருக்கிறார்கள். அவற்றில் ஒன்றும் இதற்கு ஈடில்லை. இதை எழுத அந்த நிபுணன் பட்ட பிரயாசைக்கும் உழைத்த உழைப்புக்கும் சமானம் இல்லை.

சாமுவேல் டுரு (Samuel Drew) வின் சரித்திரமும் மேலே எடுத்துக் காட்டிய சரித்திரங்களைப்போல் அத்தனை

அதிசயமானதுதான். அவன் தகப்பன் கஷ்டப்பட்டு உழைத்துப்பிழைத்த சாமானியன். அவன் இருப்பிடம் கிராமவேலைச் சேர்ந்த ஸெர்து ஜனஸ்தெல் கோவிற்பற்று. ஏழையாயிருந்தும், அவன் செலவை நெருக்கித் தன் புத்திரர் இருவரையும் அயல் கிராமப் பாடசாலைக்கு அனுப்பி அவர்களுக்கு எழுத்தறிவித்துவைத்தான். உபாத்தியாயர் சம்பளம் தலைக்கு வாரம் ஒன்றுக்கு நாலு துட்டு. மூத்த மகன் பெயர் ஜெபெல். அவனுக்குக் கல்வியின் மேலுங்கூட ஆசை உண்டு. அதனால் நாளுக்கு நாள் நாட்டம் ஏறிற்று. இளையவன் ஸாம்யுஎல் மூட்டாள், தறுதலையென்று பெயர் எடுத்தவன், சோம்பேறி. எட்டு வயதில் அவனைத் தகப்பன் தகரக்கனியில் கூலிவேலை செய்ய விட்டான். அகழும் தாதைக் கழுவிக் கழுவிக் குவிப்பது அவன் வேலை. இவ்வேலைக்குக் கூலி தினம் ஒரு அணா. பத்து வயதில் பாதரக்ஷைத் தைக்கும் ஒருவனிடத்தில் பிதா அவனைத் தொழில் பழக வைத்தான். இவ்வேலை பயிலும்பொழுது அவன் பட்ட பாடு மிகுதி; "பாம்பின்வாய் அகப்பட்ட தவளைக்குஞ்சைப்போல்" இருந்து நாள்கழித்தேனென்று அவன் பெரும்பாலும் சொல்வான். இது கெட்டதென்று அவ்வேலையை விட்டு சேனைக் கட்டுக்கொள்ளை முதலிய ஏதாயினும் ஒரு துறையில் இறங்கிப் பிழைக்க அவன் பலநாள் எண்ணியதுண்டு. பருவம் ஏற ஏற, அவனுக்குத் துணிவும் ஏறியது. விருட்ச வனங்களில் கனி திருடுவோர்க்கெல்லாம் அவன் முதற்பாதம். சிறிது காலம் போனபின் கள்ளச்சரக்கு விற்றுப் பிழைப்பது அவனுக்கு ஆனந்தம். தொழில் பழகக் குறித்த காலம் அறியுமுன் பதினேழு வயதில் ஒருநாள் அவன் சண்டைக் கப்பலில் ஏறித் தேசாந்தரம் போக நினைத்து வேலையை விட்டு ஓடினான். துறைக்குப் போகும் மார்க்கத்திற் பொழுது பட எதிர்ப்பட்ட கழனியில் இராத் தங்கினான். அயர்ந்து தூங்கி எழுந்திருக்கவும், முதல் நாள் அவனுக்கு இருந்த பேய்ப் புத்தி போய் நல்ல புத்தி வந்து முன் இருந்த வேஷம் ஆயிற்று. ஆகவே மீளவும் வேலைஸ்தலத்திற்குத் திரும்பினான்.

அப்பால், டரு பாதரக்ஷை செய்து விற்று ஜீவனம்பண்ணும்படி ப்லிமத் நகரத்தை அடுத்த ஒரு சேரியிற் போயிருந்தான். அவ்விடத்தின் பெயர் கௌஸன்ட். அங்கிருக்கையில் சிலம்பம் செய்து அவன் ஒரு பந்தயம் கெலித்தான். சிலம்பவித்தையில் அவன் தேர்ந்த நிபுணன். அங்கே அவன் பாதி சமர்த்தனென்று பெயர் எடுக்க விரும்பியும், பாதி திரவியம் தேட நினைத்தும் கள்ளச்சரக்கு ஏற்றிக்கொண்டு போகத் தலைப்பட்டு மரணத்திற்கு மயிரிழையிடை தப்பினான். அக்காலத்தில் அவனுக்குச் சம்பளம் வாரம் ஒன்றுக்கு நாலு ரூபாய். அது அவன் செலவிற்குக் கட்டாது. ஒரு நாள் ராத்திரி கள்ளச்சரக்கு ஏறிய தோணி ஒன்று துறை சேர்ந்து சரக்கு இறக்க எத்தனமாயிருக்கிறதென்று க்ராப்தோல் எனும் கிராமத்தில் எங்கும் அறிக்கை செய்யப்பட்டது. அந்தக் கிராமவாசிகள் பெரும்பாலார் கள்ளச்சரக்கு விற்பனை செய்பவர்கள். அறிக்கை பிறந்தவுடன் அவர்கள் கடற்கரைக்குத் தீவிரித்துப் போனார்கள். ஒரு கூட்டத்தார் கரையில் உள்ள பாறையில் நின்று குறிப்புக் காட்டி, இறக்க இறக்கச் சரக்கை எடுத்துக் கொண்டுபோய்ச் சேமிக்க எத்தனமாய் நின்றார்கள். ஒரு கூட்டத்தார் சரக்கு இறக்கிக் கொண்டுவரச் சிற்றோடம் செலுத்திக் கொண்டு போனார்கள். டரு இந்தக் கூட்டத்திற் சேர்ந்தவன். அன்று ராத்திரியோ ஆளை ஆள் தெரியாவண்ணம் அன்னிருள்மயமாயிருந்தது. சரக்கு இரண்டொரு நடை கொண்டுவந்து பதிக்குமுன், காற்று உரத்துக் கடல் பொங்கியது. ஓடம் செலுத்தினவர்கள் ஊக்கமற்றுப் பின்னிடவில்லை; என்ன வந்தாலும் தொடங்கின கருமம் முடிக்காமல் விடுகிறதில்லையென்று சங்கற்பித்து நாலைந்து நடை போய்த் திரும்பினார்கள். அப்படிக் கடல் பொங்கவும் பின்னும் சற்று எட்டப் போய் நின்றது. நடைக்கு நடை ஓடக்காரர் அதிக தூரம் போகும்படி நேரிட்டது. டரு ஏறிய ஓடத்தின் இருந்த ஒருவனுடைய குல்லாயைக் காற்று அடி-

த்துக் கடலில் விழுந்திற்று. அவன் அதை எதிர்பாராததா லும், அந்த அதிர்ச்சியில் ஓடம் கவிழ்ந்துபோயிற்று. ஓடக் காரர் மூன்று பெயர் உடனே மூழ்கிப்போனார்கள். மற் றவர்கள் சற்று வேளை ஓடத்தைக் கைவிடாமற் பிடி த்துக்கொண்டிருந்து, வரவர அலை அடித்து ஓடத்தைக் கைக்கெட்டாமல் தள்ளிக்கொண்டு போனதனால், கடலிற் பாய்ந்து நீந்தத் தொடங்கினார்கள். அவ்விடத்திற்கும் கரைக்கும் சரியாய் இரண்டு மைல் தூரம்; அன்று கன இருளாயிருந்தது. ஏறக்குறைய மூன்று மணி நேரம் நீந் திக் கைகால் சலித்து ட்ருவும் வேறு இரண்டொருவரும் கரைக்குக்கிட்ட ஒரு பாறையிற் போய்ச்சேர்ந்து இராமு முழுவதும் குளிரில் சகித்து மரம்போல விறைத்துப்போ னார்கள். மறு நாட் காலையில் கட்டுமரங்கள் அவர்களைக் குறைப்பிராணிகளாய்க் கண்டு கட்டிக்கொண்டுபோய், கரையேற்றிச் சாராயப்பீப்பா ஒன்றைத் திறந்து தலைக் கொரு பீங்கான் பாண்டி குடிக்கக் கொடுத்தார்கள். வர வர விறைப்புத் தீர்ந்து உற்சாகம் பிறந்தது. கடக்க வசம் இருந்த ட்ரு உடையிலில் இரண்டு மைல்தூரம் நடந்து போய் வீடுபோய்ச் சேர்ந்தான்.

வாலிபனாயிருந்தபொழுது இந்த விபரீதத்துறையில் இறங்கின ட்ரு மயக்க ஏற ஏற எல்லை அதிக்கிரமத்திற் கும் இவனை முதற்பாதமென்று கூறி உலகம் அற்புதப்படு டான எடாக்கோட்டம் எல்லாம் செய்வானெல்லாம் - ஆறுதும், வாலிபகாலத்தில் அறநிலையினென்றும், காய்கனி இருடி யென்றும், சத்தியிவென்றும், நியமக்காரனென்றும், கள்ளச்சரக்கு ஏற்றிக்கொடுக்கிற செய்கையென்றும் கூறி அறியப்பெற்ற அந்த ட்ரு அவனையும் அவ்வேடாகோ டம் அனைத்தையும் மறந்துவிட்டு, ஆவிக்கொள்ளத்தக்க கவிகைகூட போதகரும் சபை ஊழியக்காரரும் ஆனார் - இது மிகவும் ஆச்சரியம்! சமயம் முதன்முதல், அவர் கிதைதயும் கதையும் நலம் தாமைக்கு இருப்பி, மன்பு தவிட்டு

பற்றிக்கட்டிக்கொண்ட அவர் பின்பு தமக்கும் பிறர்க்கும் உதவும் சிஷ்டரென்று பாராட்டத்தக்க யோக்கியரான பாக்கியமே பாக்கியம். தந்தை மீளவும் அவரை சேர்த்து ஒளஷ தொழிலுக்கு வரவழைத்து, அங்கங்கே இருந்த யாத்திரைகளை கட்டி விற்றுக்கொண்டுவரும்படி செய்தான். சற்று முந்தி இவ்வாலிபர் அங்கேயுள்ள அவ்வமையம் இறந்துபோக மயிர்க்கிடை தப்பிய சங்கதி சொன்னேனுமே. அதன்பின் அவருக்கு முந்தின அபிக்கும் அனைவும் மாறிப் பயபக்தி உண்டானதாகத் தோன்றுகிறது. உவெஸ்லியன் போதகராகிய ஆதாம் கிளார்க் என்னும் வேதாத்தியாபகர் வேதப்பிரசங்கத்தில் காலமொன்று வியந்துகொள்ளப்பட்டாரே. அவர் பிரசங்கம் கேட்டு இவருக்கு அதிக சிந்தனை உண்டாயிற்று. இப்படி இருக்கையில் சகோதரர் இறந்துபோனார். ஆகவே பரத்தியானம் பின்னும் அதிகரித்தது. அன்று தொட்டு அவர் குணம் குறி - இனிய அனைத்தும் மாறி மறுபிறப்புப் பிறந்தாரென்று அவரை அறிந்தோர்க்கெல்லாம் ஆச்சரியம் உண்டாம்படி சீர்ப்பட்டார். அவர் புதிதாகக் கல்வி கற்கத் தொடங்கினார். முன் எழுத வாசிக்கப் பயின்றிருந்ததெல்லாம் அவருக்கு மறந்துபோயிற்று. கல்வி பயிலும் முயற்சி மீளவும் தொடங்கிச் செய்து வருகையில் சென்றபின்னும் அவர் கையெழுத்துத் திருந்தவில்லை. அவரோடு பழகிய இஷ்டர் ஒருவர் அவர் கையெழுத்து மைப்புட்டியில் தோய்த்துக் கடுதாசியில் ஊர விட்ட பெட்டிப்பூச்சியின் அடித்தழும்புக்குச் சமானம் என்றார். அக்காலத்தில் ஒரு தம்மைக் குறித்துப் பின்வருமாறு மொழிந்தார்—"வாசிக்க வாசிக்க, என் அறிவீனம் எனக்குத் தோன்றிற்று. அறியாமை தோன்றத் தோன்ற, அறிவைப் பெற்றுச் சிறப்புற உழைக்கும் முயற்சி மேன்மேலும் உண்டாயிற்று. எப்பொழுதேனும் அவகாசம் இருந்தால் நான் அதை வியர்த்தமாய்ப் போக்கவில்லை. யாதாயினும் ஒரு விஷயத்தை வாசித்துக்கொண்டேயிருந்தேன். சகப்பாடுபட்டுப் பிழைக்கவேண்டி.

யிருந்ததனால், நூல் வாசிக்க உழைப்பு ஒழிந்த வேளை அதிகம் இல்லை. அதனால், பெரும்பாலும் சாப்பிடும்பொழுது, அரிசிப்பொறியோடு திருவாரூர் என்றதுபோலப் புஸ்தகத்தைத் திறந்து கண்ணுக்கு எதிரே வைத்து வாசித்துக்கொண்டிருப்பேன். ஒரு வேளை புசித்து எழுந்திருக்குமுன் ஐந்தாறு பக்கம் வாசித்திடுவேன்.” மனதைக்குறித்து லாக் ஆசிரியர் இயற்றிய பிரபந்தத்தை வாசிக்கவும் மனோதசாஸ்திர விசாரணையில் அவர் புத்தி பிரவர்த்தித்தது. அதற்குமுன் அவர்க்கு அந்த இயற்கை இல்லை. பின் வரும் அவர் வாக்குமூலமே இதன் சாக்ஷி:—“அந்த நூல் மூடஸ்திதியில் சுழுத்தி அவஸ்தையில் இருந்த என்னைத் தட்டி எழுப்பிவிட, வாலாயமாய் என் மனதில் பிறந்திருந்த எளிய அபிப்பிராயங்களை விட்டுவிடச் சங்கற்பித்தேன்.”

தம் தலைப்பாடாகத் தொழில் செய்யத் தொடங்கியபொழுது ட்ரு வைத்திருந்த கைம்முதல் ஆக ஐந்து ஆறு ரூபாய். அவர் எடுத்த கருமத்தை இடைப்பற முடிக்கும் உறுதிப்பாடுள்ளவர். இதை அறிந்து அண்டையில் மா அரைக்கும் யந்திரசாலை வைத்திருந்த ஒருவன் கடனாகச் சிறிது பணம் வலியக் கொடுத்துதவினான். அவர் அதை வைத்துத் தொழில் செய்து உழைப்பிற்குத் தக்க லாபம் பெற்று வாங்கின கடனை வருஷம் ஒன்று செல்லுமுன் கொடுத்துத்தீர்த்தார். எவ்விதத்திலும் கடன்படுவதில்லையென்று பிரதிக்ஞை செய்து அவர் வேலை தொடங்கினார். பின்பு எத்தனையோ கஷ்டநஷ்டங்கள் உண்டாயின. அவர் பிரதிக்ஞை எள்ளளவும் தப்பவில்லை. அவர் பகல் முழுதும் வேலை செய்து அலுத்து ராத்திரி பட்டினியாய்ப் படுத்துறங்கினதும் உண்டு. அன்டையயலில் உள்ளவர்களிடத்தில் கேட்டால் கடன் கொடுத்துதவுவார்கள் — உதவுவார்களே. கடன் வாங்கிச் சாப்பிட்டுப் படுத்துறங்கி மறு நாட் காலையில் எழுந்திருக்கும்பொழுது அதை நினைத்து நெஞ்சம் கலங்குவது அவருக்கு இஷ்டம் அல்ல, கடனாளியென்று வருந்துவதிலும் கூடும்

பணி தாங்குவது வாசியென்று அவர் எண்ணி நடந்தார். அலுப்பற்று உழைத்துப் பணம் சம்பாதித்து மிதச்செலவு செய்து இரக்கப்போகாமல் தம்மனையில் குறையற்றிருக்க வேண்டுமெனும் ஆசை அவருக்கு மெத்தவும் உண்டு. வர வர அவர் ஆசை கைகூடியது. இடைவிடாது மெய்வருந்தி உழைத்துக்கொண்டுவரும் காலத்திலும் அவர் கல்வியில் நாட்டமற்றிருக்கவில்லை. அறிவாளியாக விரும்பிக் கோள சாஸ்திரமும் சரித்திரமும் மானதசாஸ்திரமும் கற்றுக் கொண்டுவந்தார். முக்கியமாய்ப் பின்குறித்த கல்வி கற்பவர்கள் பார்வையிடுவதற்குப் பல கிரந்தங்கள் இல்லை. இம்முகாந்தரத்தினாலேயே அவர் புத்தி அதில் நுழைந்தது. “மானதசாஸ்திரம் முன்னுள்ள வழியாயிருந்தது. ஆனலும் நான் மனதைத் திடப்படுத்தி அதில் இறங்கி நடந்தேன்” என்று அவர் மொழிந்தார்.

பாதரக்ஷை வேலை செய்துகொண்டுவரும்பொழுது அவகாசம் கண்டு மானதசாஸ்திரம் கற்றதுமன்றி, [illegible] பிரசங்கமும் செய்துகொண்டுவந்தார். அல்லாமலும், அரசாட்சி விஷயத்தில் ஒரு கட்சிக்குத் தலைவருமானார். ராஜ காரியங்களில் அதிக நாட்டம் உண்டாயிற்று. அதை அறிந்து அந்தக் கிராமவாசிகளில் சிலர் ராஜவட்டம் பேசும்படி அவர் கடையில் ஆவலாய்க் கூடுவார்கள். அவர்கள் வாராத வேளைகளில் அவர் போய் அவர்களைக் கண்டுபேசுவார். இப்படிப் பேசின காலம் போனதனால் சில வேளை வேலை குறைவுபட்டது. ராத்திரி பன்னிரண்டு மணிவரையும் அவர் விழித்திருந்து விளக்கு வெளிச்சத்தில் அதைச் செய்துமுடிப்பார். ஒருநாள் இராத்திரி அவர் கதவு பூட்டிக் கடைக்குள் இருந்து பாதரக்ஷை ஒன்றுக்குப் பரபனை அடித்தோல் அறுத்துத் தைத்துக்கொண்டிருந்தார். இருக்கையில், வீதியில் சென்ற சிறுவன் ஒருவன் வெளிச்சத்தைக் கண்டு எட்டிப் பார்த்து திறவுகோல் இடும் கதவுத் துவாரத்தில் வாய் வைத்துக்கொண்டு, “சக்கிலி, சக்கிலி,

இராத்திரிக்கு இராத்திரி விழித்திருந்து வேலை செய்து பகல் முப்பது நாழிகையும் ஓடி உலாவித் திரிவதா உன் புத்தி!" என்று பிரசங்கித்துச் சொன்னான். பிறகு ஒரு நாள் இதைப் பற்றி ஒரு இஷ்டருக்குச் சொல்ல, அவர் "அந்தப் பையனைத் தொடர்ந்து பிடித்து ஏன் வாராமல் அடிக்காமல் விட்டுவிட்டீர்" என்று கேட்டார். அதற்கு நான், "இல்லை இல்லை, அவன் சொற் கேட்டு எனக்குச் சிந்தை கலங்கித் திகில் பிடித்தது. என் செவியோரத்திற் பிடித்துக் கைத்துப்பாக்கியாற் சுட்டாலும் அந்தளவு திகைப்பு உண்டாகாது. அவன் சொற் கேட்டவுடன் வேலையை இடையே நிறுத்திவிட்டு, 'மெய் மெய்! இனி ஒருபொழுதும் என்னைக்குறித்து இப்படிச் சொல்ல உனக்கு இடம் கிடையாது' என்று அவன் சொல்லுக்கு எதிர்மொழி சொன்னேன். அன்று எனக்கு அவன் வாய்மொழி திருவாய்மொழியாயிருந்தது. உற்ற சமயத்தில் உயிர்த்துணையாகப் பிறந்த அம்மொழியை மரண பரியந்தம் மந்திரம் என மதித்துக் காத்தேன். இன்று செய்ய வேண்டிய வேலையைச் செய்யாது நாளைக்கு நிறுத்திவைக்கலாகாதென்றும், உறங்கக் குறித்த வேளையில் சோம்பித் திரியலாகாதென்றும் அவன் சொன்னதை அறிந்துகொண்டேன்" என்று உரைத்தார்.

அந்த நிமிஷந்தொட்டு டக்ளஸ் சோம்பலுடன் பேசித்திரிவதை நிறுத்திவிட்டு, வேலையைச் சிரத்தையாய்ச் செய்துகொண்டுவந்தார். ஓய்ந்த வேளைகளில் கல்வி கற்றுத் தேறினார். கல்வி முயற்சியால் வேலைக்குத் தடை உண்டாம்படி அவர் ஒருபொழுதும் விட்டதில்லை. ராத்திரி காலத்தில் துயிலொழிந்து கல்வி கற்றுவந்தார். பிறகு அவர் விவாகம் செய்து அமெரிக்கா தேசத்திற்குப் போகும் வரைக்கும், பயின்ற தொழிலை விட்டுவிடாமல் செய்துகொண்டுவந்தார். கல்வி கற்கக் கற்கக் கவி பாடும் ஆசையில் அவர் மனம் சென்றது. அவர் இயற்றிய கவிகளில் சில இக்காலத்தில் இருக்கின்றன. இக்கவிகளாலேதான் அவருடைய

நிரவயவத்துவம் நித்தியத்துவம் எனும் குணங்களைப் பற்றி ய விசாரஞானம் அவர்க்கு உண்டாயிற்றெனத் தோன்றுகிறது. அவர் வித்தியாசாலை மனைப்பள்ளி; அங்கவர் மனைவி அப்பு ஊறிய தருத்தி அவர்க்கு எழுத்தாணீட்டம். காது அடைக்கும்படி ஓயாது அழும் பிள்ளைகளை அவர் மனைவி தொட்டிலில் படுக்கவைத்து ஆட்டிக்கொண்டிருக்க, அவர் சிந்தை சிதறாமல் எழுதிக்கொண்டிருப்பார். அக்காலத்தில் பேன் ஆசிரியர் இயற்றிய "விவேக புஷ்பம்" எனும் சாஸ்திரம் பிரசித்தப்பட்டது. அதைக்குறித்து அங்குள்ளவர்களுக்கு பெரு சிந்தனை உண்டாயிற்று. அதிற் கண்ட பிரமாணங்களைக் கண்டித்து ஒரு சிறிய சாஸ்திரம் ஒன்று எழுதிப் பிரசித்தப்படுத்தினார். தம்மைச் சாஸ்திர கர்த்தராக்கியது "விவேக புஷ்பம்" என அவர் பின்னிட்டுச் சொல்லியருவார். பிறகு அவர் எழுதிய பல சிறு புஸ்தகங்கள் ஒன்றன் பின் ஒன்றாய் விரைவில் பிரசுரமாயின. பின்னும் சில வருஷம் கழித்தபின்பே, பாதரசைக் கைக்கும் தொழிலும் செய்துகொண்டே, "மனுஷ ஆத்மாவின் நிரவயவத்துவ-நித்தியத்துவப் பிரபந்தம்" எனும் சிறந்த சாஸ்திரமும் எழுதிப் பிரசுரஞ்செய்தார். அந்த சாஸ்திரம் விசேஷத் தெளிய நூலாய் இருக்கிறது. அக்காலத்தில் அது அவர்க்குப் பெருந்தொகையாயிருந்தது. அச்சிட்ட பிரதிகள் அதிசீக்கிரம் செலவானதனால், அது அநேகப் பல பதிப்புகளாய்ப் பிரசித்தப்பட்டுக் கற்றோரால் இன்னவரையும் வியந்துகொள்ளப்படுகிறது.

பெரும்பாலும் வாசிப்பு எழுத்து சாஸ்திரம் வாய்க்கும் பொழுது அவர்களுக்கு வித்தியாகர்வம் உண்டாவது இயற்கை. பேருளிருக்கு அந்தக் கர்வம் சிறிதளவும் உண்டாகவேயில்லை. இறந்த சாஸ்திரியரென்று அவருக்குப் பெரும்புகழ் உண்டாய் விட்டபோதிலும், அவர் தமைப் பற்றி எதிரத் தமது வாசலுக்கு எதிர் வீதியைப் பெருக்குவார்; மாதினாயத்திற்கு ஆப்பு அளிக்கவேண்டும் இலக்ஷணி

யை அவரிடத்தில் தொழில் பழகுவோர் எடுத்துக்கொண்டு போய் வீட்டில் வாசிக்கும்பொழுது, தாமும் ஆளோடாளாக அவ்வேலை செய்வார். கல்விப்பயிற்சியைப் பிழைப்பிற்கு வழியாய்க் கொள்ளலாகாதென்று அவர் சிறிது காலம் நினைத்திருந்தார். பொய் களவு இன்றி வேலைசெய்து ஜீவனம்பண்ணி வேலை ஒழிந்திருக்கும் மீதியான காலத்தை மாத்திரம் "வித்தியாசித்தித் திருவுளச்சீட்டிற் போடுவதே அவர் முக்கிய சிந்தனையாயிருந்தது. (வித்தியாசித்தித் திருவுளச்சீட்டு என்பது அவர் கற்பித்த பெயர்.) காலம்போகப் போக, பிரதானமாய் வெஸ்லியன் வர்ணத்தாருடன் சேர்ந்து அவர் கல்விமுயற்சி ஒன்றிலேயே காலங்கழித்தார். அவ்வர்ணத்தாருடைய கல்விக்களஞ்சியம் எனும் பத்திரிகை ஒன்றை இயற்றி அச்சிடுவித்தவர் அவர். பின்னும் அவர்கள் மதசித்தாந்த விளக்கங்கள் சிலவற்றைத் திருத்திப் பிரசித்தம் செய்வித்தவரும் அவரே. அன்றியும் 'உசிதவிவேசனம்' எனும் பத்திரிகைக்கு அவர் பிரபந்தம் எழுதி அனுப்பிக்கொண்டுவந்தார். தமது ஜன்மஸ்தலமாகிய கார்ன்வல் மாகாணச் சரித்திரமும் வேறு சில கிரந்தங்களும் எழுதிப் பிரசுரஞ்செய்தார். சாவுகாலத்திற்குச் சற்றுமுந்தி அவர் தம்மைக்குறித்துச் சொல்லியது:—"தாழ்ந்த குலத்திற் பிறந்தும், வாழ்நாள் அறுதியளவாயில் சலிப்பற முயன்று மிதச் செலவுசெய்து சிக்கனமாய் நீதிநெறி விலகாதொழுகி இவ்வாறு எனது குடும்பத்தைக் கௌரவப்படுத்த எத்தனித்தேன். தெய்வம் முகம் களித்துப் பார்த்ததனால் செய்த முயற்சி என் மனக்கருத்தின்வண்ணம் சித்தித்தது".

காலஞ்சென்ற ஜோசெப் ஹ்யூம் (Joseph Hume) இவரைப்போல் மிக்க கருமங்களைத் தொடுத்து முடித்தவரேயாயினும், அவர் துறை ஒன்று, இவர் துறை ஒன்று. அவர் மத்தியம விவேகி - செய்தொழில் முயற்சியோ அதிகம் - மனநேர்மை குற்றம் கூறுதற்கு அரியது. அவர் அனுசரித்துவந்த நீதிமொழி "கருமம் கடைப்பிடி" என்பது. அவர்

அதை நன்றாகச் சாதித்தார். சின்னஞ்சிறிய வயசில் அவர் பிதா இறந்துபோக, மாதா மந்திரோசாவில் சிறு கடை ஒன்று வைத்து, குடும்ப சம்ரக்ஷணைக்காக வருந்தி உழைத்து, பிள்ளைகளை மானமாய் வைத்துக் காப்பாற்றிக்கொண்டுவந்தாள். ஜோசெப்பை ஒரு ரணவைத்தியனிடத்தில் தொழில் பழகி வைத்திய சாஸ்திரம் கற்க விட்டாள். கற்றுத்தேறிப் பரீக்ஷைகொடுத்து யோக்கியதாபத்திரம் பெற்று அவர் கடலோடிகளுக்கு * ரணவைத்தியராக ஏற்பட்டு, இந்தியாவிற்குப் பல பயணம் வந்துபோய் அதன்மேல் கம்பெனியாரிடத்தில் அவருக்கு ராணுவசேவகம் அமைந்தது. அவரினும் மிக வருந்தி உழைத்தவர்களுமில்லை, மிதமிஞ்சாதிருந்தவர்களும் இல்லை. செய்கடன் முடிக்கும் திறம் அவர்க்கு மெத்தவும் உண்டெனக் கண்டு கண்டு மேலதிகாரிகள் லக்ஷியம் வைத்து, அவரை உத்தியோகதரத்தில் வரவர உயர்த்திக

---

* மெஸ். ஹ்யூம் வைத்தியராக ஏற்பட்டு இங்கிலாந்திற்கும் இந்தியாவிற்கும் பிரயாணம் செய்துகொண்டு வரும்பொழுது ஒழிவு கண்டு மாலுமி சாஸ்திரமும் கடலோடும் தொழிலும் கருத்தாய்க் கற்றார். பிறப்பு வாசியாக இவ்வியற்கையுள்ள அவர்க்கு அந்தக் கல்வி வெகு வருஷஞ் சென்று விசேஷமாய் அநுகூலித்தது. 1825-ம் ஆண்டு அவர் லந்தனிலிருந்து வீட்டுக்குச் சிறு கலம் ஏறிச் செல்லும்பொழுது அக்கலம் தேம்ஸ் நதிமுகத்தினின்று விலகியவுடன் அசதியீற் புயல் அடித்து மாக்கலம் தப்பி ஓட இராவிருளில் காட்வின் மணற்களம் தட்டிப் பொருந்த, அதைக்கண்டு மாலுமி அதிவருந்தி யாருக்கும் உபாயம் சொல்லித் தீர்க்க இயலாதவனாயிருந்தான். அந்தக் கப்பலில் பிரயாணிகளில் ஒருவர் அசதியில் மாலுமியாக நின்று விசேஷித்த விக்கினம் தவிருமளவும் தாமே சுக்கான் பிடித்துக் காத்தோட்டிய உருவைக் கொப்புவித்துப் பார்த்தால் இருபேர் செலுத்தாவிடில் கூறு கட்டுச்சேதப்படுத்திக்கு ஒரையுக் ஐயம் இல்லை. இவ்வாறு சமயத்தில் அவ்வுருவைத் தப்புவித்த அவ்வியராகிய பிரயாணிகர் மெஸ். ஹ்யூம் என்பவரே.

கொண்டுவந்தார்கள். 1803-ம் ஆண்டு மஹாராஜாவுடைய பித தந்திருந்த பெண்களும் ஜமீன்தாருடன் போன தலைமுறையில் அவரும் ஒருவரே. போயிருக்கையில் ஜமீன்பாலிகர் இறக்க போக, சுதேசபாஷைகளை நாகரதமும் போற வாசிக்கப் பேசப் படியின்று தெரிவிருக்க வேண்டுமென்று அவ்வுத்தியோகம் படித்தது. அதன்பின் அவர் வைத்தியர் வாதுபாயில் அத்தியக்ஷராளுர். வருணக்கும் இறந்தில் அவனை ராஜ்ஞர் என்று சொல்லைத்தாரும். அவ்வுத்தியோகம் கிடைத்துப் போதாக் குறைக்குச் சம்பளம் கொடுக்கும் அதிகாரி - தபாலதிகாரி எனும் வேறிரண்டு உத்தியோகங்களும் இப்படிகமாய் கட்டிக்கொண்டிருந்தார். அன்றியும் கம்பெனி வருடப்பிரகு வேண்டும் சாமக்கிரிகளும் சமுதாயத்துக்கொடுக்க ஒப்பந்தம் பண்ணினுர். இதை அவர் ராஜ்யத்திற்கு கேடுமடும் தமக்கு ஜீவியமும் உண்டாம் வண்ணம் காலித்தார். சற்றுக் குறைய பத்து வருஷம் சேவித்து உழைத்து, இனி ஒருவர் தயவைக் காத்திராமல் முட்டின்றி ஜீவனம் செய்யத்தக்க திரவியம் சம்பாதித்துக்கொண்டு பிறகுத் திரும்பினர். அங்கே போய்ச் சேர்ந்தவுடன் தம் குடும்பத்தாரில் யொருவர் இல்லாதவர்க்கு அவரவர் ஜீவனத்திற்கு வேண்டிய பொருள் கொடுத்துத் தனிப் பண்ணையம் கட்டிக் கொண்டார்.

பாடுபட்டுத் தேடின திரவியத்தை அனுபவித்துக்கொண்டிருந்து காலத்தை வீணே போக்குவது ஜோன்ஜிப் புரூமுடைய பிரகிருதியல்ல. அவர் தேசம் மாட்டு திரண்டும் சேர்த்திருப்பதற்கு உழைப்பும் உத்தியோகமும் இல்லாமல் நிராது. இது அவர்க்குச் சாதகமே. அவர் ஜன்மதேசத்தின் ஸ்திதியையும் ஜனங்களையும் கண்டுபடு கண்டு தெளியும் பொருட்டு, அப்பொழுது இங்கிலாந்தின் கைத்தொழில் அபிவிருத்தி முதலாய வன்ன சகல ஸ்தானம் அவைத்தையும் அவர் போய்ப்பார்த்தார், பிறகு, அந்நியதேசங்களுக்குப் போய் அங்குள்ள அதிசயங்களைக் கண்டறிந்து இங்கி

வார்த்திற்குத் திரும்பி, 1812-ம் வருஷம் பார்லிமெந்தில் சேர்ந்தார். இடையிலே சிறிது காலம் நீங்கி அவர் அந்தச் சபையின் ஓர் அவயவமாயிருந்தது முப்பத்தைந்து வருஷம். அவர் ஆதியிற் பிரசங்கித்தது அச்சிட்டிருக்கும் பிரசங்கம் அரசர் குடிகளுக்குக் கல்வி கற்பிப்பதைப்பற்றி. வெகு காலம் அச்சபையில் கௌரவம் பெற்றிருந்த அவர் கல்வி யபிவிர்த்தி விஷயத்திலும், குடிகளைக் குற்றமிராத் திருத்தி உயர்த்துவதற்கு ஏற்ற மற்றெல்லா விஷயங்களிலும் சிரத்தையாய்ச் சிந்தனைசெய்து முயற்சிசெய்தார். அக்கிரம நிவிர்த்தி, தனரக்ஷணசாலை, அடிமைவர்த்தகம், சிக்கனவு, செலவுக்குறுக்கம், ஜனப்பிரதிநிதித்தொகைவிர்த்தி முதலிய விஷயம் அனைத்தையும் அவர் இடையறா விர்த்திசெய்து கொண்டு வந்தார். அவர் எடுத்த கருமம் எதையும் இயன்ற மாத்திரம் கடைத்தேற்றும்படி உழைத்தார். அவர் வாக்கு சாதுரியரல்ல; ஆனாலும் யதார்த்தமும் ஓர்ப்பும் குணையுமுள்ளவரென்று யாவரும் மனம் தேற அறிந்திருந்ததனால் அவர் வாய்ப்பிறப்பை நம்பினார்கள். வாய்மைக்கு நிந்தை பிரமாணமாகுமானால் ஜோசேப் ஹியூம் அந்தப் பிரமாணத்தை நன்றாகச் சாதித்தார். இவரைக்காட்டிலும் நிந்தைக்கு ஆளானவர்கள் இல்லை. ஆனாலும் என்ன, நிலையிற் பிரிந்தாரா—இல்லை, கொண்டது கைவிடாமல் நின்ற நிலையில் ஊன்றிநின்றார் என வேடிக்கையாய் எழுதுகிறார். பெரும்பாலும் அவர் பக்ஷம் சித்திபெறவில்லை. ஆனாலும் அவர் குறியுள்ளவரென்று யாவரும் அறிந்து வியந்தனர். அரசிறை வரவுசெலவு விசாரணையைப்பற்றி அவர் எடுத்த பிரதான சீர்திருத்த யத்தனங்கள் பல சபையாரால் அங்கீகரிக்கப்படாதிருந்தும், அவர் முயற்சியால் நன்றாகச் சாதிக்கப்பட்டன. அவர் உடம்புழைக்கச் செய்துழைத்த கஷ்டமான வேலைத் திரளைநினைக்க ஆச்சரியம் உண்டாகின்றது. அவர் காலையில் ஆறு மணிக்கு எழுந்து, எழுதவேண்டிய கடிதங்களை எழுதிமுடித்து, சபையேறச் சித்தமாக வைத்திரு

க்கும் பத்திரங்களைக் கிரமமாய் அடுக்கிவைத்து அப்புறம் சாப்பிடுவார். சாப்பிட்டதன்மேல், கருமமாகப் போயிருப்பவர்களைக் கண்டுபேசுவார். சில வேளை இருபது பெயர் வரையில் அவரைக் காணப்போயிருப்பதும் உண்டு. அப்பால் பார்லிமெண்டு சபையைத்திறந்து போவார். ஒருநாளாவது அவர் கூட்டத்திற்குப் பிந்தினதில்லை. ராத்திரி இரண்டு மூன்று மணிவரையில் வாக்குவாதம் நீடிப்பதும் உண்டு. அதுவரையில் அவர் அங்கில்லாமற்போகவிடுவது அரிது. விரித்துரைக்கில் பெருகும். சுருக்கிச் சொல்லுகிறேன். அவர் ஐம்பத்தைந்து வருஷம் ஒருவர்பின் ஒருவர் எத்தனையோ பெயர் மந்திரி உத்தியோகம் பிரவேசித்த காலத்தில் இராஜாங்க காரியங்களை இளைப்பறச் செய்து முடித்தவர். அவர் சொல் சாயாதுபோக, அவர் பக்ஷம் அபஜயப்பட, சபையார் அவரை நகைக்க, எல்லாரும் ஒருமைப்பாகச் சேர்ந்து அவர் ஒருவரைமாத்திரம் இக்கட்டில் நிற்க விட்டுவிட, கோபத்திற்கு இடங்கொடாமல், இளைக்காமல் முயற்சி குன்றிப் பின்வாங்காமல், எடுத்த கருமத்தில் கண்ணும் கருத்துமாயிருந்து, தாம் தொடுத்த இடங்களில் அநேகம் எக்களிப்போடு அங்கீகரிக்கப்பட்டதைத் தாம் இருக்கும்பொழுதே கண்டு களிகூர இடம்பெற்றவர். இவர் சரித்திரம் கருமத்தில் கைவிடாமல் கடைப்பிடியாயிருப்பதனால் விளையும் அதிசய சித்தியை எவ்வளவும் மயக்கமின்றி விளக்குகின்றது.

அத்தியாயம் - ௯.

சகாயமுங் கருமமும்—விவேகமும்

"வெறுங்கையானது, விவேகமானது தனித்தால் மெத்தவும் சாதிக்கமாட்டாது; கருமம் முடிப்பது கருவிகளாலும் கைத்துணையாலும். இவ்விரு சாதனம் கைக்கும் வேண்டும், விவேகத்திற்கும் வேண்டும்"—பேக்கன் (Bacon).

"சமயம் என்பது ஒரு விலங்கு. அவ்விலங்குக்கு முன்னந்தலையில் மயிர் சடையாய் வளர்ந்திருக்கும், பின்னந்தலை மொட்டை. சடைமயிரை கெட்டியாகப் பிடித்துக்கொண்டால் அதை நிறுத்தலாம். விட்டுவிட்டாலோ பின்பு அதைப் பிடிக்கத் தெய்வத்தாலும் முடியாது?"—லத்தீன் இலக்கியம். (From the Latin)

இவ்வுலகில் பெருங்காரியம் எதையும் செய்துமுடிக்கத் தற்செயலாய் அமையும் உதவி கிடையாது. சில வேளை சந்ததியின்றித் தனித்துச் சேர்ந்தவாகில் ஒன்றைச் செய்ய, அது குருட்டுவாய்ப்பாய் வாய்ப்பதும் உண்டு. ஆனாலும் பூலோக வியாபாரம் எனும் பிரயாணத்திற்கு அச்சமற்ற சுகபாதை தளராமுயற்சியும் சாதனையும் ஆகிய பலர் செல்லும் பெரும்பாதை ஒன்றே. கண்ணெதிரில் தோன்றும் தேசக்காட்சிப் படம் எழுதுபவன்ற வில்ஸன் (Wilson) எனும் நிபுணர் ஒப்புரவாய்த் திருத்தப் படம் எழுதி முடியும்பொழுது, செங்கருச்சிமுனையில் தூரிகையைக் கட்டிக்கொண்டு எழுந்து சற்றெட்டப் போய் நின்று, படத்தைக் கூர்ந்து பார்த்து, அப்புறம் சடுதியில் திரும்பித் தூரிகையால் அங்கங்கே சிறிது விளக்குவார். விளக்கவே அது நன்றாய் அமையும்; அன்றியும் அதற்கு ஒரு தனி களை உண்டாம். ஆனால் அவரைப்போலத் தூரிகையாற் சிறிது விளக்கிப் படத்திற்கு ஜீவகளை உண்டாக்க எல்லாராலும் முடியுமா, முடியாது. கண்டபடித் தூரிகையால் அங்கங்கே சிறிது குறிப்பித்து ஜீவகளை உண்டாக்கும் திறமை நாளும் வருஷமும் பத்து வருஷம் படம் தீட்டிக்கப்பயின்றல்ல, உள்ள நாள் உள்ளளவும் வருந்தி உழைத்தே அவருக்கு அமைந்தது. படம் தீட்டிக்கத் தொடங்கும் காலமுதலாக இச்சாதனை செய்யவாரத ஒருவன் இப்படி ஜீவகளை உண்டாக்கத் தூரிகையைப் பிரயோகிப்பானானால், அவன் படம் பழுதாகி ஒன்றுக்கும் உதவாமற்போம்.

உண்மையாய் உழைப்பவனுக்கு என்றும் உள்ள லக்ஷணம் தளரா அவதானமும் பாடுதாளும் முயற்சியுமே. பெரியோரெனப் பிரதிஷ்டை பெற்றவர்கள் ஆதியில் பயிலும் சாதனைகளை அற்பமென்று பராமுகம் செய்தவர்களல்ல, அவைகளையே காதலாய்க் கருத்துக்கூர்ந்து பயின்றவர்கள். ஒரு நாள் மைக்கேல் அஞ்ஜிலோ (Michael Angelo) எனும் சித்திர ஓடாவியுடைய கர்மசாலைக்குப் போன துரை ஒருவர் முன் தாம் அங்கே போனபொழுது கண்ட விக்கிரகத்தை அன்றிருந்தபடி இருக்கக் கண்டு, பின்னிட்டு இதில் ஒரு வேலைப்பிரமும் செய்யவில்லையாவென்று கேட்க, அஞ்ஜிலோ, "செய்யாமலென்ன, செய்தேன். இந்த உறுப்பைச் சற்றுச் செதுக்கினேன்—அந்த உறுப்பைச் சற்று விளக்கினேன்—இம்முகக்குறிப்பைச் சற்றுச் சாந்தப்படுத்தினேன்-அந்தத் தசைநாரைச் சற்று வெளிப்படையாகத் தோற்றுவித்தேன்—இவ்வுதட்டுக்குச் சிறிது களை உண்டாக்கினேன்-அந்த அவயவத்திற்கு அதிக உற்சாகம் கொடுத்தேன்" என்றான். அது கேட்டுத் துரை "இதெல்லாம் வேலைக் கணக்கிற் சேருமா - அற்பந்தானே" என மொழிந்தார். அதற்கு ஓடாவி, "அற்பமாயிருந்தாலும் இருக்கும். ஆனாலும் என்ன, அற்பமாகிய அணுக்கள் பல சேர்ந்தல்லவா எந்த உருவும் அமைகிறது" ஆயிரமாகாணி அறுபத்திரண்டரை-இது தெரியாதா" என்றானும். மேலும், நிக்கலஸ் பௌஸின் (Nicholas Poussin) எனும் சித்திரகன் "செய்வன திருந்தச் செய்" இதுதான் நான் கைக்கொள்ளும் பிரமாணம் என மொழிந்தான். அவனுக்குப் பருவம் முதிர்ந்த பின், அவன் இடையரிய மாண்கீர்த்தியுடைப்பிரபு, "இத்தாலிய சித்திரகர் எவரிலும் உனக்கு இத்தனை விசேஷப் பிரக்கியாதி உண்டான காரணம் ஏது" எனக் கேட்க, அவன், "அலக்ஷியமின்றி எதையும் செய்துகொண்டு வந்தனாலே தான் எனக்கு இத்தனை பிரக்கியாதி உண்டாயிற்று" என்று உத்தரம் சொன்னான்.

இருந்தாற்போல் தற்செயலாய்க் கண்டறிந்த சூக்ஷமங்கள் உண்டெனவும் சொல்வார்கள். உள்ளூற நன்றாய்ந்து பார்த்தால் ஒன்றாவது தற்செயலாய்க் கண்டதில்லையெனத் தோன்றும். தற்செயலென்ற சொல்லை பெரும்பாலும் சமயோசிதம் கண்டு புத்திபூர்வமாகச் சாதிப்பதையே. நியூட்டன் கண்டு வெளியிட்ட சில சூக்ஷுமங்கள் தற்செயலாய் அவருக்குத் தெரியவந்தனவென்று சொல்வார்கள் அவர் பாதத்தண்டையில் அத்திப்பழம் விழுந்ததைப் பிரமாணமாய் எடுத்துக்கூறுவார்கள். ஆனாலும், நியூட்டன் பூமியாக்கவர்ச்சி எனும் விஷயத்தை நினையாதிருந்தவரல்ல. எத்தனையோ வருஷகாலம் உள்ளம் அமர்ந்து பொறுத்து அதுபற்றுத் தீரவிசாரித்துக்கொண்டுவந்தவர். அவர் சிந்தை வேறு துறையிற் செல்லாது இது ஒன்றிலேயே பிரவர்த்தித்திருந்தது. அத்திப்பழம் விழுந்தது காகதாளியாய சம்பந்தமாய் முடிந்தது. அவர் விவேகம் முதிரக் கனிந்து விஷயசூக்ஷுமத்தைப் பற்றும் பருவம் அமைந்திருக்கையில் சந்நிதியில் பாதத்தண்டை அத்திப்பழம் விழுந்ததைக் கண் காணவும் மேகம் மின்னியதுபோல் பளிச்சென்று அவர் புத்தியில் விஷயம் உதயமாயிற்று. பெரிய மனுஷருடைய சிந்தை பாரகாரியங்களிற் பிரவர்த்திக்குமென்று எண்ணுவது உலக இயற்கை. ஆனாலும், நியூட்டன் - பய முதலியவர்கள் சாதாரணமாய் எப்பொழுதும் நடந்துவருகிற அற்ப விஷயங்களின் காரண காரிய சம்பந்தங்களை உபாயமாய்க் கண்டறியச் சித்தமாயிருந்தார்கள்; அவைகளின் மர்மத்தைப் புத்திபூர்வமாய் விளக்கியதுதான் நிபுணர்க்குப் பெருமை.

சிலர் தாம் காண்பதைக் கேட்பதைப் புத்திபூர்வமாய்க் காண்பார்கள் - கேட்பார்கள். சிலருக்கு இந்த இயற்கை இல்லை. பெரும்பாலும் மனுஷருக்கு மனுஷர் வித்தியாசம் உண்டாயிருப்பது இதிலேதான். காண்பது கேட்பதைக் கவனிக்காதவர்களைப்பற்றி ரஸ்கின் வழங்கும் படி

மொழி ஒன்று இது:—"வனத்திற்குப் போவான்-அங்குள்ள மரம் ஒன்றும் அவன் கண்ணுக்குத் தெரியாது." ஸாலொமன் "அறிவாளிக்குக் கண் சிரசில், மதிகேடனோ இருளில் நடப்பான்" என்று எழுதினான். ஒரு சமயத்தில் ஜானஸன் பண்டிதர் இத்தாலி தேசத்திற்குப் போய் வந்திறங்கிய நாகரிகாலங்காரப் பிரியர் ஒருவரைப் பார்த்து, "ஐயா! ஐரோப்பா தேசத்திற்குப் போகும் பிரயாணிகள் அங்குள்ள அதிசயங்களைக் கண்டறியும் அறிவினும் இங்குள்ள சிலர் நாடகசாலைகளில் அறிவது அதிகம்" என மொழிந்தார். ஒன்றைக் காண்பது கண்மாத்திரமல்ல, கண்ணும் மனமும். சித்தனையற்று ஒன்றைக் காண்பவர்கள் அதைக் கண்டும் காணாதவர்கள். மனக்கண்ணொளியுள்ள விவேகிகளோ தாம் காண்பதைக் கருத்துக்கூர்ந்து நுழைந்தறிவார்கள், பேதாபேதங்களைக் கண்டு குறித்துக்கொள்வார்கள், ஒப்பு உயர்வு தாழ்வு பார்ப்பார்கள், உள்ளுறை பொருளைக் கிரகித்துக் கொள்வார்கள். ஒரு குண்டைக் கயிறு கட்டித் தூக்கினால் அது ஊஞ்சல் ஆட்டம் ஆடுவது இயற்கை. இந்த இயற்கையைக் கலிலியோவிற்குமுன் எத்தனையோ பெயர் பார்த்திருப்பார்கள். பார்த்திருந்தும், அதன் சூக்ஷமத்தை முதலிற் கண்டவன் அவனே. பைஸா எனும் அந்நகர் ஆலயத்தில் குற்றேவல் செய்யும் ஒருவன் அங்குள்ள தூக்குவிளக்கொன்றில் நிறைய எண்ணெய் விட்டுப்போனான். தூக்குவிளக்கு ஊஞ்சலாட்டம் ஆடியது. கலிலியோ அப்பொழுது அங்கே போனான். அவனுக்குப் பருவம் அதிகம் அல்ல, பதினெட்டுத்தான். அவன் அத்தூக்குவிளக்கு ஆடுவதை உன்னிப்பாகப் பார்க்கப் பார்க்க, அதைக்கொண்டு காலம் அளந்தறியும் உபாயம் அவன் மனதில் தோன்றிற்று. இந்தக் கருத்தை ஆதரவாக அமைத்துக் கடிகார ஊசல் எனும் உறுப்பை அவ்வளம்பெறச் செய்ததுமுதற் கொண்டு வருஷம் இடையறாமல் வருந்திக்கற்றான். இதற்கு அவன் உழைத்த உழைப்பு மிகுதி. கால அளவையிலும் ககோள கணிதங்களிலும் வை

யந்திர உறுப்பின் அருமை பெருமையை எவ்வளவு பாராட்டினும் ஏற்கும். இவ்வாறே, ஒலாந்துதேசத்தில் மூக்குக் கண்ணாடி செய்து விற்கும் லிப்பர்ஷே என்பவன் தூரத்தில் உள்ள பொருள்களைக் கிட்டத் தோற்றுவிக்கும் யந்திரம் ஒன்று நாஸ்ஸா கௌண்ட் மாரிஸ் பிரபுவிற்குக் காணிக்கை கொடுத்ததாகப் போகிற போக்காய்க் கேள்விப்பட்டு, கலிலியோ அந்த உற்பன்னத்தின் காரணத்தை நிர்ணயிக்க முயன்றான். இம்முயற்சித் துணையால் அவன் தூரதிருஷ்டியந்திரம் புதிதுண்டாக்கும்படி ஆயிற்று. அன்றியும், இப்பொழுது வழங்கும் ககோள வித்யாவிற்பத்திக்கு அதுவே மூலமாயிற்று. காண்பதைப் பராமுகமாய்க் காண்பவர்களுக்கும், கேட்பதை ஒரு காதாற் கேட்டு மறு காதால் விட்டுவிடும் பிரகிருதியுள்ளவர்களுக்கும் இவ்வகைக் குசுமங்களை எளிதிற் கண்டறியும் அருந்திறம் ஒருபொழுதும் வாராது.

பின்னிட்டு ஸேர் பட்டம் பெற்ற கப்டன் ப்ரௌன் (Captain Brown) துவீத் நதிக்குச் சமீபத்தில் வாசமாயிருந்தவர். அந்நதியின் மிதச்செலவில் வாராவதி ஒன்று கட்டுவிக்க நினைத்து, வாராவதிகள் கட்டுமுறையைக் கருத்துடன் கூர்ந்து ஆராய்ந்து பார்த்துக்கொண்டுவந்தார். இம்முயற்சியில் இருக்கையில் வேனிற்காலத்தில் ஒரு நாட்காலையில் பனியில் தோட்டத்தில் உலாவிக்கொண்டிருந்தார். வழியில் சிறிய பொட்டுப்பூச்சி வலை பின்னியிருந்தது. அதை உற்றுப்பார்க்க, அவ்வலைப் பின்னலின் மாதிரியாக இரும்புச் சங்கிலிப் பாலம் ஒன்று கட்டலாகுமென்று அவர் மனதில் யுக்தி பிறந்தது. அந்த யுக்தியைச் சார்ந்து அவர் தொங்குபாலம் ஒன்று கட்டி முடித்தார். மேலும், க்லைட் நதியின் மேடுபள்ளமுள்ள அடித்தரையில் குழாய் பதித்துத் தெண்ணீர் கொண்டுபோக உபாயம் சொல்லவேண்டுமென்று சிலர் ஜேம்ஸ் வாட்டைக் (James Watt) கேட்டார்கள். அவன் ஒரு நாள் போஜன பீடத்தில் உருவொ

டே சமைத்துக் கொண்டுபோய் வைத்திருந்த நண்டினை ஓட்டைக் கூர்மையாகப் பார்த்தான். பார்க்கவே குழாய் பதிக்க அவன் மனதில் புத்தி பிறந்தது. நண்டோட்டை அச்சாகக் கொண்டு அவன் இரும்புக்குழாய் செய்து பதித்தான். நினைத்த கருமத்திற்கு அது வளம்பெற வாய்த்தது. ஸ்ரீ ஐஸம்பார்த் ப்ரூனெல் (Sir Isambert Brunel) தெம்ஸ் நதிக் கீழ் வழி உண்டாக்கும் உபாயம் அறிந்தது சிறிய கப்பற் புழுவின் இயற்கையைக் கண்டு. அந்தப் புழு உளிவாய் போலக் கூர்மையான தன் தலையால் மரத்தை முதலில் ஒரு பக்கமும் அப்பால் மறு பக்கமும் மாறி மாறிக் குடைந்து கொண்டுபோக வில்வளைவான வழி அமையும். அப்புறம் வில்வளைவான அந்த வழியின் முகட்டுக்கும் இரு பக்கத்துக்கும் ஒரு வித பிணுக்கிடும். புழு அரித்துண்டாகும் சிறு வழியைக் கண்டு ப்ரூனெல் கரு உண்டாக்கி, நதிக் கீழ் வழியை நயம்பெற முடித்தார். அது சிற்ப வேலைகளுக்குள் அசாத்தியமானது.

இவ்வகை இயற்கை விவகாரங்களின் அருமை பெருமை கருத்துக் கூர்ந்து அகமும் புறமும் அழுந்தப் பார்ப்பவர்களுக்கே தோன்றும். அமெரிக்கா தேசத்தைக் கண்டுபிடிக்கும் முகாந்தரமாகக் கலம்பஸ் என்பவன் கப்பல் ஏறிப் போனான். போகப் போகச் சமுத்திரம் நெடுகியது. தேசம் கண்ணுக்கு எட்டவே இல்லை. நாள் ஏற ஏறக் கடலோடிகள் மனம் சலித்தது. கரை காணாத பெருவழியில் தங்களைக் கொண்டுபோய்க் கலக்கி வருத்தி வதைக்கப் பதைக்கிறானென்று கடலோடிகள் கலம்பஸை நொந்து பேசிக் கலகஞ்செய்ய எத்தனித்தார்கள். அந்தத் தறியில் தேவேத்துணமாகச் சிறிய கடற்பூண்டு ஒன்று கண்ணுக்கு எதிர்ப்பட்டது. அதைக் கண்டவுடனே கரை கிட்டுமென்று கலம்பஸ் மனம் தேறிக் கடலோடிகளைத் தேற்றிக் கலகத்தைத் தவிர்த்தான். ஒரு கடற்பூண்டு அற்ப வஸ்து—அதைக் கலம்பஸைப்போல் கடலோடிகளும் கண்டார்கள். கண்டும்

அவர்கள் கவனிக்கவில்லை - கலம்பலோ கருத்து ஊன்றிப் பார்த்தான். பார்த்தவுடன் காழ்ப்போன ஆதனை தேசம் விட்ட இனி காட் செலவாதென்று ஐயமற அறிந்தான். அற்பக்கடற்பூண்டால் அருங்கலம் இயிர்த்தியாயிற்று. அற்பமென்று பாராமுகம் செய்து மறந்துவிடத்தக்கது ஒன்றும் இல்லை. உன்னுறை பொருளைச் சேர்த்து ஆராய்ந்து பார்க்கில், அற்ப விவகாரமும் எதாயினும் ஒரு விதத்தில் உதவும். ஆழ்கிணற்கடலில் அநேகமிக சிறிய பூச்சிகளால் பவளத் தீவுகள் அமைந்திருக்கின்றன. ஆகாயத்தில் உள்ள அதிசயமான தாதுடலமை அச்சிறு பூச்சிகளால் உற்பத்தியான சித்திரத்தைப் பூதக்கண்ணாடியின் உதவியால் நிச்சயிக்கு முன் அறிந்தவர் ஆர்! இவ்வகை அதிசய சித்தி கண்ணுக்கு எவ்வளவும் தோன்றவண்ணம் அதிசூக்ஷ்மமாய் உண்டாகும் வித்தையைச் சித்திசெய்தவர் எவர். அற்பகாரியங்களின் அருந்திறத்தைக் இல்லையென்று சொல்லத் துணிவார்.

அற்பகாரியங்களைப் பூராயமாய்க் கவனிக் கருதி அறியுமே கல்வி, கைத்தொழில் முதலிய எவ்வகை வெளிகைவிர்த்தியிலும் சித்தி பெறுவதற்கு இன்றியமையாத அங்கமாய். மனுஷர் அறிந்திருக்கும் அறிவு எப்படி வந்தது-அக்கதந் தலைமுறையார் அவரவர்க்கு சேர்த்தபடி அணுவணுவாய் ஆய்ந்தும் அனுபவித்தும் அறிந்தவைகள் எல்லாம் ஒருங்கு திரண்டு ஆகாயத்தை அளாவும் கற்பகம்போல ஓங்கி வளர்ந்தது மனுஷர் அறிவு. மேற்சொல்லிய விவகாரங்கள்-கண்டுகேட்டறிந்த காரியங்களில் அநேகம் முதல் முதல முக்கியமானவைகளைத் தோன்றுத் தோன்றுதிருக்குமட், அவை அசைத்தும் அறுதியில் அந்தந்த உரியவாறு வருகும் இடங்களில் பிரயோகப்படுத்தப்பட்டன. அசம்பந்தமாகத் தோன்றும் அத்திகைகளை—அகைப்பகள் முதலாய் ஒவ்வொரு சுருமதிலிருந்து ஒருவும் சித்திக்கவிளைவிக்கும் மூலாதாரங்களாகப் பிரமாத்திருக்கின்றன. சமுத்திரமும் வீறும் கனிதரும் அமைதை முதலில் கண்டவன் அப்போதோ

னியஸ் பெர்ஜியஸ் (Apollonins Pergneus). அது கோண சாஸ்திரத்திற்கு ஆதாரமாக இரண்டாயிரம் வருஷகாலஞ் சென்றது. இப்பொழுது அக்கோணசாஸ்திரம் துறை தெரியாப் பெருங் கிரைக் கடலில் மரக்கலஞ் செலுத்திப்போகும் மாலுமிக்குக் குறித்த துறைசேரும் மார்க்கத்தை வானத்தில் காட்டுகின்றது. மேற்குறித்தபடி கணித பண்டிதர்கள் இத்தனை காலமும் வெகு வருத்தப்பட்டு உழைத்தார்கள். அதைப் பார்த்திருந்த மூடஜனங்களுக்கு அவர்கள் உழைத்ததெல்லாம் விழலுக்கு இறைத்ததுபோலத் தோன்றியது. கோணங்களையும் உயர்தலத்தையும் பற்றிய சம்பந்தாசம்பந்த குணங்களை அவர்கள் இவ்வாறு சலிப்பற்றுப் பொறுத்து வருந்திக் கண்டறியாதிருக்கச் சம்பவித்தால், இப்பொழுது வழங்கும் யந்திரம் ஒன்றும் ஏற்பட்டிராது.

மின்னலும் மின்சாரமும் ஒன்று என்னும் மர்மத்தை பிராங்க்லின் கண்டறிந்தபொழுது அதைக் கேட்டவர்கள் பரிகாசம்பண்ணினார்கள். இது என்னத்திற்கு உதவும் என்று வினவினார்கள். அதற்கு அவர் சொன்ன மறுமொழி இது:—"ஒரு குழந்தை என்னத்திற்கு உதவும்? இன்று குழந்தையென்று சொல்லப்படுவது நாளை மனுஷனாகிறது!" ஒரு தவளையைப் பிடித்து சில லோகங்களில் பட வைத்தால் அதன் காலில் சுண்டியிழுக்கும். இந்த இயற்கையை முதலிற் கண்டவர் கால்வனி (Galvani). அவர் இதைக் கண்டபொழுது, அற்பமெனத் தோன்றும் இந்த விவகாரத்தால் நினைத்தற்கரிய சித்திகள் உண்டாமென்று எவரும் எண்ணவில்லை. என்றிருந்தும், மின்சார பிரயோகத்திற்கு அதுவே கருவாயிற்று. மின்சார பிரயோகம் என்றால் சாமானியமா—அது சகல ஜன சமாசாரங்களையும் ஒருங்கு பாதிக்கின்றது. இன்னும் சில வருஷத்திற்குள் "பூகோள மத்தியைச் சுற்றிக் கச்சிறுக்கக் கட்டுவோம்". மேலும் இவ்வாறே, தரைக்குள் அழுக்கெடுத்த சிறுசிறு தாதுக்களையும், ஜீவ

றுலை சேதங்களையும் கண்டு அறிவுடையோர் உட்பொருள் அறிந்து அறுதியிட்டதே பிசிதியின் வித்தியா மூலமாயிற்று. அன்றியும் அந்நூலையே தனிகர்கள் பெருமுதல் வைத்துத் திரளான ஜனங்களைக்கொண்டு பூமியை ஆழமாய் அகழ்வித்து நிலக்கரிமுதலிய தாதுக்களை எடுத்து விற்று லாபம் பெற்றுக்கொண்டுவருகிறார்கள். இம்முயற்சியால் பொருளுடையோர்க்குப் பொருள் பெருகுகின்றது, பொருள் இல்லார்க்குப் பிழைப்பு உண்டாகின்றது.

கனிகளினின்று தாதெடுக்கும் மஹாயந்திரம், ஜலயந்திரம், நெசவுமுதலிய கைத்தொழில்யந்திரம், மரக்கலம் ஓட்டும் யந்திரம், இருப்புப்பாதைவண்டி யந்திரம் இவை அனைத்தையும் இயக்கிக்கொண்டு வருவது சிறிய நீர்த்துளி வெப்பத்தால் நெகிழ்ந்து அகன்று தன் உருமாறி வரும் அற்பசாதனமாகிய ஆவி — நீராவி என்பது நம் எல்லாருக்கும் தெரியும், வெந்நீர்ப்பாண்டத்தின் வாயால் பறிவது நீராவி. இவ்வாறு உற்பத்தியாகும் நீராவியை விசைதயாக நிர்மாணித்த யந்திரத்திலுள் விட்டடைக்க, பத்து லக்ஷம் குதிரைக்கு உள்ள பலம் அதற்கு உண்டாகும்; எதிரிகைக்கடல் அதற்கு லக்ஷியமல்லை; பிரசண்டமாருதத்திற்கு அது எவ்வளவும் அஞ்சாது. பூகம்பம் உண்டாவதும், மலைகளினின்று அக்கினி கக்குவதும் பூமிக்கர்ப்பத்தில் அந்த அசாத்தியபலமுள்ள நீராவியின் செய்கையேதான். அக்கினிமலைகளாலும் பூகம்பத்தாலும் அக்காலத்தில் அப்போதப்போது உண்டான ஆபத்து விபத்துக்களைக் கேட்டிருக்கிறோமே.

ஆர்ஸ்தர் மார்க்கிஸ் (Marquis of Worcester) என்பவர் தன் ராஜகைதிகள் சிறைச்சாலையில் இருக்கும்பொழுது, ஒரு நாள் கெட்டியாய் மூடியிருந்த வெந்நீர்ப்பாண்டத்தின் மூடி சடிதியில் நெகிழ்ந்து பறக்கவே, அதைக் கண்டு தான் முதல் முதல் நீராவிசக்தியின் அவர் சிந்தனை சென்றதாம். இவ்விஷயத்தைத்தொட்டு ஆயத்தமித்து சித்தாந்

நங்கள் அவர் இயற்றிய "நூதன யந்திர சதாப்தம்" எனும் கிரந்தத்தில் பிரசித்தம் செய்யப்பட்டன. நீராவிசக்தி விமரிசை செய்துவந்த நிபுணர்களுக்குச் சிறிது காலம் அந்தக் கிரந்தமே முதனூலாக வழங்கியது. அப்பால் ஸாவரி (Savary), நியூகொமென் (Newcomen) முதலியவர்கள் நீராவியை விவகாரத்தில் பிரவர்த்திக்கத் தொடங்கி நீராவியந்திரம் செய்யத் தலைப்பட்டார்கள். நியூகொமென் ஒரு யந்திரம் செய்துவைத்தார். அது கிளாஸ்கோ சர்வகலாசாலையின் சொத்து. அதை வாத் என்பவரால் பழுதுபார்ப்பித்தார்கள். அரிசிப்பொதியுடன் திருவாரூர் என்பதுபோல அவர் அவ்வேலையும் முடித்தார்; அதைச் சார்ந்து, சமயத்தை முந்திப்போகவிடாமல் தாமும் நீராவியந்திரம் செய்ய ஆரம்பித்தார். அது செய்துமுடிக்க அவர் காலம் எல்லாம் சென்றது.

கிடைக்கும் சமயத்தை விட்டுவிடாமல் காகதாளியமாக நேரிடும் அற்ப காரியத்தையும் கருமத்திற்கு உதவும்படி வசைந்துக்கொள்ளும் திறமை சித்தி பெறுதற்கு முக்கியமான சூக்ஷமம். புத்தி சக்தி என்பது "யாதாயினும் ஒரு துறையில் காகதாளியமாகப் பிரவர்த்தித்து நிற்கும் கருவிகாரணங்களின் பெருக்கப் பலத்திருக்கு மனமாம்". இது ஜான்ஸன் பண்டிதர் சொல்லிய புத்தி சக்தி இலக்கணம். தமக்கு ஒரு துறை காணச் சங்கற்பித்திருக்கும் மனுஷருக்குப் பெரும்பாலும் சமயம் கிடைக்கும். கிட்டாவிடில், அவர்களே சமயம் உண்டாக்கிக்கொள்வார்கள். கல்விப் பெருக்கத்திற்கும் கைத்தொழில் வகை கலைத்திறத்திற்கும் காரணமான எத்தனை பெத்தனையோ செய்திருக்கிறவர்கள் உயர்ந்த வித்தியாசாலைகளிலும், விசேஷசாலைகளிலும், சித்திரகூடங்களிலும் பயின்றவர்களே அல்ல; பெயர்பெற்ற சிற்பகாரர், யந்திர நிர்மாணிகர்கள் யாந்திரிக சாலைகளில் கற்றுத் தெளிந்தவர்களுமல்ல. பெரும்பாலும் சுயம் கண்டவை. உற்றசமயத்தில் பக்தி உதயமாகும்; மிகவிற்பத்தி உண

டாக்கும் வித்தியாசாலை தரித்திர வித்தியாசாலை. சில சிறந்த சிற்பிகள் வைத்து வழங்கின தொழிற்கருவிகள் ஒன்றுக்கும் உதவாதவைகள். வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம் ஆகும். வேலைத்திறமை உண்டாவது கருவியாலல்ல, கை திருந்திக் கலை தெளிந்து கடைப்பிடியாயிருப்பதனாலேயே. கைத்திறம் இல்லாத வேலைக்காரன் கருவி வாய்க்கவில்லையென்று புகல் சொல்வது எப்போதும் வழக்கந்தான். சித்திரவேலையில் வல்லவனாகிய ஓபை (Opie) என்பவனை எவரோ ஒருவர் நீ வர்ணம் சேர்க்கும் அதிசயம் எங்கே கற்றாய் என்று கேட்க, அவன், "எங்கும் கற்கவில்லை, என் புத்தியால் சேர்த்துக்கொண்டுவருகிறேன் ஐயா" என்று உத்தரம் சொன்னானாம். ஓவியத்தில் மாத்திரமல்ல, எவ்வகைத் தொழிலிலும் கைதிருந்திப் பிரதிஷ்டை பெற நாடுவோர்க்குப் புத்திதான் முக்கியம். பெர்கஸன் (Ferguson) காலவரம்பு தவறாமற் காட்டிய மரக்கடிகார முதலிய விந்தை விந்தையான வேலைப்பாடுகள் எல்லாம் செய்துமுடித்த கருவி எப்படி இருக்குமோவென்று மலைக்கப் போகிறீர்கள். அது மற்றொன்றல்ல, ஒரு இறகுவெட்டி. இறகுவெட்டி எல்லாரும் வைத்துக் கையாள்வது; ஆயினும், எல்லாரும் பெர்கஸன் ஆவாரா? ப்ளாக் பண்டிதர் (Dr. Black) ஆக்ஷம உஷ்ணத்தைக் கண்டறிந்த கருவி ஒரு கிண்ணம் நீரும் உஷ்ண அளவு யந்திரம் இரண்டும்; நியூடன் ஒளி உருப்பமைதியையும் வர்ண உற்பத்தியையும் வெளியிட்டதற்குக் கொண்ட கருவிகள் திரிபுஜ கண்ணாடி ஒன்றும், ஒளிவட்டம் ஒன்றும், கடுதாசிப்பலகை ஒன்றுமே. வொல்லஸ்தன் பண்டிதர் (Dr. Wollaston) பலபல கல்விகளில் தேறித் தெளிந்தவர்; எத்தனை எத்தனையோ விந்தையான யந்திரங்கள் செய்தவர். சிறந்த வித்வானாகிய பிரான்சிய துரை ஒருவர் ஒரு நாள் அந்த நிபுணரைக் காணப் போனபொழுது, தங்கள் பரீக்ஷாசாலையைப் பார்க்க விரும்புகிறேன் என்று கே

டடார். பண்டிதர் அவரை ஒரு சிற்றறைக்கு இட்டுக்கொண்டுபோய், அங்கொரு பீடத்தில் தேயிலைத்தட்டு ஒன்றையும், அதில் சில கைக்கடிகாரக் கண்ணுடிகளையும், சோதனைக் கடிதங்களையும், சிறு தராசு ஒன்றையும், உலைக்குழல் ஒன்றையும் காட்டி, "இம்மட்டுந்தான் என் தொழிற்கருவிகள்" என்றார்.

ஸ்தோதார்த் (Stothard) என்பவர் வண்ணத்திப் பூச்சி பிடித்து அதன் செட்டையைப் பார்த்துப் பார்த்து, வர்ணம் கூட்டும் சூக்ஷமம் அறிந்தார். இச்சிறு பூச்சிகள் எனக்குச் செய்த உபகாரத்தை எவரும் அறியார் என்று அவர் பெரும்பாலும் சொல்வார். வில்கி (Wilkie) சித்திரம் எழுதிப் பயின்ற துணி பண்டசாலைக் கதவு, துகிலிகை எரிந்து குறுங் கொள்ளியாய்ப் போன கொம்பு. வீவிக் (Bewick) ஆதியில் படம் எழுதிப் பழகியது அவர் பிறந்த ஊர்க் குடிசைகளின் சுவரில்; படம் எழுதிய துகிலிகை தாதுபலம், சுவர் எல்லாம் சித்திரமயமாயிருந்தன. பெஞ்ஜமின் வெஸ்த் (Benjamin West) முதலில் வர்ணம் பூசிப் பயின்ற மயிர்க்கருவி பூனைவால். பெர்கஸன் ராத்திரி காலத்தில் வயல் வெளியில் கம்பளம் விரித்து மல்லாந்து படுத்திருந்து சிறு மணிச் சரம் ஒன்றைக் கண்ணுக்கும் நக்ஷத்திரங்களுக்கும் இடையில் சுண்டப் பிடித்துக்கொண்டு நக்ஷத்திராதி வான சோதிகளின் படம் எழுதி முடித்தார். ப்ராங்க்லின் முதன் முதல் இரண்டு கொம்பைக் குறுக்காக வைத்துக் கட்டிப் பட்டுக் கைக்குட்டையால் மூடிக் காற்றாடிபோலப் பறக்கவிட்டு மேகத்தினின்று மின்னலைத் திருடினார். வாத் முதல் முதல் கனிகர நீராவி யந்திரத்தின் மாதிரி செய்தது ரணவைத்தியர் ஒருவர் பிரேத சோதனைத்திற்குமுன் இரத்த நாளங்களில் நீர் புகட்டிய பழைய பீர்ச்சாங்குழல் ஒன்றினாலே. ஒரு சக்கிலியை அடுத்துப் பாதரக்ஷை தைக்கப் பழகிவரும் காலத்தில் கிப்போர்ட் (Gifford) தோல் அறுத்துக் கழிகட

யாய்த் தள்ளிவிட்ட துண்டுகளை எடுத்துத் தட்டி ஒப்பம் செய்து கணக்குப்போட்டுப் பழகினான். ககோளவித்வானாகிய ரித்தென்ஹௌஸ் (Rittenhouse) ஆதியில் கிரகமானம் கணித்தது கலப்பை மேழியில்.

ஜாக்கிரதையாயிருந்து கிட்டும் உபாயங்களை விட்டுவிடாது அநுசரித்துத் தேறும் ஆசையுள்ளவனுக்கு எச்சமயமும் ஏற்கும் நற்சமயமாகும். ஹீப்ரு பாஷையில் பண்டித சிரோமணியாகிய லீ (Professor Lee) என்பவர் ஆதியில் தச்சுவேலை செய்து பிழைத்தவர். ஒரு தேவாலயத்தில் தவிசுப் பலகைகளை மராமத்து செய்துகொண்டிருக்கும்பொழுது ஒரு நாள் ஹீப்ரு பாஷையில் வேதாகமம் ஒன்றைக் கண்டு வேத புஸ்தகத்தை அம் மூலபாஷையில் வாசிக்கும் ஆசை அவருக்கு உண்டாயிற்று. முதலில் எவரோ படித்துத் துவண்டுபோன இலக்கண புஸ்தகம் ஒன்று மிதவிலைக்கு வாங்கி உபாத்தியாயர் துணையின்றித் தாமாகக் கற்றுத் தேறினார். எட்மண்ட் ஸ்தோன் (Edmund Stone) ஏழைத் தோட்டக்காரன் ஒருவனுடைய மகன்; ந்யூட்டன் வித்வான் லத்தீன் பாஷையில் இயற்றிய பதார்த்த விஞ்ஞான கணிதத்துவம் எனும் கிரந்தத்தை [illegible]ய் வாசித்துத் தேறியிருக்கும் செய்தி கேட்டு ஆச்சரியப்பட்டு ஆர்கைல் டியூக் பட்டவர்த்தனர் நீ இவ்வரிய நூல் வாசித்துத் தேறிய வகை என்னவென்று கேட்க, [illegible] ஸ்தோன் "நெடுங்கணக்கில் உள்ள இருபத்தாறு எழுத்தையும் அறிந்தால் எந்த நூலையும் கற்கலாகும்" என்று உத்தரம் சொன்னான். எழுத்து அறிந்தபின் கல்வி முயற்சிக்குத் துணைக்கருவிகள் கருத்தும், கடைப்பிடியும், கிட்டும் சமயத்தை எட்டவிடாமல் ஜாக்கிரதையாய்க் கருமத்திற்கு உதவும்படி திருப்பிக்கொள்வதுமே.

எவ்வகைத் தொழிலிலும் தம் முயற்சியால் விர்த்தியடையும் சமயம் ஸ்ரீ வால்த்தர் ஸ்காத் என்பவருக்குக் கிட்டியது. காகிதாளியமாய் வந்தடுக்கவைகளையும் அவர் கருமத்

இற்கு அனுகூலமாம்படி செய்துகொண்டார். அவர் ஒரு வித்தரிடத்தில் வேலை பழகும்பொழுது ஸ்கொத்திலாந்தின் மலை நாட்டுக்குக் கருமத்தின்பெயரில் போக நேர்ந்தது. போனபொழுது, 1745-ம் வருஷத்துச் சண்டையில் வெற்றி சிறந்த வீரரில் இறவாதிருந்த சிலரைக் கண்டு கொண்டாடினார். அந்தக் கொண்டாட்டமே அவர் எழுதிய கிரந்தம் அனேகத்திற்கு அஸ்திவாரமாயிற்று. பருவம் பின்னிட்டு எடின்பர்க் லயித குதிரைப் பட்டாளத்திற்குத் தலைமை அதிகாரியாயிருந்தபொழுது, ஒரு சமயத்தில் குதிரை உதைத்துக் காயம்பட்டு அவர் சிறிது காலம் வீட்டோடே இருந்தார். ஆனாலும், சோம்புத்தனத்திற்கும் அவருக்கும் ஜன்மப் பகை. நொடிப்பொழுதும் சும்மா இராமல் "அந்திய காந்தருவன் கானம்" எனும் காவியத்தின் முதற் காண்டத்தை மூன்று தினத்தில் பாடினார். பின்பு விரைவில் அந்தக் காவியமுழுதும் இயற்றி முடித்தார். அவர் நூதனமாய் இயற்றிய மஹா கிரந்தங்களில் அதே சிரேஷ்டம்.

எத்தனையோ வாயு பேதங்களை நூதனமாய்க் கண்ட ப்ரீஸ்த்லி பண்டிதருடைய (Dr. Priestly) சிந்தை ஆதியில் ரசாயன சாஸ்திரத்தில் செல்லும்படி சம்பவித்தது அவர் சாராயம் வடிக்கும் ஒரு வீட்டுக்குக் கிட்ட இருந்ததனாலே. ஒரு நாள் சாராயம் காய்ச்சும் அதிசயம் பார்க்கப் போயிருந்தபொழுது நுரைத்துக் கொதிக்கும் சாராயத்தின்மீது சக்கை - செத்தை அறுதியாய் எரிந்து வாயு ரூபம் ஆனவுடன் உண்டாகும் விசேஷத்தோற்றத்தைக் கண்டு அவர் மனம் அவ்விஷயத்திற் பிரவர்த்தித்தது. அப்பொழுது அவருக்குப் பருவம் நாற்பது. ரசாயன சாஸ்திரம் கிஞ்சித்தும் தெரியாது. மேற்சொல்லிய தோற்றத்தின் காரணம் ஏதென்று அறியப் புஸ்தகங்களைப் புரட்டிப்புரட்டிப் பார்த்தார். ஆங்கொன்றும் காணவில்லை. அக்காலத்தில் வாயுவைப்பற்றி எவருக்கும் தெரியாது. பின்பு அவர் தாமாகப் பரும்படியான யந்திரம் ஒன்று உண்டாக்கிப் பரிசோதித்தறியத் தொ

டங்கினார். முதலிற் செய்த பரீக்ஷையில் சில நூதன சித்தாந்தங்களை நிர்ணயித்தார். அவைகள் வேறு வேறு சித்தாந்த நிர்ணயத்திற்கு வழிகாட்டின. அந்த நிபுணர் அறிந்த சித்தாந்தம் அனைத்தையும் திரட்டிப் பிரசித்தப்படுத்தினார். வாயு ரசாயன சாஸ்திர உற்பத்தி சாதனம் இதே. அக்காலத்தில் ஷீல் (Scheele) என்பவரும் வெகு தூரத்தில் ஸ்விட்ஸர்லாந்தைச் சேர்ந்த கிராமம் ஒன்றில் இக் கல்வித்துறை நுட்பங்களை முயற்சியாய்க் கண்டறிந்துகொண்டு வந்தார். அது லோகப்பிரசித்தமாய்த் தெரியாது. அவர் சில நூதன வாயுபேதங்களைப் பரீக்ஷாபூர்வமாய் நிச்சயித்தார். பரீக்ஷைக்கு அவர் வைத்துவழங்கிய கருவிகள் உதவாதவைகள் - வைத்தியர் மருந்து வைத்திருக்கும் மாதிரியான சில குப்பிகளும், பன்றிச் சவ்வையுமே.

மருந்து கலந்து விற்கும் வைத்தியன் ஒருவனிடத்தில் தொழில் பழகிவரும்பொழுது ஸ்ரீ ஹம்ப்ரி டேவி (Sir Humphry Davy) ஆதியில் ரசாயன பரிசோதனை செய்த கருவிகள் மட்டித்தரமானவைகள் - மடைப்பள்ளியில் வழங்கும் பல வகைப் பாண்டம்-எசமானுடைய ரண வைத்திய சாலையில் உள்ள குப்பி - கின்னமுதலாகக் கைக்கு எட்டிய எவ்வகைத் தளவாடங்களையும் அவர் சமயத்தில் தங் கருமத்திற்கு உதவும் கருவிகளாகப் பிரயோகித்தார். ஒரு முறை பிரான்சிய மரக்கலம் ஒன்று தேசாந்தம் எனப் பெயர் வழங்கும் கரைக்கு எட்டக் கடற்சேதப்பட்டது. அக்கலத்தினின்று தப்பிப் பிழைத்த ரண வைத்தியர் தமது கருவிப்பையைக் கைவிடாது கரை ஏறினார். அப்பையில் மருந்து உட்செலுத்தி மலக்குடலைச் சுத்தி செய்யும் பழைய மாதிரியான கருவி ஒன்றும் இருந்தது. அதை அவர் டேவிக்கு உபகரித்தார். இருவர்க்கும் பரிச்சயம் ஆகி ஐக்கியம் உண்டாயிற்று. மருந்து விற்கும் வைத்தியரிடத்தில் தொழில் பழகிய டேவி அதை எக்களிப்புடன் வாங்கி, தாம் யோசித்து உண்டாக்கிய வாயு யந்திரத்தின் ஒருறுப்பாக

வைத்து வழங்கினார். பின்பு உஷ்ணத்தின் இயற்கையையும் உற்பத்தி மூலங்களையுங்குறித்து அவர் செய்த பரீக்ஷைகளில் * வாயுரேசகியாக உதவிய கருவி அதே.

அவ்வாறே ஸ்ரீ ஹம்ப்ரி டேவிக்குப்பின் ரசாயன பண்டிதர் ஆன பரொடே (Professor Faraday) புஸ்தகம் கட்டும் தொழிலில் அமர்ந்திருக்கும்பொழுது முதல் முதல் † ஆம்பரீய பரீக்ஷைசெய்து பயின்ற கருவி ஒரு பழம் புட்டி. இவர் ரசாயன பண்டிதரானதும் ஸ்ரீ ஹம்ப்ரி டேவியின் இடத்தில்; ரசாயன சாஸ்திரத்தில் இவர் நாட்டம் வைத்ததும் ஸ்ரீ ஹம்ப்ரி டேவியின் பிரசங்கம் கேட்டு—இது சற்று ஆச்சரியம். ராஜ வித்தியாசங்கத்தின் அவயவங்களில் ஒருவராகிய ஒரு துரை ஒரு நாள் பரொடே புஸ்தகம் கட்டிக்கொண்டிருந்த கடைக்குப் போனார். வித்தியா மண்டலம் எனும் புஸ்தகம் கட்டும்படி எவரோ கொடுத்திருந்தார். அதில் "மின்சாரம்" எனும் சொல்லைக் குறித்து எழுதியிருப்பதை பரொடே கருத்தாய் வாசித்துக்கொண்டிருந்தார். அது கண்டு துரை இவ்வாலிபன் யாவன் என்று அங்கிருந்த ஒருவனை அந்தரங்கமாய்க் கேட்க, அவர் இவன் இங்கே புஸ்தகம் கட்டுகிறவர்களில் ஒருவன்; சாஸ்திர விஷய விசாரணையில் பற்றுள்ளவன்; கட்டும்படி வரும் புஸ்தகங்களில் ரசாயன சாஸ்திர முதலியவைகளைக் குறித்துச் சொல்லியவைகளைக் கவனமாய் வாசித்து யோசிப்பது இவனுடைய பிரகிர்தி எனச் சொன்னார். அது கேட்டுச் சந்தோஷித்து துரை வித்தியாசாலையில் பரொடேயைச் சேர்த்துக்கொள்ளும்படி ஒரு கடிதம் எழுதிக் கொடுத்தார். அவர் அதைக் காட்டிச் சேர இடம் பெற்று, ஸ்ரீ ஹம்ப்ரி டேவி ரசாயன சாஸ்திர நுட்பங்களைப்பற்றித் தொடர்ச்சியாகச் செய்த நாலு பிரசங்கத்தைக் கவனமாய்க் கேட்டுக் குறிப்பு எழுதி

---

* வாயுரேசகி—air-pump.

† ஆம்பரீய பரீக்ஷை—experiments in electricity.

ஸ்ரீ ஹம்ப்ரி டேவிக்குக் காட்டினார். அவர் பார்வையிட்டு விஷயம் வழுவற வயணமாய் எழுதியிருப்பது கண்டு பாராட்டினார். அக்குறிப்பு எழுதினவருடைய ஸ்திதியை அவர் வாக்குமூலமாய் அறிந்து ஆச்சரியப்பட்டார். பின்பு பரொடே தாம் இட்ட நுட்பமாய் ரசாயன சாஸ்திரம் கற்றுத் தெளிய நினைத்திருப்பதை அவருக்குச் சொன்னார். முதலில் டேவி புத்தி சொல்லி அவனைத் தடுக்கப் பார்த்தார். வாலிபர் அவர் தடையைக் கேட்கவில்லை. அது கண்டு டேவி அவனைத் தமக்குக் கையுதவியாக வித்தியாசாலையிற் சேர்த்துக்கொண்டார். மருந்து செய்யும் தொழில் பழகத் தொடங்கி விவேக நுணுக்கத்தால் ரசாயன சாஸ்திரம் கற்றுத் தெளிந்து பாண்டித்தியரான டேவியுடைய ஏகாசம், அவருக்குப் பின், புஸ்தகம் கட்டும் தொழில் பழகிக்கொண்டிருந்த புத்தி சாதுரியராகிய பரொடே தோண்மீது படிந்தது.

இருபது வயசில் டேவி ப்ரிஸ்டலில் பெட்டோஸ் பண்டிதருடைய பௌதிக பரீக்ஷண சாலையில் பயிலும்பொழுது குறிப்பேட்டில் எழுதி வைத்த வாக்கியம் அவர் குணம் குறியைத் தவறாது விளக்கும். அவ்வாக்கியம் இது:—"என்னை எவரும் கவனிக்க நான் செல்வனுமல்ல, அதிகாரியுமல்ல, உயர் குடியிற் பிறந்தவனுமல்ல. அல்லாதிருந்தும், பிழைத்திருப்பேனானால், இனிமேல் என் ஊரார் தேசத்தாருக்கும் உற்றார் உறவினர்க்கும் என்னால் ஆகும் சகாயம் மேற்சொல்லிய மூவகை நலம் இருந்துண்டாம் சகாயத்திற்கு இளைக்காதென்று எண்ணுகிறேன்." விவகாரத்திற்கும் பரிசைக்கும் உதவுமாறு நானா ரூபத்திலும் விஷய விமரிசை செய்யப் பக்தி சிரத்தையுடன் புத்தி சக்தி செலுத்தும் சாமர்த்தியம் டேவிக்கும் இருந்தது, பரொடேக்கும் இருந்தது. இவ்வகைப் புத்தி சக்தர் மற்றொன்றும் செய்ய நிமித்தம் இல்லை, முயற்சியாயிருந்து பொறுத்துச் சித்திபெறார்களானால், உத்தம சித்தி உண்டாகாமற்போவது அரிது. கோல்ரிட்ஜ்

டேவியைச் சுட்டிச் சொல்லியது:—“அவர் புத்தி அதிக வலிமையுள்ளது, எந்தத் துறையிலும் தாவி மீறும் தன்மையுள்ளது; அதனால், அவர் விஷயம் எதையும் கிரஹித்துப் பகுத்து முறைமையாய்ச் சித்தாந்த நிர்ணயம் செய்யமாட்டுவார். டேவி மனதில் உள்ள விஷயம் அனைத்திற்கும் ஜீவதத்வம் உண்டு. அடிக்கிழுத் தரையில் பசும்புல் முளைக்கும் வண்ணம் அவர் உள்ளத்தில் சிந்தனைகள் முளைத்து உய்யும்.” கோல்ரிட்ஜுடைய சாமர்த்தியங்களை நினைந்து வியப்புற்ற டேவியும் அவரைச் சுட்டிச் சொல்லியது:—“அவர் உன்னத விவேகி, அகன்ற அறிவினர், பூத தயையுள்ளவர், புத்தி தெளிந்தவர். ஆனாலும் ஸிரமமும், திட்பமும், ஒழுங்கும் அவர்க்கு இல்லை”.

மஹா பிரதிஷ்டைபெற்ற க்யூவியர் (Cuvier) எதையும் மிக நுணுக்கமாகவும், கருத்தாகவும் முயற்சியாகவும் கண்டறியும் சக்தர். அவர் இளைஞராயிருக்கையில், பப்பன் எழுதிய சராசரநூலின் ஒரு காண்டம் தற்செயலாய் அவர் கண்ணுக்கு எதிர்ப்பட்டது. அதைப் பார்வையிடவும் சராசரநூல் கற்கும் ஆசை அவர் நெஞ்சிற் பிறந்து குடிகொண்டது. உடனே அவர் அப் புஸ்தகத்தில் உள்ள படங்களைப் பார்த்தெழுதி அதிற் சொல்லியபடி வர்ணம் கொடுத்தார். பள்ளியிற் படித்துவரும்பொழுது, உபாத்தியாயர் ஒருவர் “லினியஸ் இயற்றிய சராசரநூல்” எனும் புஸ்தகத்தை அவருக்கு வெகுமதியாகக் கொடுத்தார். அன்று தொட்டுப் பத்துப் பன்னிரண்டு வருஷமளவும் சராசரநூலை உணர்த்திய புஸ்தகம் மற்றொன்றும் அவரிடத்தில் இடையாது. பதினெட்டுவயதில் நார்மண்டியில் பீகாம்பு எனும் இடத்திற்குக் கிட்ட ஒரு குடும்பத்தில் அவருக்கு உபாத்தி உத்தியோகம் படிந்தது. அவ்விடம் கடற்கரைக்குச் சமீபமாதலால் அவர் நீர்வாழும் ஜந்துக்களின் அதிசயத்தைக் கண்ணாரக் காணும்படி சந்தர்ப்பித்தது. ஒரு நாள் கடற்கரை மணலில் பராக்காய் உலாவும்பொழுது கணவாய்

மீன் ஒன்றை அலை அடித்துக் கரையில் ஒதுக்கிவிட்டிருந்தது கண்டார். கண்டு நூதனமாயிருந்ததனால் அதை அவர் வீட்டுக்கு எடுத்துக் கொண்டுபோய் உறுப்புறுப்பாகப் பகுத்துப் பார்க்கப் பார்க்க அவர் புத்தி மிருகாங்க ஜந்து ஜாதி இலக்கணத்தில் நன்றாகப் பதிந்தது. அதில் அவர் அதிசய பண்டிதரென்று பெயர் எடுத்தார். அறியாத விஷயங்களைப் பார்த்தறியக் கண்ணுக்கு எதிரில் இறந்திருந்த பிரபஞ்சவிலாசம் எனும் மஹா கிரந்தம் ஒன்றொழிய, வேறு கிரந்தம் அவருக்கு அகப்படவில்லை. அம் மஹா கிரந்ததில் அவர் சித்திரம் கண்டு கண்டு கற்றறிந்த அதிசயம் எல்லாம் அவர் மனதில் எக்காலும் மறவாவண்ணம் பதிந்தன. புஸ்தகங்களில் கற்றும் படங்களிற் கண்டு பயின்றும் ஒருவனுக்கு அத்தனை விற்பத்தி ஒருபொழுதும் உண்டாகாது. அவர் உயிரோடு அகப்பட்ட ஜல சரங்களை அண்டை அயலிற் கண்டெடுத்த * தராசத்துக்களுடன் இணையிட்டுப் பார்த்துக்கொண்டுவந்தார். கண்ட ஜலசரங்களைச் சேதித்துப்பார்த்து அநேக நுட்பங்களை அறிந்து முன் ஏற்பட்டிருந்த ஜீவராசிப் பகுப்பை வழுவறத் திருத்தும் வகைசெய்தார். இந்தப்படி வருந்தி உழைத்து வழி திறக்க மூன்று வருஷகாலம் சென்றது. இக்காலத்தில் அபி தீஸ்ஸியர் (Abbe Teissier) எனும் வித்வானுடன் க்யூவியருக்குப் பரிச்சயம் உண்டாயிற்று. அவ்வித்வான் வாலிபராகிய க்யூவியர் சராசர நூல் விசாரணையில் அரிய முயற்சி செய்துவருவதைப்பற்றி அவரைப் பாராட்டி பரீஸ் நகரத்தில் உள்ள ஜூஸியூ (Jussieu) முதலிய இவடருக்கு கடிதம் எழுதி அனுப்பினார். அனுப்பவே, அவர்கள் க்யூவியருக்குக் கடிதம் பிரயோகித்து, ஐயா! நீர் எழுதிவைத்திருக்கும் பத்திரங்கள் சிலவற்றை இங்குள்ள சராசரநூல் அபிவிர்த்தி சங்கத்தாரிடத்திற்கு அனுப்பும்படி கேட்டுக்கொள்ளுகிறோம் எனத் தெரிவித்தார்கள். அவ்வா

---

* தராசத்து—fossil remains.

பிற அவர் சில பத்திரங்களை அனுப்பினார். அவைகளைப் பார்வையிட்டு அச்சங்கத்தார் அடுத்துச் சிறிது காலத்திற்குள் அவரைப் பூண்டு செடி வைத்து விர்த்திசெய்யும் உத்தியானத்தில் அத்தியக்ஷர் சகாயராக நியமித்தார்கள். நீஸ்வியர் சராசரனால் நட்ட விமரிசை செய்துவரும் கயூவியரைப் பாராட்டி ஐஸ்வியூனிருந்து எழுதிய கடிதத்தில், “வித்தியா சங்கத்தாருக்கு மற்றொரு கல்வித் துறையில் நிபுணராகிய டிலாம்பரைத் (Delambre) தேடிக்கொடுத்தவன் நான் - இது தமக்கு ஞாபகமாயிருக்குமே - இவரும் ஒரு டிலாம்பர் ஆவார்” எனக் குறிப்பித்தார். நீஸ்வியர் உத்தேசவசையாய்ச் சொன்னதற்கு மிஞ்ச நடந்தேறியது லோகப்பிரசித்தம் - நாம் அதை எடுத்துரைக்க நிமித்தம் இல்லை.

ஆகவே, உலகத்தில் ஒருவனை முன்னுக்குக் கொண்டுவருவது முக்கியமாய்க் காகதாளியமாகச் சம்பவிக்கும் சங்கதி அல்ல, கருத்தும் முயற்சிக் கடைப்பிடியுமே. பலம் குன்றிச் சோம்பிச் சித்தநிர்ணயம் இல்லாதிருப்பவர்க்குக் காகதாளியமாகச் சம்பவிப்பனவைகள் எவ்வளவு வாய்த்திருப்பினும் ஒன்றுக்கும் உதவா. அவர்களுக்கு அவற்றின் தாற்பரியம் தோன்றாது. அதனால் அவர்கள் அவைகளைச் சிந்தனையற்று விட்டுவிடுவார்கள். ஆனால், பிரவர்த்திக்கும் எத்தனத்திற்கும் அனுகூலமாய் அடுத்து அடுத்து நேரிடும் சமயத்தை நழுவ விடாமல் ஜாக்கிரதையாய்த் தொடுத்து முயல்வோர் சாதிக்கும் அசாத்தியமானவைகளை நினைக்க ஆச்சரியம் உண்டாகின்றது. வாத் என்பவர் பிழைப்புக்காகக் கணிதக் கருவி செய்துவரும் காலத்தில் ஸ்வித்ஸர்லாந்து தேசியாகிய வர்ணக்காரன் ஒருவனிடத்தில் ஜர்மானிய பாஷையும் கற்றார், பிறர் துணை சிறிதும் இன்றித் தம் முயற்சித் துணையால் ரசாயன சாஸ்திரமும் யாந்திரிக சாஸ்திரமும் பயின்றார். ஸ்டீவின்ஸன் இருப்புப்பாதையில் யந்திர சாரத்தியம் செய்து வரும்பொழுது இராவிடுமுறைகளில் அங்க கணிதமும் அளவு நூலும் கற்றுக்கொண்டார்.

பகற்காலத்தில் போஜனத்திற்குப் போகும்படி வேலை நிறுத்தியிருக்கையில் இரண்டொரு நிமிஷம் அகப்படுமானால், அவர் நிலக்கரி வண்டிப் பலகைகளில் வினா சுண்ணாம்புக்கட்டியால் கணக்குப்போட்டுப் பழகுவார். டால்த்தனுக்கு ஜீவனுள்ளவரையில் முயற்சி சாதகமாயிருந்தது. அவர் சிறுவனாயிருக்கும்பொழுதே முயற்சி செய்யத் தொடங்கினார். கிராமப் பள்ளிக்கூடம் ஒன்று படிப்பிக்கத் தொடங்கிய பொழுது அவருக்குப் பருவம் பன்னிரண்டு. மாரிகாலத்தில் பள்ளிக்கூடம் படிப்பித்து, வேனிற் காலத்தில் தகப்பனாருடைய வயலில் வேலை செய்துவருவார். அவர் தாய் தந்தையர் கிறிஸ்து சமயத்தில் க்வேக்கர் வர்ணத்தார். அவர்களுக்குப் பந்தயம் பிடித்தல் முதலிய காலக்ஷேபங்கள் ஆகா. ஆகாதிருந்தும், அவர் சில வேளை தமக்கும் கூட்டாளிகளுக்கும் முயற்சி கொளுத்தும் பொருட்டுப் பந்தயம் குறித்துப் படிப்பார். ஒரு முறை அவர் கணக்கு ஒன்று சரியாகப் போட்டுக் கெலித்த பந்தயப்பணம் ஒரு மாரிகால முழுதும் ராத்திரியில் விளக்கு எரிக்கத்தக்க மெழுகுவர்த்தி வாங்க உதவிற்று. அவர் பாலியம் தொடங்கி இறக்க இரண்டொரு தினம் இருக்கிறவரையில் விண்வீழ்கொள்ளிகளைக் கருத்தாய்க் கவனித்து எழுதி வைத்துக் கொண்டுவந்தார். அவர் கால வரையறையாய்க் கண்டெழுதி வைத்த விண்வீழ்கொள்ளிகள் இரண்டு லக்ஷத்திற்கு அதிகம்.

கடைப்பிடியுள்ளவர்கள் இவ்வாறு வேலை செய்து ஒழிந்திருக்கும் அற்பகாலத்தில் மிகுபிரயோசனமான காரியங்களைச் சாதிக்க மாட்டுவார்கள். தினந்தினம் ஒரு மணிநேரம் வீண் காரியம் செய்வதை விட்டு எதாயினும் ஒரு வித்தையில் நற்காலக்ஷேபம் செய்துவந்தால், சாமானிய புத்திமான்களும் வல்லவர்கள் ஆவார்கள். இச்சாதனை அவிவேகியைப் பத்து வருஷத்திற்குள் அறிவாளி ஆக்கும். அறியத்தக்க எதாயினும் ஒன்றைக் கற்றறிவது, யாதாயினும் ஒரு நற்